CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

X

க்ருஷ்ண யஜுர்வேத ஸாரம்

ஏழாவது காண்டம்

ஶ்ரீ அ. சுப்பராமன்,
'மஹரிஷி கார்டன்',
18A/9, 5வது கிராஸ் தெரு, சி.ஐ.டி. காலனி,
மயிலாப்பூர், சென்னை - 600004.

2005

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

க்ருஷ்ண யஜுர் வேத ஸாரம்

ஏழாவது காண்டம்

KRISHNA YAJUR VEDA
SEVENTH KANDA

உரையாசிரியர் :

ப்ரம்மஸ்ரீ E. பாலஸுப்ரஹ்மண்ய சாஸ்திரிகள்.
(Retd. Professor, (Meemamsa) Sanskrit College, Madras.

ஸ்ரீ அ. சுப்பராமன்,
'மஹரிஷி கார்டன்',
18A/9, 5வது கிராஸ் தெரு, சி.ஐ.டி. காலனி,
மயிலாப்பூர், சென்னை - 600004.

2005

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இரண்டாம் பதிப்பு
100 பிரதிகள்
பிப்ரவரி 2005

(இலவச வெளியீடு)

ப்ரபு எண்டர்ப்ரைசஸ்,
☎போன் : (044) 25544755 (pp)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஏழாவது காண்டம்

முதல் ப்ரச்னம்

இந்த காண்டத்தில், 1. एकाहः ஒரு ஸுத்யாஹஸ் கொண்ட ஸோமயாகம். 2. अहीनः இரண்டு முதல் பன்னிரண்டு ஸுத்யாஹஸ் கொண்டது. 3. सत्र-यागः பன்னிரண்டு முதல் 1 வருஷம் வரை அதாவது 360 ஸுத்யாஹஸ் கொண்ட ஸோமயாகம் என மூன்று விதமான ஸோம யாகத்தைப் பற்றி விரிவாகக் கூறபட்டுள்ளது. மேலும் அச்வமேத யாகம் சம்பந்தப்பட்ட சில மந்திரங்களும் கூறப் பட்டுள்ளன.

எல்லா ஸோம யாகத்திற்கும் (ज्योतिष्टोमः) ஜ்யோதிஷ்டோம ஸோமயாகம் ப்ரக்ருதி (அடிப் படை) மற்றவை அதனுடைய விக்ருதிகள். ப்ரக்ருதியான ஸோமயாகங்களின் அங்கங்களை "अतिदेश" என்ற முறையில் பெற்று விக்ருதிகள் பூர்த்தி செய்யப்படுகின்றன. விக்ருதி யாகத்தின் விசேஷ அங்கங்களையும் செய்ய வேண்டும். ஸாம கானத்தின் எண்ணிக்கை स्तोमः எனப்படுகிறது. 9, 15, 17, 21 என்ற எண்ணிக்கைகள் ज्योतिः என்ற பெயரால் அழைக்கப்படுகிறது. ஜ்யோதிஸ் என்ற ஸ்தோமத்தையுடைய யாகம் ज्योतिष्टोम सोमयागः எனப்படுகிறது. ஷெ விவரங்கள் இந்த காண்டத் தின் முக்கிய விஷயங்கள்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

अनुवाक: १—प्रजननं ज्योति:

ஜ்யோதிஷ்டோம யாகத்தை விதிப்பதற்காக உதாஹரணம் மூலம் ஜ்யோதிஷ்டோம என்ற சொல்லின் பொருள் விளக்கப்படுகிறது. மக்கள் (புத்ரன்) இல்லாதவன் வாழ்க்கை இருள் சூழ்ந்தது. ஆகையால் மனிதர்கள் புத்ர பாக்யத்தை அவசியம் அடைய வேண்டும் என எண்ணுகிறார்கள். தேவதைகளுள் அக்னி ஜ்யோதிஸ் ஸ்வரூபம். வீட்டிற்கு வெளிச்சம் ஏற்பட தீபம் தேவை. அதுபோல் மற்ற தேவதைகளுக்கு இதரர் ஸஹாயம் தேவை.

அக்னி ஸ்வயம் ப்ரகாசமாக இருப்பதால் இவரை பிரகாசப்படுத்த பிற தேவதைகளின் ஸஹாயம் தேவையில்லை- சந்தஸ்களுள் विराट् சந்தஸ் ஜ்யோதிர் வடிவமானது. இவ்வாறு புத்ர பாக்யம் பெறுதல் அக்னி விராட் சந்தஸ் என இம்மூன்றும் ஸோம யாகத்தில் சேருகின்றன. "अग्निष्टोमेन वै प्रजापतिः प्रजा असृजत" என்ற வேத வாக்கியத்தின் மூலம் ஸோம யாகத்தால் ஸத்ப்ரஜை ஏற்படும் என்பது தெளிவாகிறது. அக்னிஷ்டோம ஸோமயாகத்தில் प्रातःसवनं, माध्यंदिनसवनं, तृतीय सवनं என மூன்று பாகம் உள்ளது. இவைகளில் ஸ்தோத்ரம் செய்ய வேண்டிய ருக்குகள் 190 உள்ளன. அதாவது ப்ராதஸ்ஸவனத்தில் 69 ஸ்தோத்ரீய ருக்குகள், மாத்யந்தின ஸவனத்தில் 38 ருக்குகள். த்ருதீய ஸவனத்தில் 38 ருக்குகள்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

என 190 ருக்குகளில் கானம் செய்யப் படுகின்றன. विराट् என்றால் 10 எனப் பொருள். 190 கான ருக்கு களை 19 தொகுப்பாக ஆக்கினால் 19 விராட்சந்தஸ் கிடைக்கும். கடைசியானது. கான यज्ञायज्ञीयस्तोत्र ரூப மானது அதில் அக்னிதான் துதிக்கப்படுகிறார். ஆகையால் ஸந்ததி லாபம், விராட்சந்தஸ்லாபம், அக்னிலாபம் என மூன்றும் ஸோம யாகத்தில் கிடைப்பதாக வேதம் கூறுகிறது. இதுதான் ஜ்யோதிஸ் எனப்படுகிறது.

ப்ராதஸ் ஸவனம் ப்ராணன், அபானன் இவை களுக்கு சமமாகும். மாத்யந்தின ஸவனம் கண், காதுகளுக்கு ஒப்பாகும். த்ருதீய ஸவனம் வாக், பாதம் போன்றது. 'மூன்று ஸவனங்கள் கொண்ட ஸோமயாகம் உடல் ஊனமில்லாத புருஷனுக்கு சமமாகும்.' 9, 15, 17, 21 என்ற ஜ்யோதிஸ் எனப்படும் ஸ்தோமங்கள் கொண்ட தால் இந்த ஸோம யாகத்திற்கு ज्योतिष्टोम: எனப் பெயர். எல்லா அங்கங்களையும் கொண்ட இந்த ஸோமயாகம் செய்தால் விரும்பிய எல்லா பயன் களையும் அடையலாம்.

முன்பு ப்ருஹ்மா ஸ்ருஷ்டிக்க எண்ணி அக்னிஷ்டோம ஸோமயாகத்தை செய்தார். அதன் மூலம் ப்ரஜைகளை ஸ்ருஷ்டித்து தன் வசப் படுத்திக் கொண்டார். அப்பொழுது (अश्वतर:) கோவேரி கழுதை ப்ருஹ்மாவிடம் அகப்படாமல் தூரத்தில் ஓடி நின்றது. ப்ருஹ்மா அதை ஓடி

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பிடித்து வந்து, அதன் ஸாரத்தை (வீர்யத்தை) எடுத்து கழுதையிடம் வைத்தார். ஆகையால் 'द्विरेतस्' உடையது கழுதை எனப்படுகிறது. 'த்விரேதஸ்' கழுதை, கோவேரி கழுதை இரண்டையும் ப்ரஸவிக்கும். சிலர் அந்த ரேதஸ்ஸை பெண் குதிரையிடம் ப்ருஹ்மா ஒப்படைத்தார் என்றும், ஆகையால் பெண் குதிரை இரு ரேதஸ் கொண்டது என்றும் கூறுகிறார்கள். மற்றும் சிலர் ப்ருஹ்மா அவ்வீர்யத்தை செடிகளில் வைத்தார் என்றும், ஆகையால்தான் செடிகள் எண்ணெய் தடவாமல் பளபளவென்று இருக்கின்றன என்றும் கூறுகின்றனர்.

வேறு சிலர், அவ்வீர்யத்தை மனிதர்களிடத்தில் வைத்ததால்தான் இரட்டைக் குழந்தை பிறக்கிறது என்கிறார்கள். கோவேரிகழுதை வீர்யத்தை இழந்ததால் ஸாரமற்ற வஸ்துபோல் யாகத்திற்கு தகுதியற்றது. பசுவாக வைத்து யாகம் செய்ய முடியாது. ஆனால் सर्ववेदस தக்ஷிணையுள்ள யாகத்திலும் ஸஹஸ்ர தக்ஷிணையுள்ள யாகத்திலும் கோவேரி கழுதையை தக்ஷிணையாக கொடுக்க வேண்டும். இதையறிந்து ஸோமயாகம் செய்பவன் புத்திரனில்லாதவன் புத்திர பாக்யத்தை அடைவான். புத்ரனுள்ளவன், அவர்களை ஸ்வாதீனமாக்கிக் கொள்ளுவான். தேவர்களுள் மூத்தவரான ப்ருஹ்மா முதலில் செய்ததால் இதற்கு ज्येष्ठ यज्ञः, प्रथमयज्ञः (प्रकृतियज्ञः) முதல் யக்ஞம் எனப்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பெயர் ஏற்பட்டது. उक्थ्यः முதலிய யாகங்கள் இதனுடைய விக்ருதி யாகங்களாகும். கடைசி ஸ்தோத்ரம் (यज्ञायज्ञीयं) அக்னியைக் குறிப்பிடுவ தால் இதற்கு 'अग्निष्टोम सोम यागः' எனப் பெயர் வந்தது.

ஸத்ய ஸங்கல்பரான ப்ருஹ்மா முதலில் ஸ்ருஷ்டிக்க நினைத்து அக்னிஷ்டோம யாகத்தை செய்து ப்ரஜைகளை ஸ்ருஷ்டித்தார். ஸ்ருஷ்டியின் முறை கூறப்படுகிறது. முதலில் ப்ரஹ்மா தன் முகத்திலிருந்து "त्रिवृत् स्तोमः" (கானத்தின் எண்ணிக்கை) என்பதை ஸ்ருஷ்டித்தார். அதனைத் தொடர்ந்து தேவர்களுள் அக்னியையும், गायत्री சந்தஸ்ஸையும், 'रथंतरसाम' என்ற ஸாம கானத்தையும், மனிதர்களுள் ப்ராஹ்மணனையும் ஸ்ருஷ்டி செய்தார். பசுக்களுள் வெள்ளாட்டையும் ஸ்ருஷ்டித்தார். இவைகள் ப்ரஹ்மாவின் முகத்திலிருந்து ஏற்பட்டதால், முக்கியமானவை எனப்படுகிறது. பிறகு மார்பிலிருந்தும், கைகளிலிருந்தும் (बाहुभ्यां) ப்ரஹ்மா, पञ्चदशास्तोमः என்பதையும், அதைப் பின் பற்றி இந்திரனையும், त्रिष्टुप् சந்தஸ்ஸையும், बृहत्साम என்ற கானத்தையும், க்ஷத்ரியர்களையும், செம்மறியாட்டையும் ஸ்ருஷ்டி செய்தார். பலமுள்ள பாகத்திலிருந்து உண்டானதால், இந்திரன் முதலியவர்கள் பலமுள்ளவர்களாக ஆனார்கள்.

ப்ருஹ்மா தனது வயிற்றிலிருந்து सप्तदशस्तोमः என்பதையும், அதை பின்பற்றி விச்வேதேவர்களையும், जगती சந்தஸ்ஸையும், वैरूपं என்ற ஸாம கானத்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

த்தையும், மனிதர்களுள் வைச்ய ஜாதியையும், பசு மாட்டையும் ஸ்ருஷ்டித்தார். இவைகள் வயிற்றிலிருந்து உண்டானதால், அனுபவிக்கக் கூடிய பொருள்களாக ஆயின. விச்வேதேவர்கள் நிறைய இருப்பதால், அவர்களைப் பின்பற்றி உண்டான வைச்யர்களும், (வணிகர்கள்) உலகில் நிறைய உள்ளனர் என்று வேதம் கூறுகிறது.

பிறகு ப்ருஹ்மா பாதத்திலிருந்து 'एकविंशस्तोमः' என்ற ஸ்தோமத்தையும், அதையனுசரித்து अनुष्टुप् சந்தஸ்ஸையும், वैराजसाम என்ற கானத்தையும், மனிதர்களுள் சூத்ரர்களையும், குதிரையையும் ஸ்ருஷ்டித்தார். இவ் இருவரும் மேலே கூறிய அந்தணர் முதலிய மூன்று பேருக்கும் சேவகர்களாக இருப்பவர்கள். ஆகையால் சூத்ரன் யக்ஞத்தில் உபயோகமில்லாதவன். त्रिवृत् பஞ்ச ப்ராணனுக்கு சமம். पञ्चदशस्तोमः பக்ஷத்தின் நாட்களுக்கு சமம். सप्तदशस्तोमः, आश्रावय முதலியவைகளுக்கு சமம். एकविंशस्तोमः என்பது ஆதித்யனுக்கு சமம். இவைகளின் மஹிமையை அறிந்து யாகம் செய்பவன், அக்னிஷ்டோம யாகம் செய்ய தகுதியுள்ளவன் என்று வேதம் கூறுகிறது.

अनुवाकः २—प्रातःसवने

இதில் स्तोमங்களின் பெருமை கூறப்படுகிறது. ப்ரஹ்மா அக்னிஷ்டோம யாகம் செய்யும் பொழுது त्रिवृत्स्तोमத்தை அனுஷ்டித்து ப்ரஹ்ம

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வர்ச்சஸ்ஸை அடைந்தார். மேலும் पञ्चदशस्तोमத்தை நினைத்து அதை அனுஷ்டித்தார். இவ்வாறே सप्तदशस्तोम:, एकविंशस्तोम: என்பதையும் நினைத்து பார்த்து அனுஷ்டானம் செய்தார். 15, 17, 21 स्तोमத்தினால் முறையே பலம், வீர்யம், ப்ரஜோத்பாதன சக்தி, ப்ரதிஷ்டை முதலியவற்றை அடைந்து स्तोमத்தின் எண்ணிக்கைக்கு சமமாக ஆசைகளும், அவைகளை அனுபவிக்க அவ்வளவு சரீரமும், பிறகு அவ்வளவு பலன்களின் அனுபவமும் ஏற்படுகின்றன. ஆகையால் இந்த அக்னிஷ்டோம ஸோம யாகம் சிறந்தது என வேதம் கூறுகிறது.

अनुवाक: ३—ब्रह्मवादिनोवदन्ति

இதில் (अतिरात्रयाग:) அதிராத்ரம் என்ற ஸோம யாகம் விதிக்கப்படுகிறது. ப்ரஹ்மவாதிகள் கூறுகிறார்கள், அக்னிஷ்டோம ஸோம யாகம் செய்தவன் (सर्वस्तोम:) எல்லா स्तोमங்கள் கொண்ட அதிராத்ரயாகம் செய்ய வேண்டும் என்று. அதில் ப்ராணனுக்கு சமமான त्रिवृत्स्तोम: 15, 17, 21, போன்ற स्तोमங்கள் இருப்பதால், ப்ராணன் வீர்யம், ஸத்ஸந்ததி, ப்ரதிஷ்டை முதலியன கிடைக்கும். ஷ ஸ்தோமங்கள் இல்லாவிட்டால் ஷ பலன்கள் கிடைக்காது. மேலும் 27 स्तोमम् இருப்பதால் ருது பலன்களும் நக்ஷத்ரேஷ்டியின் பலனும் கிடைக்கும், 33 स्तोमम् இருப்பதால், 33 தேவதைகளின் அனுக்ரஹமும் கிடைக்கும். ஆகையால்தான்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அதிராத்ரயாகம் सर्वस्तोम யாகம் எனப்படுகிறது. ஒரு வகையான அதிராத்ரம், அதில் त्रिवृत्स्तोम: ஸந்தி ஸ்தோத்ரத்தில் உள்ளது. இந்த யாகத்தை அனுஷ்டிப்பவன், மேலானபலனை அடைவான். இவ்வாறு அதிராத்ர யாகம் சிறந்தது.

अनुवाक: ४—अङ्गिरसोवै

ஒரு ஸுத்யாஹஸ் கொண்ட யாகங்களின் ப்ரக்ருதி யாகம் முன்பு கூறப்பட்டது. ஒரு ஸுத் யாஹஸ் உள்ள விக்ருதி யாகங்களையும் மேற் கூறிய யாகம் போல் செய்யவேண்டும். இந்த அனுவாகத்தில் இரண்டு ஸுத்யாஹஸ் கொண்ட द्विरात्र: எனப்படும் யாகம் சொல்லப்படுகிறது. இது 12 ஸுத்யைகள் கொண்ட अहीन: द्वादशरात्र: அஹீன த்வாதச ராத்ரம் என்ற யாகத்தின் விக்ருதி. அதாவது அஹீனத்திற்காக சொல்லப்பட்ட விசேஷ தர்மங்கள் இதில் அனுஷ்டிக்கப்பட வேண்டும். அக்னிஷ்டோம ஸோமயாகத்தில் (उपसद:) உபஸத் என்ற கர்மாவை மூன்று நாள் இருவேளையிலும் செய்யவேண்டும். அஹீனம், ஸத்ரம் போன்ற யாகங்களில் உபஸத் என்ற யாகம் 12 நாள் செய்ய வேண்டும். இங்கு கூறப்படும் द्विरात्रயாகம் அஹீனத்தின் விக்ருதியாகும். இதே போல், 3 ஸுத்யை கொண்ட யாகம் त्रिरात्रयाग: எனப்படும், 4, 5, 6, 7, 8, 9, 10, 11, 12 வரை ஸுத்யைகள் கொண்ட யாகங்கள் தனித்தனியாக 11 யாகங்கள் உண்டு. இரண்டு முதல், 11 வரை ஸுத்யை

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

யுடைய யாகங்கள், 12 நாள் ஸுத்யை உடைய அஹீனயாகத்தின் விக்ருதியாகும். முதல் ப்ரச்னத்தில் द्विरात्रः त्रिरात्रः, चतूरात्रः, पञ्चरात्रः என்ற நான்கு அஹீன விக்ருதி யாகங்கள் கூறப்பட்டுள்ளன. द्विरात्र யாகம் நான்கு வகைப்படும். அதில் ஒன்றான அங்கிரஸம் த்விராத்ரம் இந்த அனுவாகத்தில் கூறப்படுகிறது. இதை உபாக்யானம் மூலம் எடுத்துச் சொல்கிறது. வேதம் அங்கிரஸர்கள் என்ற ரிஷிகள் ஸத்ரயாகத்தை அனுஷ்டித்து ஸ்வர்கத்தை யடைந்தனர். அவர்களுள் ஹவிஷ்மான் ஹவிஷ்க்ருத் என்பவர்கள் ஸ்வர்கத்தை அடைய முடியவில்லை. ஆகையால் அவ்விருவரும் ஸ்வர்கத்தை அடைய விரும்பி த்விராத்ரம் என்ற யாகத்தை அதற்கு ஸாதனமாக எண்ணி அதை அனுஷ்டித்து ஸ்வர்கத்தையடைந்தனர்.

ஆகையால் மற்றவர்களும் ஸ்வர்கத்தையடைய द्विरात्रः என்ற யாகத்தைச் செய்யவும். இரண்டு ஸுத்யாஹஸ் கொண்டது இந்த யாகம். முதல் நாள் அக்னிஷ்டோம ஸம்ஸ்தாக யாகம் செய்யவும். இரண்டாவது நாள் அதிராத்ர ஸம்ஸ்தாக யாகம் செய்ய வேண்டியது. அக்னிஷ்டோம யாகத்தினால் தேஜஸ்ஸை அடைவான். ஸர்வஸ்தோமத்தோடு கூடிய அதிராத்ர யாகத்தினால் கிடைக்காத பொருள் எல்லாம் கிடைக்கும். அது தன் வசத்திலேயே இருக்கும். முதல் ஸுத்யாஹஸ் தினத்தன்று காயத்ரஸாம, ரதந்தப்ருஷ்டம், வைகானஸ ஸாம இவைகளை கானம் செய்யவும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இரண்டாவது ஸு த்யா தினத்தன்று த்ருஷ்டுப் சந்தஸ் ருக்கில் ஸாமகானம் ப்ருஹத் ப்ருஷ்ட ஸ்தோத்ரம், கௌரிவீத ஸாமாவை ஷோடசி ஸ்தோத்ரத்தில் கானம் செய்யவேண்டும். முதல் ஸு த்யாஹஸ் அமாவாஸ்யை அன்றும், இரண்டாவது ஸு த்யாஹஸ் மறுநாள் சுக்லபக்ஷ ப்ரதமையிலும், ஸாமநிதனத்தில் முதல் "ஹவிஷ்மத்" என்ற சப்தமும், இரண்டாவது நாள் "ஹவிஷ்க்ருத்" என்ற பதமும் உபயோகிக்கவேண்டும். இதன் மூலம் யஜமானன் ப்ரதிஷ்டை அடைகிறான்.

अनुवाकः ५—आपोवा इदं

இதில் "त्रिरात्रः" என்ற யாகம் விதிக்கப்படுகிறது. இது உபாக்யான மூலம் விளக்கப்படுகிறது. பூமியின் உத்பத்திக்கு முன்பு எங்கும் ஜலமாக இருந்தது. ப்ரஹ்மா அந்த ஜலத்தினுள் வாயுரூபத்தில் ஸஞ்சரித்து அங்கிருந்த பூமி பாகத்தை கண்டார். உடனே தான் வராஹ ரூபம் எடுத்துக் கொண்டு கோரப் பற்களின் மூலம் பூமியை மேலே கொண்டு வந்தார். பிறகு தான் விச்வகர்மாவின் உருவம் எத்துக் கொண்டு பூமியின் மீதிருந்த த்ரவத்தை துடைத்து, தட்டையாக தட்டினார். தட்டையாக ஆனதால் தான் இப்பூமி "ப்ருத்வீ" என அழைக்கப்படுகிறது. ப்ரஹ்மாதான் அதில் அமர்ந்தார். பிறகு தபோ பலத்தினால் வஸுக்கள், ருத்ரர்கள்,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஆதித்யர்கள் என மூன்று தேவகணங்களை ஸ்ருஷ்டித்தார். அம்மூவரும் ப்ரஹ்மாவிடம் ப்ரஜா ஸ்ருஷ்டி செய்யும் முறையை சொல்லும்படி கேட்டனர். ப்ரஹ்மா, அக்னி பகவானை அவர்களுக்கு அளித்து அதில் ஹோமம் செய்யுங்கள், அந்த தபஸ் சக்தியால் ப்ரஜைகளை ஸ்ருஷ்டிக்கலாம் என்றார். ஒரு வருஷம் அம்மூவரும் அக்னியை உபாஸித்து கடைசியில் ஒரு பசு மாட்டை ஸ்ருஷ்டித்தனர்.

ப்ருஹ்மா அதை ரக்ஷிக்கும்படி அம்மூவரிடமும் கூறினார். மூன்று பேராலும் ரக்ஷிக்கப்பட்ட பசு ஒவ்வொருவருக்கும் 333 பசுக்களை ஈன்று அளித்தது, மொத்தம் 999 பசுக்கள் ஸ்ருஷ்டிக்கப்பட்டன, தாய் பசு 1000வது பசுவாக ஆயிற்று. பிறகு வஸ்வாதிகளால் பிரார்த்திக்கப்பட்ட ப்ரஹ்மா, வஸுக்கள் யஜமானர் அக்னிஷ்டோம ஸோமயாகம், ருத்ரர்கள் யஜமானர் உக்த்ய ஸோம யாகம், ஆதித்யர்கள் யஜமானர் அதிராத்ர ஸோம யாகம் என மூன்று ஸுத்யாக யாகத்தை செய்வித்தார். அம்மூவரும் தங்கள் 333 பசுக்களையும் தக்ஷிணையாக அளித்தனர். இதற்கு ஸஹஸ்ர தக்ஷிணாக யாகம் எனப் பெயர். மூன்று பேரும் முறையே மூவ்வுலகத்தையும் ஜயித்தனர். அந்த ரிக்ஷிலோகம உறுதியாக இல்லாததால் ருத்ரர்கள் கோபமடைந்து ப்ராணிகளை ஹிம்ஸிக்கத் தொடங்கினர். ஆகையால் இரண்டாவது ஸுத்யா

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

தினத்தன்று ஹோதா த்ருஷ்டுப் சந்தஸ்கமான ஆஜ்யசஸ்திரம், "ஸம்யான" ஸூக்தம் ஷோடசி சஸ்திரம் இவைகளை சொல்ல வேண்டும்.

மூவ்வுலகையும் ஜயிக்க மூன்று ஸுத்யாஹஸ் கொண்ட த்ரிராத்ரயாக: செய்ய வேண்டும். முதல் நாள் அக்னிஷ்டோம ஸோமயாகம், இரண்டாவது நாள் உக்த்ய ஸோமயாகம், மூன்றாவது நாள் அதிராத்ர ஸோமயாகம் என்ற முறையில் த்ரிராத்ர யாகத்தை அனுஷ்டிக்க வேண்டும். ஒவ்வொரு ஸுத்யா தினத்தன்றும் 333 பசுக்கள் தக்ஷிணை கொடுக்க வேண்டும். பசுக்களை தக்ஷிணையாக கொடுக்கும் பொழுது பத்து பத்து மாடுகளாக ஓட்டி வரவேண்டும். கடைசி 10 மாட்டுடன் 3 மாடுகள் சேர்ந்து அழைத்து வரப்படவேண்டும். 1000 பசுக்களில் தாய்ப் பசு கடைசியில் மீதியாக இருக்கிறது. அதைப்பற்றி இந்திரனும் விஷ்ணுவும் பரஸ்பரம் கலவரம் செய்தனர், தனக்குத்தான் அந்த பசு வேண்டும் என்று. முடிவில் இந்திரனுக்கு இரண்டு பாகமும், விஷ்ணுவுக்கு ஒரு பாகமும் சேரவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

"उभाजिग्यथु:" என்ற ருக்கை அச்சாவாகன் (अच्छावाक:) என்பவர் சொல்லவேண்டும். யாகத்தில் அதிகமான வஸ்துக்களை ஹோதா அடைய வேண்டும். ஏனெனில் அவர் கிடைக்காத எல்லா வஸ்துக்களையும் கொடுக்க வல்லவர், 1000வது பசுவை ஹோதாவுக்கு கொடுக்கவேண்டும். சிலர் சொல்கிறார்கள், இந்தப் பசு அதிக வீர்யமுள்ளது என்று.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஆகையால் ஹோதா என்ற ருத்விக்குக்கு அளிக்க வேண்டும். மற்றும் சிலர் ஸதஸ்ஸில் உள்ள எல்லோருக்கும் கொடுக்க வேண்டும் என்கிறார்கள். சிலர் அதை ஸ்வாதீனமாக சஞ்சரிக்கும்படி விட்டு விடவேண்டும், அல்லது ப்ரஹ்மாவுக்கும் ஆக்னீத்ரனுக்கும் கொடுக்க வேண்டும் என்று. வேறு சிலர் 1000வது பசுவை தானம் செய்யக் கூடாது, என்றும் சொல்லுகிறார்கள். இதற்கு பதிலாக மங்களமான, நிறைய பால் கொடுக்கக் கூடியதும் விசித்ர வர்ணமுள்ளதுமான பசுவை தானம் செய்யவேண்டும். அல்லது கறுப்பும், வெண்மை நிறமுள்ளதும், இருபக்கங்களிலும் வெள்ளைமயிர் உடையதுமான பசுவை கொடுக்க வேண்டும். இந்த த்ரிராத்ர யாகத்தில் மூன்று நாளும் சேர்ந்து 1000 ஸ்தோத்ரீய ருக்குகள், தக்ஷிணையாக 1000 பசுக்கள். கொடுப்பது ஸ்வர்கம், பூலோக ஸஹஸ்ரத்திற்கு சமம். அப்படிப்பட்ட ஸ்வர்க்கத்தை ஜயிக்க இந்த யாகம் சக்தியுள்ளது.

अनुवाक: ६— सोमो वै

முந்திய அனுவாகத்தில் கூறப்பட்ட தாய் பசுவான 1000வது பசுவின் பெருமை இதில் கூறப்படுகிறது. முன்பு ஒரு சமயம் ஸோமன் 1000 பசுக்களை அடைந்தான். இந்திரனும் அவனை தொடர்ந்து அதே 1000 பசுக்களை அடைந்தான். பிறகு யமன் அதில் பாகம் வேண்டும் என வேண்டினான். அவர்கள் சரி என்று சொன்னார்கள்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

யமன் பசுக்களை பரீக்ஷித்து பார்த்து 1000வது பசு வீர்யமுள்ளதாகக் கண்டு அந்த பசு மாத்திரம் தனக்கு போதும் என்று கூறினான். ஸோமனும் இந்திரனும் அந்த பசு வீர்யமுள்ளதாக இருப்பதைப் பார்த்து மூன்று பேரும் அதன் ஒவ்வொரு அம்சம் (பாகம்) பெற்றுக் கொள்வோம் என்று தீர்மானித்து அவ்வாறே செய்தனர்.

அம்முறை பின் வருமாறு:—மூன்று பேரும் சேர்ந்து அந்த உத்தமமான பசுவை ஜலத்தில் ப்ரவேசிக்கச் செய்து ஸோமனுக்கு தகுந்த ரூபத்துடன் வெளிவருவாயாக என்று கூறினர். ஜலத்தில் ப்ரவேசித்த பசு சிவந்த உடலுடன், மஞ்சள் நிறமான கண்களுடன் 1 வயது நிரம்பிய பசுவாக 333 பசுக்கள் புடைசூழ வெளியே வந்தது. ஆகையால்தான் ஷி நிறமுள்ள 1 வயது பசுவால் ஸோமலதையை வாங்க வேண்டும். ஒரு பசுவால் வாங்கினாலேயே 333 பசுக்களாலும் வாங்கியது போலாகும். இப்படிச் செய்தால் சரியான முறையில் ஸோமலதை வாங்கியதாக ஆகும். மறுபடியும் அப்பசுவை தண்ணீருக்குள் ப்ரவேசிக்கச் செய்து, இந்திரனுக்கு தகுந்த ரூபத்துடன் வருமாறு கூறினர். நல்ல அழகிய கொம்பும் வாலும் கூடியதாகவும், 4 வயதுள்ளதாகவும் தர்சனத்தினாலேயே மனதின் வருத்தத்தை அகற்ற வல்லதுமாக 333 பசுக்களின் ரூப வடிவத்தில் வெளி வந்தது.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இப்படிப்பட்ட பசுவை கொடுத்தால் 333 பசுக்கள் கொடுத்தது போலாகும். பிறகு அதை ஜலத்தில் ப்ரவேசிக்கச் செய்து யமனுக்கு தகுந்த ரூபத்துடன் வருமாறு கூறினர். அது கிழடாகவும் கோபமுள்ளதாகவும் குரூபமாயும் அனுஸ்தரணியாகவும் 333 பசுக்களுடன் வெளி வந்தது. இறந்த புருஷன்மீது கிழட்டுப் பசுவை கொன்று ஒவ்வொரு அவ்யவமாக் ச்வத்தின் உறுப்புக்களின் மீது வைத்தால் மேல் உலகில் 333 பசுக்களை அடைவான்.

ஸோமாதிகளுக்கு மூன்று ரூபத்துடன் வெளி வந்த உத்தமமான பசு ஸாக்ஷாத் வாக் தேவதை யாகும். ஆகையால் ஸஹஸ்ர தக்ஷிணையாக ஸோம யாகத்தில் வாக் தேவதா ரூபத்தை அடையத் தகுந்த உயர்ந்த பசு கொடுக்கப்பட வேண்டும். இந்த ஒன்ருலேயே ஸஹஸ்ர ஸ்வரூபமான பசு கொடுக்கப்பட்டதாக ஆகும். இச்சிறந்த பசுவை ப்ரதிக்ரஹம் செய்தால் 1000 பசுக்களைப் ப்ரதி க்ரஹம் செய்ததற்கு சமமாகும், ஆகையால் அப் பசுவை ப்ரதிக்ரஹம் செய்யக் கூடாது. ச்ரேஷ்ட பசுவைப் பார்த்து इयंवर: என்று சொல்லி மற்ற பசுக்களைப் பார்த்து इयं मम என்று சொல்லி ப்ரதிக் ரஹம் செய்தால் முன் சொன்ன ப்ரதிக்ரஹ தோஷம் ஏற்படாது. இந்த 1000வது பசு இரு பக்கவாட்டிலும் வெள்ளைக் கோடுள்ளதாக இருக்க வேண்டும். அல்லது ஒரு புறமாவது வெள்ளைக்கோடு இருக்க வேண்டும். அல்லது

கி—2

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இதற்குப் பதிலாக அழகிய நிறைய பால் கறக்கக் கூடிய பசுவை கொடுக்கலாம். அந்த பசுவை த்ரோணகலச பாத்திரத்தை முகரச் செய்ய வேண்டும். இதனால் யஜமானன் ப்ரஜாவானாகவும், பசுமானாகவும், தனவானாகவும் ஆவான். பிறகு அடுத்த மந்திரத்தால் ஹோமம் செய்யவும். ஏதே முதலியவைகளை அப்பசுவின் காதில் சொல்லவும். யஜமானனை தேவர்களிடத்தில் புண்யசாலியாக கூறு. தேவர்களும் இதன் மூலம் யஜமானனை புண்யசாலியாக அறிகிறார்கள்.

अनुवाकः ७— सहस्रतम्या वै

ஷி பசுவின் தானம் செய்யும் முறை சொல்லப் படுகிறது. யஜமான்னன் सा मा सुवर् முதலிய மந்திரங்களைச் சொல்லவும். இதனால் ஸ்வர்காதிகளை அடைகிறான். இந்தப் பசுவை ஆக்னீத்ரன், ப்ரஹ்மா, ஹோதா, உத்காதா, அத்வர்யு இந்த ஐந்து ருத்விக்குகளுள் யாராவது ஒருவருக்கு தானம் கொடுக்கவும். இந்த ஒரு பசுதானம் 1000 பசுக்கள் தானம் செய்ததாக ஆகிறது. இந்தப் பசுவை தானம் வாங்கினால் 1000 பசுக்கள் தானம் வாங்கிய ப்ரதிக்ரஹ தோஷம் உண்டு. அவித்வானுக்கு இந்த தோஷம் ஏற்படும். வித்வானாக இருப்பவன் "एकासि न सहस्र......मा सहस्रमिति" என்ற மந்திரத்தை சொல்லி ப்ரதிக்ரஹம் செய்ய வேண்டும். அப்பொழுது, ஒரு பசு ப்ரதிக்ரஹ தோஷம்தான் ஏற்படும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ப்ரதிக்ரஹம் வாங்கியவன் ,स्योनासि என்ற மந்திரத்தைச் சொல்லவும். இந்தப் பசுவை மேற்கு முகமாக விடவேண்டும். ஸ்வர்கப்ராப்தி பலன் கிடைக்கும். இதை 100 கிராம் தங்கத்தை கொடுத்து ருத்விக்குகளிடமிருந்து வாங்கி யஜமானனுடைய மாட்டுக் கொட்டிலில் விட்டுவிட வேண்டும். இது சீக்கிரமே 1000 பசுக்களை ஈன்றெடுக்கும். தானம் கொடுக்கும்பொழுது 999 பசுக்களை முதலில் தானம் செய்து 1000வது பசுவை கடைசியில் தானம் செய்ய வேண்டும். ஸ்வர்க்கத்திற்கு இது யஜமானனுடன் முதலில் செல்லும்.

अनुवाकः ८—अत्रिरददात्

8, 9, அனுவாகங்களில் நான்கு ஸுத்யாஹஸ் கொண்ட चतूरात्रः என்ற யாகம் சொல்லப் படுகிறது. புத்ரனை விரும்பிய और्वः என்ற ரிஷிக்கு அத்ரி முனிவர் தனது புத்ரனை தானம் செய்தார். பிறகு தான் வீர்யமிழந்து உடல் வலிமையிழந்து எல்லா சக்தியை இழந்ததாக கருதினார். அப்பொழுது இந்த चतूरात्र யாகத்தை கண்டு பிடித்து அனுஷ்டித்தார். பிறகு அவருக்கு நல்ல ஹோதா, நல்ல உத்காதா, நல்ல அத்வர்யு, நல்ல ஸதஸ்யன் என நான்கு புத்ரமணிகள் பிறந்தனர். இந்த யாகத்தை செய்பவனுக்கு மேற் சொன்ன நான்கு ச்ரேஷ்ட புத்ரர்கள் பிறப்பார்கள். பவமான ஸ்தோத்ரங்களை 24 (ஸ்தோமம்)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கானமுள்ளதாகச் செய்ய வேண்டும். மற்ற ஸ்தோத்ரங்களில் 24க்கு மேற்பட்ட கானம் செய்ய வேண்டும். இதனுல் ச்ரத்தா மூர்த்தியான அத்ரி முனிவருக்கு தேஜஸ், (சரீரகாந்தி) இந்திரியசக்தி, ப்ரஹ்மவர்சஸ் (வேதவித்யா லாபம்) அன்னுதயசக்தி (மிஷ்டான்னம்) ஜீரணிக்கும் சக்தி என நான்கு பலன்கள் ஏற்பட்டன. அத்துடன் லக்ஷ்மீ கடாக்ஷமும் ஏற்பட்டது. நான்கு ஸுத்யா யாகத்திற்கும் ஷி நான்கு பலன்கள் ஏற்படும்.

अनुवाकः ९—जमदग्निः

ஜமதக்னி முனிவர் புஷ்டியை அடைய விரும்பி चतूरात्र யாகம் செய்தார். இதற்கு जामदग्न्य चतूरात्र யாகம் எனப் பெயர். ப்ரஜைகள், பசுக்கள், செல்வம் போன்ற எல்லாவிதமான இவ்வுலக இன்ப ஸாதனங்கள் புஷ்டியாக கிடைக்கும். அந்த ஜமதக்னீ கோத்ரத்தில் பிறந்தவர்கள் ஏழையர்க இருப்பதில்லை. எப்பொழுதாவது ஒரு தலை முறை ஏழையாக இருக்கலாம். சேர்ந்தாற்போல் இரு தலைமுறை ஏழையர்க இருக்கமாட்டார்கள். இந்த ஸோமயாகத்தில் உள்ள உபஸத்யாகம் 12லும் ஆஜ்யத்திற்கு பதிலாக புரோடாசம் ஹவிஸ்ஸாக சொல்லப்பட்டுள்ளது. இதை யறிந்து அனுஷ்டானம் செய்தால் பசு ஸம்ருத்தியும் அன்ன ஸம்ருத்தியும் ஏற்படும்.

अनुवाकः १०—संवत्सरोवा इदं

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இதில் पञ्चरात्र யாகம் சொல்லப்படுகிறது. 5 ஸுத்யாஹஸ் உள்ளது இந்த யாகம். வஸந்தம் முதலிய ருதுக்களின் பிரிவின்றி வருஷம் என்ற ஒரேகால ஸ்வரூபமாக ப்ரஹ்மா இருந்தார். அவர் ருதுக்களை ஸ்ருஷ்டிக்க எண்ணி पञ्चरात्र யாகத்தை செய்தார். பிறகு ருதுக்களை ஸ்ருஷ்டித்தார். இதை யறிந்து இந்த யாகத்தை செய்தால் ஸத்ப்ரஜையை அடைவான். ருதுக்கள் வஸந்தம் முதலிய பிரிவின்றி முதலில் இருந்தன. ருதுதேவர்கள் पञ्चरात्र யாகத்தை அனுஷ்டித்து அந்தந்த ருது ஸ்வரூபத்தை அடைந்தனர். இதை யறிந்து செய்தால் சத்ருவின் நெருக்கம் ஏற்படாமல் பிரிவு ஏற்படும். ஸார்வஸேனர், பசு பலனை யடைய இ்ஷ யாகம் செய்தார். ஆகையால் இதற்கு பசுக்கள் ஸம்ருத்தியும் பலனாகும். वत्सः என்பவர் நாவன்மையை பேசும் திறமை அடைய இ்ஷ யாகம் செய்து பேசும் திறமையைப் பெற்றார்.

இந்த யாகத்திற்கு பேசும் திறமையும் பலனாக கிடைக்கும். 5 நாளும் 5 ருதுக்கள் போன்றது. त्रिवृत्स्तोमक அக்னிஷ்டோம யாகம் முதல் நாள் செய்யவேண்டும். पञ्चदशस्तोमक உக்த்ய யாகம் இரண்டாவது நாள் செய்யவும், सप्तदशस्तोमक உக்த்ய யாகம் மூன்றாவது நாள் செய்யவும், महाव्रत தர்மத்துடன் அக்னிஷ்டோம யாகம் நான்காவது நாள் செய்யவும், ஐந்தாவது நாள் விச்வஜித் யாகத்தை அதிராத்ர விக்ருதியாக ஆறு ப்ருஷ்ட ஸ்தோத்ரங்களுடன் செய்யவும், இவைகளுக்கு

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

முறையே 1 தேஜஸ். 2 இந்திரிய பலம். 3 அன்ன ஸம்ருத்தி. 4 நல்ல ப்ரஜையை யடைதல், எல்லா இஷ்டங்களும் பலன்களாக கிடைக்கும்.

अनुवाक: ११—देवस्यत्वा

இது முதல் ப்ரச்னம் முடியும் வரை அச்வ மேத யாக சம்பந்தப்பட்ட மந்திரங்கள் கூறப்பட்டுள்ளன. देवस्यत्वा इमाम् என்ற மந்திரங்களால் குதிரையின் கடிவாளத்தை பிடித்துக் கொள்ள வேண்டும். अभिधा असि...भूतेभ्यः வரை மந்திரத்தை சொல்லி குதிரையை கட்டவேண்டும், மந்திரத்தின் கருத்து ஹே குதிரையே, உலகரூபமாக இருக்கிறாய். ஆஹவனீ யாக்னியில் ஹோமம் செய்யப்பட்ட நீ பூமியில் அரசனாகவும், அந்தரிக்ஷத்தில் க்ரஹநக்ஷத்ரங்களை கட்டுப்படுத்தபவனாகவும், மேல் உலகத்தை நீ ஹவிஸ் என்ற ஆஹாரமாகி தாங்குபவனாகவும் இருக்கிறாய். அப்படிப்பட்ட உன்னை பயிர் செழிப்பதற்காகவும் க்ஷேமத்திற்காகவும், செல்வத்திற்காகவும், புஷ்டிக்காகவும் கட்டுகிறேன்.

अनुवाक: १२—विभूर्मात्रा

विभूर्मात्रा...पित्वान्विहि வரை யஜமானன் குதிரையின் காதில் ஜபிக்கவேண்டும். இதில் குதிரையின் பெருமை கூறப்பட்டுள்ளது. நீ ஸ்வர்கத்தை அடைவிப்பவன். நீ அந்தரிக்ஷ மார்க்கமாகச் செல் என கூறப்பட்டுள்ளது. आयनाय स्वाहा முதலிய

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

5 மந்திரங்கள் ஹோமம் செய்வதற்குரியவை. தேரோட்டியின் வீட்டில் குதிரையின் நான்கு கால்களிலும் அடுத்த நான்கு மந்திரங்களால் ஹோமம் செய்யவும், भूरसि என்ற மந்திரத்தை சொல்லி குதிரையை அவிழ்த்து விடவேண்டும். देवा आशा-पाला: என்ற மந்திரத்தால் ரத்னாபரணம் அணிந்த ராஜகுமாரர்களிடம் குதிரையை ஒப்படைக்கவும். அச்வமேத யாகத்திற்காக இக்குதிரையை காப்பாற்றுங்கள் எனப் பொருள்.

अनुवाक: १३—आयनायस्वाहा

आयनाय स्वाहा குதிரையின் விசேஷ கமனத்திற்கு उद्द्राव எனப் பெயர். அதற்காகச் செய்யப்படும் இந்த ஹோமத்திற்கும் उद्द्राव ஹோமம் எனப் பெயர். 13 ஹோம மந்திரங்களும் குதிரையின் கமன (போகுதல்) விசேஷத்தை குறிக்கின்றன.

अनुवाक: १४—अग्नयेस्वाहा

அக்னி முதலிய 11 தேவர்களுக்கு பூர்வாங்கமாக செய்யும் ஹோம மந்திரங்கள் இவை.

अनुवाक: १५—पृथिव्यै स्वाहा

இதில் 21 ஹோம மந்திரங்கள் உள்ளன. இவைகளும் பூர்வாங்க ஹோம மந்திரங்கள் தான். மூவ்வுலகம், சூரியன், சந்திரன், நக்ஷத்ரங்கள், நான்கு திக்குகள், மேல் திசை மற்ற திக்குகள்,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வருஷம், மாஸம், பகல், இரவு, பக்ஷம், ருதுக்கள் முதலியன அபிமான தேவதைகள் இந்த ஹோமத் திற்குரியவை.

अनुवाक: १६—अग्नये स्वाहा

11 மந்திரங்கள் தீக்ஷா ஹோம மந்திரங்கள். அக்னி முதலிய தேவதைகள்.

अनुवाक: १७—पृथिव्यै स्वाहा

இதில் 22 தீக்ஷா ஹோம மந்திரங்கள் உள்ளன. ப்ருத்வீ முதலியன தேவதைகள். சத்ரு ஜயம் பலன்.

अनुवाक: १८—भुवोदेवानां

ருது தீக்ஷை செய்து கொண்டு யஜமானன் மான்தோலின் மீது ஏறும் பொழுது அந்த யஜ மானனைப் பார்த்து சொல்லவேண்டிய மந்திரங் கள் கூறப்பட்டுள்ளன. नाहंदीक्षा என யஜமானன் சொல்ல வேண்டிய மந்திரம் கடைசியில் घृत ஹோம மந்திரங்கள் கூறப்பட்டுள்ளன. தீக்ஷாபி மானி தேவதையை வஸு முதலிய தேவதைகளு டன் சேர்த்து வைப்பதாகக் கூறப்பட்டுள்ளது.

अनुवाक: १९—इंकाराय स्वाहा

இதில் குதிரையின் செயல்கள் கூறப்பப்பட் டுள்ளன. அதன் அபிமானி தேவதைகளுக்கு ஹோமங்கள் கூறப்பட்டுள்ளன, கொள்ளு தின்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

னச் செல்லும் போது ஏற்படும் சப்தம், பெண் குதிரையைப் பார்த்து போடும் சப்தம், விரோதி குதிரையைப் பார்த்து கனைத்தல், மூக்குத்துடிப்பு, ச்வாஸிப்பது, புல்தின்னும் பொழுது போடும் சப்தம், கட்டப்பட்ட குதிரையின் சப்தம், உட்காருதல், படுத்தல், ஓடுதல், மண்ணில் புரளுவது போன்ற செயல்கள் மந்திரங்களில் கூறப்பட்டுள்ளன.

अनुवाकः २०—अग्नये स्वाहा

அக்னி முதலிய தேவதைகளைக் குறித்து ஹோம மந்திரங்கள் கூறப்பட்டுள்ளன:

இரண்டாவது ப்ரச்னம்

अनुवाकः १—साध्या वै देवा

இதில் षड्रात्रः என்ற யாகம் விதிக்கப்படுகிறது. முன்பு ஸாத்யர்கள் என்ற தேவகணம் ஸ்வர்கத்தையடைய விரும்பி இந்த ஷட்ராத்ரம் என்ற யாகத்தை கண்டனர். பிறகு அதற்குரிய ஸாம க்ரியைகளை ஸம்பாதித்து அதை அனுஷ்டித்தனர். அதனால் அவர்கள் ஸ்வர்கத்தை யடைந்தனர். இதையறிந்து ஷட்ராத்ரம் யாகம் செய்பவர்கள் ஸ்வர்கலோகத்தை நிச்சயம் அடைவார்கள். இது ஸத்ரயாகம் போல் தேவர்களுக்கு ப்ரியமான யாகம். ஸத்ரயாகத்திலுள்ளது போல் रथंतर, बृहत्, वैरूप वैराज, शाक्वर, रैवत என்ற 6 ஸாமாக்கள்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கொண்ட ப்ருஷ்ட ஸ்தோத்ரங்களை நாளுக்கு ஒன்றாக கானம் செய்து அனுஷ்டானம் செய்ய வேண்டிய 6 ஸுத்யாஹஸ் கொண்டது. ஆகை யால் தேவர்களுக்கு ப்ரியமானது. வருடத்திற்கு 6 ருதுக்கள் போல் 6 ஸுத்யைகளால் யாகம் பூர்த்தியை அடையும்: யஜமானன் ப்ரதிஷ்டை அடைவான். रथंतर बृहत्साम இரண்டும் இவ்வுலகம், மேல் உலகம் போன்றவை. இதன் மூலம் ஸ்வர்க ப்ராப்தி கிடைக்கும்:

त्रिवृत्स्तोमक அக்னிஷ்டோம யாகம். 15 ஸாம கானம் கொண்ட உக்த்ய ஸோமயாகம், 17 ஸாம கானம் கொண்ட உக்த்ய ஸோமயாகம், 21 கானம் கொண்ட षोडशी யாகம், 27 கானம் கொண்ட உக்த்ய யாகம், 33 கானம் கொண்ட உக்த்ய யாகம் என 6 ஸுத்யைகள் கொண்டது. இதில் ஆக்னீத்ரசாலை, ஹவிர்தான மண்டபம் இரண்டும் அரசமரக் கட்டையால் நிர்மாணிக்க வேண்டும். சக்ரமுள்ளதாக இருக்க வேண்டும். யூபம் உரல் போல் அடிபாகம் அகலமாக இருக்க வேண்டும். சக்ரமுள்ள ஸதஸ், ஆக்னீத்ரியம், ஹவிர்தான மண்டபம் மூன்றையும் எடுத்துக் கொண்டு கிழக்கே சம்யா என்ற கட்டையை எறித்து அது விழும் இடத்தில் கார்ஹபத்யாக் னியை வைக்கவும். அதிலிருந்து 36 அடி கிழக்கே ஆஹவனீயாக்னியை வைக்கவும். இவ்வாறு 6 நாளும் கிழக்கு நோக்கி ஸரஸ்வதி நதிக்கரையில்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

சென்று யாகம் செய்யவும். உரக்க சப்தம் செய்து கொண்டு செல்ல வேண்டும். அதனால் யஜமானன் செல்வந்தனாகவும், எதிரி ஏழையாகவும் ஆவான்.

10 பசுக்கள் எவ்வளவு காலத்தில் 100 கன்றுகள் போடுமோ அவ்வளவு காலம் வரை இந்த ஷட்ராத்ர யாகத்தை திரும்ப திரும்ப அனுஷ்டிக்க வேண்டும். புருஷனுக்கு சதாயுஸ்ஸும் இந்திரிய பலமும் ஏற்படும். அல்லது 100 பசுக்கள் 1000 கன்றுகள் போடும் வரை இந்த யாகத்தைச் செய்யவும். 1000 கணக்கான போக்ய வஸ்துக்களுடன் ஸ்வர்கத்தையடைகிறான். இந்த யாகம் ஸத்ரம் போல் பல யஜமானர்களைக் கொண்டது. ஆகையால் இவர்களுள் ஒரு யஜமானன் இறக்கும் வரை செய்யவும். அல்லது சத்ருக்களால் இவர்களுடைய எல்லா சொத்தும் அபஹரிக்கப்பட்டால் அதுவரை செய்து முடித்து விடவும். ஷீ முறை பாபத்திலிருந்து விடுவிக்கக் கூடியது.

அनुवाक: २—कुसुरुबिन्दः ८.

இதில் सप्तरात्र: என்ற யாகம் விதிக்கப்படுகிறது. உத்தாலகரின் புத்ரர் குஸுருபிந்தர் என்பவர் सप्तरात्रम् என்ற யாகத்தை அனுஷ்டித்து பசுக்களை அடைந்தார். அவர் ஏழு விதமான பசுக்களை அடைந்தார். இதையறிந்து ஸப்தராத்ர யாகத்தை அனுஷ்டிப்பவர் பசுமாடு, வெள்ளாடு, செம்மறியாடு, குதிரை, புருஷன், கழுதை, ஒட்டகம் என்ற 7வித பசுக்களை அடைவான்,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஏழு ஆரண்ய பசுக்கள். ஏழு சந்தஸ்ஸுகள் என எல்லாவற்றையும் அடைவான், 1) அக்னிஷ்டோமயாகம் 2) உக்த்யம் 3) உக்த்யம் 4) ஷோடசீ 5) உக்த்யயாகம் 6) மஹாவ்ரதத்துடன் கூடிய அக்னிஷ்டோம யாகம், 7) விச்வஜித்யாகம் என ஏழு ஸோமயாகங்கள் கொண்டது. முதல் 6 நாள் ரதந்தரம், ப்ரஹத் என்ற ஸாமாக்களை ஆவ்ருத்தி செய்து அனுஷ்டிக்க வேண்டும். 7வது நாள் எல்லா 6 ப்ருஷ்ட ஸ்தோத்ரங்களை அனுஷ்டிக்க வேண்டும். அவ்வாறு செய்தால் ப்ரஸவித்த பசுவை பால் கறப்பது போலாகும்.

अनुवाकः ३—बृहस्पतिरकामयत

இதில் அஷ்டராத்ரம் என்ற யாகம் விதிக்கப்படுகிறது. ப்ருஹஸ்பதி ப்ரஹ்மவர்சஸ்வீயாக ஆக வேண்டும் என எண்ணி अष्टरात्र யாகத்தைப் பார்த்தார். பிறகு அதற்குரிய ஸாமக்ரியைகளை ஸம்பாதித்து ஷ யாகத்தை அனுஷ்டித்தார், அதனுல் ப்ரஹ்மவர்சஸ்ஸை அடைந்தார். இதையறிந்து अष्टरात्र யாகத்தை அனுஷ்டிப்பவன் ப்ரஹ்மவர்சஸ் உள்ளவனுக ஆவான். 8 ஸுத்யாஹஸ் கொண்டது இந்த யாகம். முதல் ஆறு நாள் ஷட்ராத்ர யாகம் போல் செய்யவும். 7வது நாள் மஹாவ்ரதத்தோடு கூடிய அக்னிஷ்டோம ஸோம யாகம். 8வது நாள் 6 ப்ருஷ்டஸ்தோத்ரங்கள், விச்வஜித், அதிராத்ர யாகம் என 8 ஸோம யாகங்கள் கொண்டது இந்த யாகம்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

अनुवाक: ४—प्रजापतिः प्रजा असृजत

இதில் नवरात्र யாகம் விதிக்கப்படுகிறது. ப்ரஹ்மா ப்ரஜைகளை ஸ்ருஷ்டி செய்தார். ஸ்ருஷ்டிக்கப்பட்ட ப்ரஜைகள் பசியால் அவதிப்பட்டனர். அப்பொழுது ப்ரஹ்மா नवरात्र யாகத்தை கண்டார். பிறகு அதற்குறிய ஸாமக்கிரியைகளை சம்பாதித்து மேற்படி யாகத்தை அனுஷ்டித்தார். அதன்மூலம் ப்ரஹ்மா ப்ரஜைகளின் பசியை போக்க முடிந்தது.

இதையறிந்து அனுஷ்டானம் செய்தால் ப்ரஜைகளின் பசியை போக்கலாம். எப்பொழுது பூமி முதலிய லோகங்கள் பயிர் செழிப்பின்றி ப்ரஜைகள் பசியால் வாடும் மக்களின் பசியை தீர்க்க வேண்டுமோ அப்பொழுது நவராத்ரம் செய்தால் பயிர் செழிப்பு ஏற்பட்டு பசி தீரும். யஜமானன் ப்ரஜாபாலனத்தில் சக்தியுள்ளவனாக ஆவான். அன்ன ஸம்ருத்தி ஏற்படும். ज्योतिष्टोमः गोष्टोमः आयुष्टोमः என்ற மூன்று ஸோமயாகங்களை மூன்று முறை செய்யவும். இதனால் யஜமானனுக்கு தேஜஸ் மென்மேலும் வ்ருத்தியடையும். இந்த நவராத்ரயாகம் தீர்க்கரோகியும் செய்யலாம். இதனால் ரோகம் நீங்கி தீர்க்காயுஸ்ஸை அடைவான். போன உயிர்கூட அதாவது சாகும் தருவாயில் இருப்பவனும் பிழைத்து விடுவான்.

अनुवाक: ५—प्रजापतिरकामयत

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இதில் दशरात्र, யாகம் விதிக்கப்படுகிறது. ப்ரஹ்மா ப்ரஜைகளை ஸ்ருஷ்டிக்க எண்ணினுர். அதற்கு ஸாதனமாக दशरात्र யாகத்தை கண்டார். அந்த யாகத்தை ஸ்ருஷ்டித்து அநுஷ்டானம் செய்தார். பிறகு அதன் பயனுக ப்ரஜைகளை ஸ்ருஷ்டித்தார். தசராத்ர யாகத்திற்கு தீக்ஷை செய்து கொள்ளப்போகிறவன் அதற்கு அங்கமாக दशहोतृ மந்திரங்களால் ஹோமம் செய்ய வேண்டும். இதன் பயனுக தசராத்ர யாகத்தை ஸ்ருஷ்டி செய்து அனுஷ்டித்து ப்ரஜைகளை அடைந்தார். இதையறிந்து வித்வான் ஹோமம் செய்து பிறகு தசராத்ர யாகத்தை செய்யவும். இதனுல் விராட் என்ற 10 எண்ணிக்கையால் அன்ன ஸம்ருத்தியை அடைகிருன். ப்ரஜா வ்ருத்தி பலனும் ஏற்படும். முன்பு இந்திரன் தேவர்களோடு சமமாக இருந்தான். எல்லாரிலும் மேலானவன் அரசன் என்ற மதிப்பில்லை. அப்பொழுது இந்திரன் ப்ரஹ்மாவிடம் சென்று தனது மனோ நிலைக்கு காரணத்தையறிந்து துன்பத்தை நீக்க வேண்டினுன். ப்ரஹ்மா தசராத்ர யாகத்தை செய்வித்தார். இதனுல் இந்திரன் தேவர்களுள் தலையாக ஆனுன். இதையறிந்து இந்த யாகத்தை செய்யும் யஜமானன் எதிரிகளிடமிருந்து பிரிந்து எதிரியை வெல்லுகிருன்.

மூன்று மூன்ருக ஸுத்யாஹஸ்ஸுகள் கணக்கிடப்பட்டு கடைசியில் 10வது ஸுத்யாஹஸ் என

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

10 ஸுத்யைகள் சொண்ட இந்த யாகத்தில் 1, 3 வது அக்னிஷ்டோம ஸோமயாகம், இரண்டாவது 15 ஸாமகானம் கொண்ட உக்த்ய ஸோமயாகம். இதுபோல், 4, 6வது தினத்தைவிட 17 கானம் உள்ள 5வது ஸுத்யையன்று 21 ஸாமகானம் கொண்ட உக்த்ய யாகம் பெரியது, மேலும், 7-9 வது 27 கானம் உள்ள அக்னிஷ்டோம யாகத்தை விட 8வது நாள் செய்யும் 33 கானம் கொண்ட உக்த்ய யாகம் பெரியது. இது காளையின் முதுகில் இருக்கும் திமில் போன்றது. இதனால், அன்ன ஸம்ருத்தி, பாபநிவ்ருத்தி இரண்டும் ஏற்படும். மேலும் அபிசாரப்ரயோகத்தையும் இந்த யாகத்தினால் முறியடிக்கலாம். முன்பு தேவர்கள் தசராத்ர யாகம் செய்து அஸுரர்களை வென்றனர் அது போல் சத்ருக்களுடைய உபத்ரவம் நீங்க யஜமானன் இந்த யாகத்தை செய்தால் யஜமானன் சத்ருக்களை வெல்லலாம். 1, 3, 4, 6, 7, 8 தினங்களில் சோம்பலை நீக்க கடைசியில் यज्ञायज्ञीय ஸாம கானம் செய்ய வேண்டும், 1. अग्निष्टुत् ஸோம யாகம், தேஜஸ் கிடைக்கும், 2. उक्थ्य யாகம்; இந்திரிய வலிமை பலன். 3) அக்னிஷ்டோம யாகம்; புஷ்டி பலன். 4, 6வது நாள் த்ருவ்ருத்ஸோமம் என்ற உக்த்ய யாகம், 5 வது நாள் 21 கானமுள்ள உக்த்ய யாகம். இவைகளின் பலன் அன்ன ப்ராப்தி, ஸத்ப்ரஜை, ப்ரதிஷ்டை பலன், 7-9வது ஸுத்யாஹஸ்ஸின் பலன் விஜயலாபம், 8வது நாளின் பலன் ப்ரதிஷ்டையடைதல், 10வது

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஸர்வப்ருஷ்ட ஸ்தோத்ர முள்ள விச்வஜித் யாகம் எல்லாவற்றிலும் ஜய ப்ராப்தி பலன்.

अनुवाक. ६—ऋतवो वै

एकादशरात्र: என்ற யாகம் விதிக்கப்படுகிறது. முன்பு வஸந்தாதி ருதுக்களின் அபிமான தேவதைகள் ப்ரஜையை அடையாததினால் அதற்காக ஷெ யாகம் செய்தனர். அவர்கள் ப்ரஜைகளை ஸ்ருஷ்டிக்கும் சக்தி, அவர்களை தன் வசத்தில் வைத்துக் கொள்ளும் சக்தி, ஸ்ருஷ்டியின் மூலம் ப்ரஜையை அடைதல், நல்ல, நிறைய ஸத்ப்ரஜையையடைதல் என்ற நான்கு இஷ்டங்களோடு இந்த யாகம் செய்து பலனையும் அடைந்தனர். ருதுவில் பிறப்பதால் ப்ரஜைகள் ருது ஸம்பந்தப்பட்டவர்கள் என்று சொல்லப்படுகிறார்கள். இதை யறிந்து ஷெ யாகத்தை அனுஷ்டிப்பவன் மேற் சொன்ன நான்கு பலன்களையும் அடைவான். இந்த एकादशरात्र யாகம் ஸத்ரயாகம் எனப்படும். மற்ற சாகைகளில் கூறப்படும் एकादशरात्र யாகம் அஹீன யாகம் எனப்படும். 11 ஸுத்யாஹஸ் கொண்டது இந்த யாகம்.

1) அதிராத்ர ஸம்ஸ்தாக ஜ்யோதிஷ்டோம யாகம். 2) 2 முதல் 7வது வரை ப்ருஷ்ட்ய ஷடஹ யாகங்கள். 8வது தினம் 24 கானம் கொண்ட உக்த்ய யாகம், 9வது தினம் 44 கானம் உள்ள உக்த்ய யாகம். 10வது தினம் 48 உள்ள உக்த்ய

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

யாகம். இதனால் ஸ்வர்கலோக ப்ரகாசனம், ருது தேவதா அனுக்ரஹம், ப்ரஹ்மவர்சஸ், இந்திரிய வலிமை, பசு ஸம்ருத்தி முதலியவை பலனாக கிடைக்கும். இவை அவாந்தர பலன்கள். 11வது நாள் 19 கானமுள்ள अतिरात्र ஸோமயாகம் செய்ய வேண்டும். இதனால் ப்ரஜைகள் நன்கு ரக்ஷிக்கப் பட்டதாக ஆகும்.

अनुवाक: ७—ऐन्द्रवायवाग्रान्

இது முதல் நான்கு அனுவாகங்களில் द्वादशरात्र யாகம் விதிக்கப்பட்டு அதன் விவரங்கள் கூறப் படுகின்றன. இந்த அனுவாகத்தில் காம்ய க்ர ஹானுஷ்டான முறை கூறப்படுகிறது. ஸோம யாகத்தில் க்ரஹம் என்னும் மரப்பாத்திரத்தில் ஸோமரஸத்தை எடுத்து வைத்து அக்னியில் ஆஹுதி செய்யப்படும். 13 க்ரஹ பாத்ரங்கள் உள்ளன. நமது முன்னோர்கள் கடைபிடித்து வந்த ஆசார மார்க்கத்தில் நமது புத்ர பௌத்ரர் களான பின் ஸந்ததிகளும் இருக்க வேண்டும் என விரும்பும் யஜமானன் ஐந்த்ரவாயவ க்ரஹத் தை முதலில் ஸோமரஸத்தால் நிரப்ப வேண்டும். சிறியோர் முதியோர்களை மீறி நடக்கமாட்டார் கள். பழைய ஆசாரம் கடைபிடிக்கப்படும். ப்ராணவியோகம் ஏற்படுமளவிற்கு ரோகத்தினால் பீடிக்கப்பட்ட யஜமானன் ஷ ஐந்த்ரவாயவ க்ரஹத்தை முதலில் க்ரஹிக்கவும். ரோகம் நீங்கி நீண்ட ஆயுளை அடைவான். ஸத்ரயாகத்தில்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

தீக்ஷிதர்களான யஜமானர்களுள் யாராவது ஒருவர் இறந்தால் மற்றவர்கள் ப்ராணவியோகத்தை தவிர்க்க மைத்ராவருண க்ரஹத்தை ஸோம ரஸத்தோடு முதலில் க்ரஹிக்க வேண்டும். ப்ராணாபிமானி தேவதையான மித்ராவருணர்களின் அனுக்ரஹத்தால் ப்ராணவியோகம் ஏற்படாது. பூஜிக்கத்தகுந்த வயதில் மூத்தவனுகயிருந்தும் எல்லோராலும் சிறியவன் போல் கருதப்பட்டால் பூஜிக்கப்படாவிடில் அவ்வாறு அவமதிப்பை யடைந்தவன் முதலில் ஆச்வினக்ரஹத்தை க்ரஹிக்க வேண்டும். இதன் தேவதைகளான அச்வினீ தேவர்கள் வைத்யர் என்ற காரணத்தால் பூஜிக்கப்படாமலிருந்து पवमान ஸ்தோத்ரத்தால் பரிசுத்தர்களாகி யாகத்தில் உரிய ஸ்தானத்தை பெற்றது போல், யஜமானனுக்கும் ஷி தேவதைகளின் அனுக்ரஹத்தால் அவமறியாதை நீங்கி உசிதமான கௌரவம் கிடைக்கும்.

5) செல்வமிழந்து கௌரவமில்லாதவன் शुक्रग्रह த்தை முதலில் க்ரஹிக்கவும். சுக்ரம் என்பது ப்ரகாசமான ஆதித்யனைக் குறிக்கும். ச்ரேஷ்ட ப்ரகாசரூபமான ஆதித்யனை உபாஸிப்பதால் தாரித்ரியம் நீங்கி சூரியன் போல் செல்வந்தனுக நன்கு பிரகாசித்து ப்ரதிஷ்டை அடைவான். மறுபடி ஒரு பொழுதும் தரித்ரனுக ஆகமாட்டான்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

6) அபிசாரம் செய்ய விரும்புவன் मन्थिग्रहத்தைத் முதலில் க்ரஹிக்க வேண்டும். சத்ரு மரணம் நிச்சயம் ஏற்படும்.

7) எவனுடைய பிதா, பிதாமஹர் இருவரும் ஸபையில் பேசும் திறமையுள்ளவர்களாகவும் உடல் வலிமையும் உள்ளவர்களாக இருந்தார் களோ, அப்படிப்பட்ட இருவித ஸாமர்த்தியத்தை அடையவிரும்பும் யஜமானன், आग्रयणग्रहத்தை முத லில் க்ரஹிக்கவும். அதனால் பண்டிதனுகவும் நாவன்மையுள்ளவனுகவும், இந்திரிய சக்தியுள்ள வனுக ஆவான்.

8) उक्थ्यग्रहத்தை முதலில் க்ரஹித்தால் யஜ மானனைக் குறித்து ஏவப்படும் அபிசாரம் முறிய டிக்கப்படும். ஸோமரஸத்தை க்ரஹிப்பதற்கு முன்பு सरस्वत्यभिनो என்ற மந்திரத்தை சொல்லவும்.

9) ரோகம் நீங்க, ஐந்த்ரவாயவாதி க்ரஹங் களில் ஸோமரஸத்தை பூர்ணமாக க்ரஹிக்க வேண்டும். சிறிது நேரம் உயிரற்றவன் போல் மயக்கமுற்றவன் கூட உயிர் பெறுவான்.

10) மழையின்மையால் ப்ரஜைகள் அன்னம் கிடைக்காமல் தவிக்கும் பொழுது எல்லா க்ரஹங் களிலும் ஸோமரஸத்தை பூர்ணமாக க்ரஹிக்க வும். அதனால் மழைபெய்து பயிர் செழித்து மக்கள் துயர் நீங்கும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

अनुवाक: ८—गायत्रीवा ऐन्द्रवायव:

द्वादशाह: என்பது இருவிதமானது समूढद्वादशाह:, व्यूढद्वादशाह: என்று. எந்த க்ரஹத்தை முதலில் எந்தெந்த தினத்தில் க்ரஹிக்க வேண்டும் என்றும் சொல்லும் முறைக்கு रूपवीका என்று பெயர். முதல் ஸௌத்யா தினத்தில் ऐन्द्रवायवाग्रं, 2வது நாள் शुक्राग्रं 3வது நாள் आग्रयणाग्रं என்ற முறையில் திரும்ப திரும்ப செய்யும் முறையை ऋषीका என்றும் இம் முறையில் மூன்று முறை 1, 11, 12ம் நாள் ऐन्द्रवाय-वाग्रं समूढद्वादशाह யாகத்தில் அனுஷ்டிக்கவேண்டும். இதற்கு மாறுக अग्रानियमங்களை மாற்றியமைத்து செய்யும்படி கூறப்பட்டுள்ளது இந்த व्यूढद्वादशाह யாகத்தில். இந்த அனுவாகத்தில் व्यूढद्वादशाहயாகத்தைப் பற்றி விளக்கப்படுகிறது. समूढद्वादशाहயாகத்தின் ग्रहங்களை முதலில் க்ரஹிக்கும் முறை பின்வருமாறு, மொத்தம் 12-ஸௌத்யாஹஸ்ஸுகள்.

1, 2, 5, 8, 11, 12வது ஸௌத்யா தினங்களில் ऐन्द्रवायवाग्रமாக க்ரஹிக்க வேண்டும். 3, 6, 9வது ஸௌத்யா தினத்தில் शुक्राग्रமாக க்ரஹிக்க வேண்டும். 4, 7, 10வது ஸௌத்யா தினத்தில் आग्रयणाग्रமாக க்ரஹிக்க வேண்டும். व्यूढद्वादशाह யாகத்தில் க்ரஹிக்கும் முறை—பின்வருமாறு 1, 2, 6, 10, 11, 12வது सुत्यादिनங்களில் ऐन्द्रवायवाग्रமாக க்ரஹிக்க வேண்டும். 3, 7, 8வது ஸௌத்யா தினத்தில் शुक्राग्रமாக க்ரஹிக்க வேண்டும். 4, 5, 9வது ஸௌத்யா தினத்தில் आग्रयणाग्रமாக க்ரஹிக்க வேண்டும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

முதல் நாள் गायत्री छन्दस् रथंतरसाम, 2வது நாள் त्रिष्टुप् छन्दस् बृहत्साम 3வது நாள் जागतछन्दस् - आग्रयणाग्र என்ற முறையில் க்ரஹிப்பது தான் சரியான பாதையில் செல்வது போலாகும். மாற்றினல் கெட்டவழியில் செல்வது போலாகும் என வேதம் கூறுகிறது. व्यूढद्वादशाह த்தில் இம்முறை மாறி வருவதால் छन्दस् கள் விவாஹம் செய்வது போலாகும். உலகில் கௌசிக கோத்ரக்காரன் வேறு கோத்ரமான பாரத்வாஜ கோத்ர பெண்ணை விவாஹம் செய்து கொள்கிருன். அது போல் ऐन्द्रवायवाग्र த்திற்கும் आग्रयणाग्र த்திற்கும் தங்கள் ஸ்தானத்தை மாற்றிக் கொள்வதால் அது விவாஹம் போன்றது. இதுபோல், ऐन्द्रवायवाग्र, शुक्राग्र இரண்டும் ஸ்தான மாற்றத்தால் விவாஹம் போலாகும். शुक्राग्र, आग्रयणाग्र தங்கள் ஸ்தானத்தை மாற்றிக் கொள்வதால் விவாஹம் போலாகும். உலகிலும், ஒரு கோத்ரப் பெண்ணை வேறு கோத்ரக்காரன் விவாஹம் செய்து கொள்கிருன்.

अनुवाकः ९—प्रजापतिरकामयत

இதில் द्वादशाहः என்ற யாகம் விதிக்கப்படுகிறது. முன்பு ப்ரஹ்மா ப்ரஜைகளை ஸ்ருஷ்டிக்க நினைத்தார். அப்பொழுது அவருக்கு இந்த த்வாதசாஹ யாகம் புலப்பட்டது. பிறகு அதற்குரிய ஸாம க்ரியைகளை ஸம்பாதித்து, த்வாதசாஹ யாகத்தை செய்தார். அதன் மூலம் அவர் ப்ரஜைகளை ஸ்ருஷ்டித்தார். ஆகையால் ப்ரஜையை அடைய

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

விரும்புவன் द्वादशरात्र: என்ற யாகத்தை செய்யவும். ப்ரஜா ஸம்ருத்தி ஏற்படும். இதில் 12 ஸுத்யா தினங்கள் உள்ளன. ஸோம ரஸத்தை பிழிந்து அன்று யாகம் செய்வதால் ஸுத்யாதினம் எனப் பெயர். அது தான் ப்ரதான யாகமாகும். 12 நாளும் முடிக்க வேண்டிய ஸ்தோத்ரங்களின் பெயர்களை வேதம் அறிந்த சான்ஞேர் கூறுகிருர்கள். முடியும் ஸ்தோத்ரத்தின் பெயராலேயே அந்த ஸுத்யாதினம் அழைக்கப்படும். 12 நாள் ஸோம யாகத்தின் பெயர் பின்வருமாறு—1, 12 வது நாள் अतिरात्र सोमयाग: 2, 11வது நாள் अग्निष्टोम-सोमयाग:, நடுவிலுள்ள 3 முதல் 10 முடிய எட்டு நாட்கள் उक्थ्यसोमयाग: என க்ரமம் கூறப்பட்டுள்ளது. வேதமறிந்த சான்ஞேர் இம்முறை கேள்வி மூலம் விளக்கியிருக்கிருன்றனர். அதாவது அக்னிஷ்டோம ஸோமயாகம் தான் ஜ்யேஷ்டயக்ஞம் எனப்படுவதால் முதலில் செய்யவேண்டும், அப்படியில்லாமல் முதலில் अतिरात्र யாகத்தை செய்யச் சொன்னதின் காரணம் என்ன எனக் கேட்டு பதில் கூறிஞர்கள். அதிராத்ரம் என்பது யக்ஞபுருஷனின் கண் கோலகம் போன்றது. அக்னிஷ்டோமம் என்பது கண்ணின் கருவிழி போன்றது. அக்னிஷ்டோம யாகம் முதலில் செய்தால் கண் கோளம் இல்லாமல் கருவிழியை வைப்பது போலாகும். ஆகையால் கண் கோளம் போன்ற அதிராத்ரத்தை 1, 12வது நாளில் செய்ய வேண்டும். 2-11வது நாளில் அக்னிஷ்டோம யாகம்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கருவிழியை அதில் பதித்தது போலாகும். நடு விலுள்ள 10 தினங்களை காயத்ரீ ரூபமான பக்ஷி யாக வர்ணிக்கப்படுகிறது.

2வது 11வது நாளில் செய்யும் அக்னிஷ்டோம யாகங்கள் பக்ஷியின் ஜ்யோதிஸ் ரூபமான இறக்கைகள். நடுவிலுள்ள 8 உக்த்ய யாகங்கள் பக்ஷியின் உடலாகும். இவ்வாறு த்யானம் செய்து யாகம் அனுஷ்டிப்பவன் ஜ்யோதிஸ்ஸின் பிரகாசத்தால் ஸ்வர்கத்தை அடைவான். இந்த द्वादशरात्र யாக ஸ்வரூபமாக ப்ரஹ்மாதான் பக்ஷி ரூபத்தில் இருக்கிறார். அக்னிஷ்டோம யாகங்கள் இரு இறக்கைகள். அதன் நுனி பாகங்கள் இரண்டு அதிராத்ர யாகங்களும் மீதியுள்ள 8 உக்த்ய ஸோம யாகங்கள் ப்ரஜாபதியின் சரீரமாகும். ப்ரஹ்மா எல்லா ஜீவராசிகளின் உயிராக இருக்கிறார். ஆகையால் இந்த ஸத்ரயாகத்தையனுஷ்டிப்பவர் உயிரினங்களின் ப்ராணரக்ஷகராக ஆகிறார். ப்ராணன் எவ்வாறு எல்லோருக்கும் ப்ரியமானதோ, அது போல் ஸத்ரயாகம் செய்த யஜமானன் எல்லா ப்ரஜைகளுக்கும் ப்ரியமானவனாக ஆவான். ஒரு ப்ரஜையும் அவனை வெறுக்காது.

अनुवाकः १०—सवाएषः

वैश्वानरवानिः எனப்படும் அதிராத்ரயாகம் முதல் நாள் செய்ய வேண்டும் என கூறப்பட்டது. முடிவு என்ன என்பதை சொல்லாததால் முடிவுறாத

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இந்த ஸத்ரயாகம் ஸ்வர்கத்தையடைய ஸாதனமாக இல்லை. ஆகையால் தேவர்கள் கடைசியில் அதிராத்ரம் செய்ய வேண்டும் என கண்டுபிடித்தனர். இவ்வாறு முதலிலும் முடிவிலும் அதிராத்ர யாகத்தைக் கொண்ட த்வாதசாஹத்திற்கு ஸ ரூபமான த்வாதசாஹம் எனப்பெயர். இது கலி யுகத்தில் நிஷித்தம், இதில் தக்ஷிணை வாங்கிக் கொண்டு யாகம் செய்யும் ருத்விக்குகள் கிடையாது. ஆகையால் எல்லாரும் யஜமானர்களே ருத்விக்குகளின் கார்யத்தை செய்யவேண்டும். எல்லோரும் யஜமானர்களானதால் தக்ஷிணை கொடுக்க வேண்டியதில்லை. (Co-operative system இதன் அடிப்படையில்தான் ஏற்பட்டது). யாகத்தின் முழு பலன் யாக கர்த்தா ஒவ்வொருவருக்கும் உண்டு, குறைந்தது ஆஹிதாக்னிகளான 17, அதிகபக்ஷம் 23 பேர்கள் சேர்ந்து எல்லோருடைய அக்னியையும் ஒன்ருகச் சேர்த்து யாகம் செய்ய வேண்டும். தீக்ஷை முதலிய யஜமான நியமங்கள் எல்லோருக்கும் உண்டு. இதன் அடிப்படையில்தான் தமிழில் ''சத்திரச் சாப்பாட்டுக்கு தாத்தையங்கரர் உத்திரவு எதற்கு'' எனப் பழமொழி வழங்கி வருகிறது.

இப்பொழுது अहीनद्वादशाहः என்ற யாகம் விதிக்கப்படுகிறது. முன்பு வஸந்தம் முதலிய ருது தேவதைகள் ருத்விக்குகளாக இருந்துகொண்டு ப்ரஹ்மாவை யஜமானஞக அமைத்து த்வாதசாஹ

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

யாகம் செய்வித்தனர். அதனால் ப்ரஹ்மா ஸம்ருத்தியை அடைந்தார். இதில் யஜமானன் ஒருவராக இருப்பதால் இது अहीन யாகம் எனப்படுகிறது. இதில் ருத்விக்குகளுக்கு தக்ஷிணை உண்டு, ருது தேவதைகள் அந்த ஸம்ருத்தியில் பங்கு கேட்டனர். அதையனுசரித்து ப்ரஹ்மா வஸந்த ருதுவுக்கு எல்லா போக்யவஸ்துவின் ஸாரத்தை கொடுத்தார். க்ரீஷ்ம ருதுவுக்கு யவை முதலிய தான்யங்களை கொடுத்தார். வர்ஷ ருதுவுக்கு செடி கொடிகளை அளித்தார். சரத் ருதுவுக்கு நெல்லை (व्रीहि) கொடுத்தார். ஹேமந்த சிசிர ருதுவுக்கு உளுந்தையும் எள்ளையும் ஸம்ருத்தமாக கொடுத்தார். ஆகையால்தான் சரத்ருதுவில் आग्रय-णेष्टि: आग्रयणस्थालीपाक:மும் விதிக்கப் பட்டிருக்கிறது. நெல் வயல்களில் அறுவடையின் பொழுது உளுந்து விதைத்து பங்குனியில் அறுவடை செய்கிறார்கள்.

முன்பு இந்திரனுக்கு தேவர்களுள் சிறப்பு ஸ்தானம் கொடுக்கப்படவில்லை. மீதி தேவர்களோடு சமமாக பாவிக்கப்பட்டான். அதனால் இந்திரன் ப்ரஜாபதியை சிறப்பு ஏற்பட உபாயத்தை கேட்டான். அவர் இந்திரனுக்கு த்வாதசாஹ யாகத்தை செய்து வைத்தார். அது முதல் இந்திரன் தேவர்களுள் சிறந்தவனாக ஆனான். இதனால் எல்லோரிலும் மட்டமாக நினைக்கப்படும் யஜமானன் இந்த யாகத்தை செய்யவும். சிறந்தவனாக ஆகிவிடுவான்,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஸத்ரயாகத்தில் தக்ஷிணை கிடையாது. யாராவது தக்ஷிணை வாங்கினால் அவன் புருஷ சவத்தையோ, குதிரையின் சவத்தையோ சாப்பிட்டவனாக ஆகி அதற்குள்ள தோஷமுள்ளவனாக ஆவான். அவன் அன்னம் கோ மாம்ஸத்திற்கு சமமாகும். அவன் சாப்பிடும் உணவுக் கலம் அலம்பப்படாவிட்டால் அந்த உணவு மலத்திற்கு சமமாகும். அஹீனரூப த்வாதசாஹத்தை ஒரு யஜமானன் தனியாக ருத்விக்குகளின் உதவியோடு செய்ய வேண்டும்- ப்ரஹ்மா ஸம்ருத்தியை அடைந்ததுபோல் ஸம்ருத்தியை அடைவான்.

இந்த யாகத்திற்கு தீக்ஷாகாலம் 12 நாள். உபஸத் யாகமும் 12 நாள். முதல் 3 நாள் உபஸத் யாகத்தினால் யக்ஞ ஸாதனம் ஸம்பாதித்ததாக ஆகும். அடுத்த 3 நாள் உபஸத் யாகத்தினால் யக்ஞம் ஆரம்பமாகிறது. அடுத்த 3 நாள் உபஸத் யாகத்தினால் யக்ஞ பாத்திரங்கள் சுத்தமாகின்றன. நான்காவது 3 நாள் உபஸத் யாகத்தினால் யஜமானனுடைய அகம் (உள்புறம்) சுத்தமாகிறது. அஹீன யாகத்தில் ப்ரதிக்ரஹம் செய்தால் தோஷமுண்டு. ருத்விக் ஹவிஸ்சேஷமான, பசு யாகத்தின் மீதியை சாப்பிட்டால் யஜமானனுடைய மாம்ஸத்தை சாப்பிட்டது போலாகும். புரோடாச சேஷத்தை சாப்பிட்டால் புருஷனுடைய சிரோமாம்ஸத்தை சாப்பிட்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பாபம் ஏற்படும். பொரியாகிய ஹவிஸ் சேஷத்தை சாப்பிட்டால் மலத்தை சாப்பிட்ட தோஷம் ஏற்படும். ஆஜ்யேடாபக்ஷணம் செய்தால் மஜ்ஜையை சாப்பிட்ட தோஷம். ஸோம ரஸ சேஷத்தை சாப்பிட்டால் வியர்வையை சாப்பிட்ட தோஷம். ப்ரதிக்ரஹம் செய்தால் யஜமானின் தலையிலிருந்து வெளிவரும் அழுக்கானவைகளை ப்ரதிக்ரஹம் செய்தது போலாகும். இவ்வாறு ப்ரதிக்ரஹம் நிஷேதமிருப்பதால் த்வாதசாஹ யாகம் செய்து வைப்பதை தவிர்க்கவும். பாபம் ஏற்படாது. அவசியம் செய்து வைக்கும்படி கோரிட்டால் சாஸ்திரத்தில் கூறப்பட்ட ப்ராயச்சித்தம் செய்து கொள்ள வேண்டும்.

अनुवाक: ११—एकस्मै स्वाहा

இது முதல் 10 அனுவாகங்களில் அச்வமேத யாகத்திற்குரிய மந்திரங்கள் உள்ளன. 'அச்வ மேதயாகத்தில் ஸ்ருவத்தினால் கீழ்க்கண்ட மந்திரங்களால் ஹோமம் செய்ய வேண்டும்.

एकस्मै என்பது ஒற்றைப்பட எண்ணாகும், द्वाभ्यां என்பது இரட்டைப்படை எண்ணாகும், ஒற்றைப் படையைக் குறிக்கும் மந்திரத்தால் ஆஜ்ய ஹோமம் செய்யவும். இரட்டைப்படையைக் குறிக்கும் மந்திரத்தால் அன்னத்தினால் ஹோமம் செய்யவும். கடைசியில் ஆஜ்ய ஹோமம் செய்யவும். ஹோம த்ரவ்யங்கள் பின்வருமாறு

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

1) ஆஜ்யம், 2) தேன், 3) அரிசி, 4) அவல் 5) பொரி 6) வறுத்த யவையின் மாவு 7) வறுத்த யவை, 8) ஸத்து மாவு, 9) மஸூஸ்யம், 10) தினை அரிசி, (மொத்தம் 10) மந்திரத்தின் பொருள், ஏக என்பதின் பொருள் ஸர்வாத்மகமான ப்ரஹ்மா, 2, 3 போன்ற எண்ணிக்கைகளும் ப்ரஹ்மாவின் ரூபமே, ஸர்வாத்மகரான ப்ரஜாபதிக்கு இந்த ஹவிஸ் அளிக்கப்பட்டதாகும். மொத்தம் 30 ஆஹூதிகள்.

अनुवाकः १२—एकस्मै स्वाहा

ஒற்றைப்படை எண்ணிக்கையுள்ள மந்திரங்களால் ப்ரஜாபதியின் விசேஷ ரூபங்களுக்கு 20 ஆஹூதிகள்.

अनुवाकः १३—द्वाभ्यां स्वाहा

இந்த மந்திரங்களால் 13 ஆஜ்யாஹூதிகள் செய்யவும்.

अनुवाकः १४—त्रिभ्यः स्वाहा

இந்த மந்திரங்களால் 19 ஆஹூதிகள் செய்யவும்.

अनुवाकः १५—चतुर्भ्यः स्वाहा

இந்த மந்திரங்களால் 8 ஆஹூதிகள் செய்யவும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

अनुवाकः १६—पञ्चभ्यः स्वाहा

இந்த மந்திரங்களால் 7 ஆஹுதிகள் செய்யவும்.

अनुवाकः १७—दशभ्यः स्वाहा

இந்த மந்திரங்களால் 11 ஆஹுதிகள் செய்யவும்.

अनुवाकः १८—विंशत्यै स्वाहा

இந்த மந்திரங்களால் 6 ஆஹுதிகள் செய்யவும்.

अनुवाकः १९—पञ्चाशते स्वाहा

இந்த மந்திரங்களால் 12 ஆஹுதிகள் செய்யவும்.

अनुवाकः २०—शताय स्वाहा

முதல் 11 மந்திரங்களால் 11 ஆஹுதிகள் செய்யவும். 100 முதல் परार्धपर्यन्तं எண்ணிக்கை சொல்லப்பட்டுள்ளது, 100, 2) 1000, 3) 10,000, 100,000 10,00,000, 100,00,000, 100,00,00,000, 10,00,00,00,000, 100,00,00,00,000, 10,00,00,00,00,000, (परार्धः) இதுதான் கடைசி எண்ணிக்கை. இதுமாதிரி இருமடங்கு வருடங்கள் கொண்ட ஆயுஸ் ப்ரஹ்மாவுக்கு உள்ளது. 11வது அனுவாகம் முதல் இது வரையில் கூறப்பட்ட எண்ணிக்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கையைக் குறிக்கும் மந்திரங்களால் இரவு முழுவதும் திரும்பதிரும்ப ஹோமம் செய்ய வேண்டும், விடியற் காலம் उषसे स्वाहा என்பது முதல் 8 ஆஹுதிகள் செய்யவும், விடியற்காலம், சூரிய உதயகாலம் முதலியவைகளுக்கு ஹோமம் சொல்லப்பட்டுள்ளது. ஸர்வாத்மக ஸ்வரூபியான ப்ரஜாபதி தான் இவைகளுக்கு தேவதை. அவரை உத்தேசித்து தான் இந்த ஹோமங்கள் செய்யப்பட வேண்டும்.

மூன்றாவது ப்ரச்னம்

இந்த ப்ரச்னத்தில் त्रयोदशरात्र: போன்ற ஸத்ர யாகங்கள் விதிக்கப்படுகின்றன.

अनुवाक: १—प्रजवंवा एतेन

இந்த அனுவாகத்தில் த்வாதசாஹ யாக சம்பந்தப்பட்ட நடுவிலுள்ள 10 ஸுத்யாஹஸ்ஸுகளுள், 10வது ஸுத்யாதினத்தில் செய்ய வேண்டிய விசேஷ தர்மங்கள் சொல்லப்படுகின்றன. இன்றைய தினம் அனுஷ்டிக்க வேண்டிய அங்கங்கள் நிறைய இருப்பதால் வேகமாக ருத்விக்குகள் காரியங்களை செய்கிறார்கள். இந்த தினம் பாப விமோசன தினமாகக் கருதப்படுகிறது. அனுஷ்டானம் வேகமாகச் செய்வதால் அங்கங்கள் மறதியால் விட்டுப் போக வாய்ப்பு உண்டு. அவ்வாறு விட்டுப் போகாமல் கவனமாக செய்ய வேண்டும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

உதாரணமாக புலி சிங்கங்கள் நிறைந்த காட்டின் வழியே வேகமாகச் செல்லும் மனிதர்களுள், ஓர் முட்டாள் தான் தனியாக எல்லோருக்கும் முன்பு வேகமாகச் சென்று நேர்வழியை தவறிவிட்டு கஷ்டப்படுவானோ, அல்லது ஒருவன் வேகமாகச் சென்று மரத்தில் மோதிக் கொள்கிருனோ. அல்லது, ஒருவன் வேகமாகச் சென்று கால்களில் முள்ளை குத்திக் கொண்டு மற்றவர்களுடன் சேர்ந்து போக முடியாமல் ஆகி விடுவானோ, அந்த மூன்று சென்று கொண்டிருக்கும் ஜன சமுதாயத்திலிருந்து பிரிந்து துஷ்ட மிருகங்களிடமிருந்து காப்பாற்றிக் கொள்ள உதவியாளர் இல்லாதவர்களாக ஆகிவிடுகிருர்களோ, அதுபோல் 10வது நாள் அங்கங்களை சரியாக அனுஷ்டானம் செய்யாத ருத்விக், மற்றவர்களைவிட குறைந்தவனுக ஆகிருன். இந்த 10வது ஸுத்யாதினத்திற்கு अविवाक्य எனப் பெயர்.

மற்ற தினங்களில் ஒரு ருத்விக் அஜாக்கிரதையாக ஒரு அங்கத்தை மறந்தால் மற்றவன் அவனுக்கு ஞாபகப்படுத்தலாம். அதன் மூலம் அங்கம் விட்டுப்போகாமல் அனுஷ்டானம் செய்ய முடியும். இந்த ஸுத்யாதினத்தில் ஒரு ருத்விக் அஜாக்ரதையினுல் அங்கானுஷ்டானம் செய்யத் தவறினுல் அதை மற்ற ருத்விக் ஞாபகப்படுத்தக் கூடாது. அவ்வாறு யாராவது ஒரு ருத்விக் மற்றவனுக்கு ஞாபகப்படுத்தியவன் பாபத்தை யடைந்து மற்ற ருத்விக்குகளிடமிருந்து தனி

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

யாக்கப்படுகிறான். ஆகையால் இந்த தினத்தில் ருத்விக்குகள் ஜாக்கிரதையாக அனுஷ்டானம் செய்யவேண்டும். பிறர் அவர்களுக்கு தவறுதலை எடுத்துக் காண்பிக்க கூடாது.

ययोवल्वाहुः—சான்றோர் கூறுகிறார்கள். தேவர்கள் ஸம்பூர்ண யாகத்தை யனுஷ்டித்து ஸ்வர்கத்தை அடைந்தார்கள். அங்கங்களின் குறைவான அனுஷ்டானத்தால் அஸுரர்கள் பலனை அடையவில்லை. ஆகையால் அங்கானுஷ்டானக் குறைவால் யாக பலன் (அஸுரர்களை) சத்ருவை அடையும். பூர்ணானுஷ்டானத்தால்தான் யஜமானனுக்கு பலன் கிடைக்கும். ஒரு ருத்விக்குக்கு மறந்த அங்கத்தை மற்ற ருத்விக் ஞாபகப்படுத்தினால் சொன்னவனுக்கு பாபம் உண்டு என்றிருப்பதால், யாகத்தை பூர்ணமாக அனுஷ்டிப்பதற்கு ஓர் உபாயம் கூறப்படுகிறது. அதாவது யாகத்தை தரிசினம் செய்யும் ருத்விக் இல்லாத யாகப்ரயோகம் தெரிந்த சான்றோர் விட்டுப்போன அங்கத்தை ஞாபகப்படுத்தலாம். அவர்களுக்கு பாபம் கிடையாது. யாகமும் பூர்த்தியடையும் என்று. ப்ரயோகம் தெரிந்த தரிசனம் செய்பவர் இல்லாவிடில் ஸதஸ்ஸிலுள்ளவர்களே ஞாபகப்படுத்தலாம். அல்லது யஜமானனே ஞாபகப்படுத்தலாம். எவ்விதத்திலும் யாகம் அங்கஹீனமாக செய்யக் கூடாது. இந்த தினம் ஜாக்கிரதையாக ப்ரயோகத்தை அனுஷ்டிக்க வேண்டிய தினம் எனப்படுகிறது.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

மானஸக்ரஹ சமயத்தில் सर्वराज्ञी எனப்படும் மந்திரத்தை, பூஜிப்பவர், பூஜிக்கப்படுபவர் என்ற இருவரும் உள்ள இப்பூமி ஸர்ப்பராக்ஞீ எனப்படுகிறது. भूमिर्भूम्ना என்ற மந்திரத்தால் ஸ்தோத்ரம் செய்ய வேண்டும். ஸ்தோத்ரம் செய்யும் ஸாமகர்கள் ஷி இருவித மனிதர்களேயும் அடைகிருர்கள். இந்த ஸ்தோத்ரத்தை மற்ற ஸ்தோத்ரம் போல் வாயால் உச்சரிக்கக் கூடாது. மனதால் நினைக்க வேண்டும். குதிரை பூட்டிய ரதமோ, கோவேரி கழுதை கட்டிய ரதமோ அவ்வளவு சீக்கிரமாக பூமி முழுவதும் சென்று வரமுடியாது. ஆனல் மனது ஒரு நொடியில் உலகம் முழுவதும் வ்யாபிக்க முடியும். அதுபோல் ருக்குகள், யஜுஸ்ஸுகள், ஸாமங்கள் மூன்றுமே பரிமிதமானவை, ஆனல் ब्रह्म எனப்படும். चतुर्होतृ முதலிய ஹோத்ரு மந்திரங்களே ஹோதா சொல்ல வேண்டும். அப்பொழுது அத்வர்யு ஹோதாவை உத்ஸாஹப்படுத்த (ओं हू அல்லது एवा என்று) ப்ரதிகரம் சொல்ல வேண்டும்.

अनुवाकः २—ब्रह्मवादिनो वदन्ति

இதில் த்வாதசாஹத்தின் பெருமை கூறப்படுகிறது. முதல் ஸுத்யாஹஸ் அனுஷ்டானத்தால் யஜமானன் ருத்விக்குகளின் தேஜஸ்ஸையும் இந்திரிய பலத்தையும் அடைகிருன். இதுபோல் மீதியுள்ள 11 ஸுத்யாதின அனுஷ்டானத்தால்,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ப்ராணன், ஜீரணசக்தி, போக்யம், அன்னம், மூவ்வுலகம், நாலுகால் ப்ராணிகள், பங்க்திச் சந்தஸ்ஸின் பலன், 6 ருதுக்கள் சக்வரீ சந்தஸ்ஸின் பலன், காயத்ரியின் பலன், த்ருவ்ருத்ஸ்தோமத்தின் பலன், விராட்சந்தஸ்ஸின் பலன், த்ருஷ்ருப் சந்தஸ்ஸின் பலன், ஜகதீ சந்தஸ்ஸின் பலன் என பலவிதமான பயன்களை அடைகிறான்.

अनुवाकः ३—एष वा आप्तः

இதில் त्रयोदशरात्रः என்ற ஸத்ரயாகம் விதிக்கப்படுகிறது. இது பூர்ணமான த்வாதசாஹத்திற்கு ஸமானம், த்வாதசாஹம் போலவே முதலிலும் கடைசியிலும் ப்ராயணீயாஹஸ் "उदयनीयाहस्" உள்ளன. இந்த யாகத்தில் अतिरात्रयागः முதலிலும் 8வது நாளிலும் கடைசியிலும் உள்ளது. மூன்று அதிராத்ரம் இருப்பதால் முவ்வுலகத்தையும் அடையலாம்.

இதில் 13 ஸுத்யாஹஸ் உள்ளது. 1. அதிராத்ரஸோமயாகம் 2-7 ப்ருஷ்டயஷடஹம் என்ற ஆறு ஸோமயாகங்கள், 8வது தினம் எல்லா ஸ்தோமங்களுடன் கூடிய அதிராத்ர ஸோமயாகம். 9, 10, 11, 12 தினங்களில் சந்தோமங்கள் என்ற ஸோமயாகம். 13வது தினம் அதிராத்ர ஸோமயாகம் என 13. இந்த யாகங்கள் ப்ராணன், அபானன் முதலியவைகளுக்கு சமம். பூர்ண ஆயுஸ் பலன். இதை யறிந்து த்ரயோத

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

சராத்ர யாகத்தை அனுஷ்டிப்பவன் ஷ்டி பலனை யடைவான், த்வாதசாஹம் என்பது விஸ்தீர்ண மான வாக் ஸ்வரூபமாகும். த்ரயோதசராத்ரத்தில் 8வது நாள் அதிராத்ர யாகம் செய்வது வாக் விச்சின்னமாக காரணமாகும். ஆகையால் 12வது ஸுத்யாதினத்தன்று ஸர்வஸ்தோமக அதிராத் ரம் செய்வதுதான் உசிதம் என வேதம் கூறு கிறது. அதனால் யஜமானனின் வாக்கு குறையா மல் இருக்கும். छन्दोम யாகங்கள் பசுக்களுக்கு சமானம். महाव्रतं அன்னத்திற்கு சமம். ஆகையால் महाव्रतமுள்ள அதிராத்ர யாகத்தை 12வது நாளில் தான் செய்வது உசிதமாகும் என வேதம் கூறு கிறது.

अनुवाकः ४—अदित्या अकामयन्त

இதில் चतुर्दशरात्रः என்ற ஸத்ரயாகம் சொல்லப் படுகிறது. ஆதித்யர்கள் (தேவர்கள்) இவ்வுல கம், விண்ணுலகம் இரண்டிலும் ஸம்ருத்தியை அடைய வேண்டும் என விரும்பினார்கள். அவர் கள் சதுர்தசராத்ர யாகத்தை கண்டுபிடித்தனர். பிறகு அதற்குரிய ஸாமக்ரியைகளை சம்பாதித்து அந்த யாகத்தை செய்து இருவுலகிலும் ஸம்ருத் தியை அடைந்தனர். ஆகையால் இவ்வுலகிலும் மறு உலகிலும் ஸம்ருத்தியை விரும்புவன் चतुर्दशरात्र என்ற ஸத்ரயாகத்தை அனுஷ்டிக்க வேண்டும். க்ராம்ய பசுக்கள் 7. ஆரண்ய பசுக்கள் 7, இவ் விரண்டையும் அடையலாம், இதில் 14 ஸுத்யா

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஹஸ் உள்ளது. 1வது 14வது நாள் அதிராத்ர யாகங்ககள் 2—7 முடிய முறையே, த்ருவருத் (9 தடவை) 15, 17, 21, 27, 33 ஸ்தோமங்கள் கொண்ட ஷடஹயாகங்கள். 8-13 முடிய 6 நாள் முறையே 33, 27. 21, 17, 15, 9 ஸ்தோமங்கள் கொண்ட ஸோமயாகம். இதில் 33 ஸ்தோமங் கள் கொண்ட இரு யாகங்கள் சேர்ந்தால் போல் இருப்பதால் யஜமானன் ஸாம்ராஜ்யத்தை அடை வான்.

अनुवाकः ५—प्रजापतिः सुवर्गं

இந்த அனுவாகத்திலும் வேறு ஒரு விதமான சதுர்தசராத்ர யாகம் விதிக்கப்படுகிறது. ப்ரஹ்மா ஸ்வர்கத்தை அடைந்தார். அவரைப் பின்தொடர்ந்து எல்லா தேவர்களும் ஸ்வர்க் கத்தை அடைந்தார்கள். அவர்களைப் பின்பற்றி ஆதித்யர்களும், பசுக்களும் ஸ்வர்க்கத்திற்கு சென்றனர். அப்பொழுது மனிதர்களும், தேவர் களும் எந்த பசுக்கள் மூலம் உயிர் வாழ்கிறோமோ அவைகளும் ஸ்வர்க்கத்திற்கு வந்துவிட்டன. ஆதித்யர்கள் ஸ்வர்க்கத்திற்கு செல்லட்டும். பசுக்கள் பூலோகத்திற்கு செல்லவேண்டுமென எண்ணி அதற்கு உபாயமாக சதுர்தசராத்ர யாகத்தை கீழ்கண்ட முறையில் கண்டனர்.

1) 14வது ஸுத்யா தினத்தில் அதிராத்ர ஸோமயாகம் 2, 3, 4வது தினங்களில் ஜ்யோதிஷ்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

டோமம், கோஷ்டோமம் ஆயுஷ்டோமம். என மூன்று ஸோம யாகங்கள், 5, 6. 7, 8, 9, 10வது தினங்களில் ப்ருஷ்ட்யஷடஹ யாகம் 11, 12, 13 வது தினங்களில் आयुष्टोम: கோஷ்டோமம், ஜ்யோதிஷ்டோமம் என மூன்று ஸோமயாகங்கள். ஷடஹ யாகத்தால் ஆதித்யர்கள் ஸ்வர்கத்திற்கு சென்றனர். ஜ்யோதிஸ் முதலிய மூன்று யாகங்களை ஆரோஹணம் அவரோஹணம் என்ற முறையில் செய்ததால் பசுக்கள் பூலோகத்தையடைந்து ஸம்ருத்தியை அடைந்தன, இதையறிந்து இந்த சதுர்தசராத்ர ஸத்ரயாகத்தை அனுஷ்டிப்பவர் இரு உலகிலும் ஸம்ருத்தியை அடைகின்றனர்.

ப்ருஷ்ட்யஷடஹம் நடுவில் அமைந்திருப்பது யாகத்தின் பாரம் சமமாக இருப்பதை தெரிவிக்கிறது. த்வாதசாஹத்தில் ஆறுவித ஸாமாக்கள் கொண்டது ஷடஹயாகம். இங்கு रथंतरसाम 1, 3, 5 வது நாளில் கானம் செய்யவும். ஷடஹத்தின் 2, 4, 6வது தினங்களில் बृहत्साम கானம் செய்யவும். 10 ஸாத்யாஹஸ்ஸாகளால் யஜமானன் அன்ன ஸம்ருத்தியை அடைகிறான். மீதி நான்கு ஸாத்யாஹ யாகங்களால் நான்கு திக்குகளிலும் ப்ரதிஷ்டை அடைகிறான்.

अनुवाक: ६—इन्द्रो वै

இதில் पञ्चदशरात्र: என்ற யாகம் விதிக்கப்படுகிறது. முன்பு இந்திரன் தேவர்களுக்கு தலைவ

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ணுக இல்லாமல் மற்ற தேவர்களுக்கு சமமாகவே கருதப்பட்டான், அப்பொழுது இந்திரன் ப்ரஹ்மாவின் உபதேசப்படி பஞ்சதசராத்ர யாகத்திற்கு வேண்டிய ஸாதனங்களை சம்பாதித்து யாகம் செய்தான். அதன் பலனுக இந்திரன் மற்ற தேவர்களைவிட சிறந்தவனுக ஆனுன். இதை யறிந்து இந்த யாகம் செய்யும் யஜமானன் பாபத்திலிருந்து விடுபடுகிருன். இதில் 15 ஸுத்யாஹஸ் உள்ளது.

1வது, 15வது ஸுத்யாதினத்தில் அதிராத்ர யாகங்கள், 2. 3. 4வது ஸுத்யாஹஸ்ஸுகளில் ஜ்யோதிஷ்டோம யாகம், கோஷ்டோமஸோம யாகம், ஆயுஷ்டோம ஸோமயாகம் செய்ய வேண்டும். பிறகு ப்ருஷ்ட்யஷடஹ யாகங்கள் 6. சந்தோம யாகங்கள் 4 என பஞ்சதசராத்ர ஸத்ர யாகத்தின் விவரங்கள். சந்தோமயாகம் உள்ள ஸத்ரயாகம்தான் சிறந்தது. ஜ்யோதிராதி மூன்று யாகங்களால் முவ்வுலக ப்ராப்திபலன். ஷடஹ யாகத்தால் ஓஜஸ், வீர்யமும், சந்தோம யாகங்களால் பசு ஸம்ருத்தியும் பலனுக கிடைக்கும். பஞ்சதசஸ்தோமக யாகம் வஜ்ராயுதத்திற்கு சமம் வஜ்ராயுதத்தை யஜமானன் சத்ருக்களை நோக்கி. ஏவுகிருன். அதிராத்ர யாகங்களால் இந்திரிய லாபம். பலன்.

अनुवाक: ७—इन्द्रो वै शिथिल:

இதில் மற்றுமொரு பஞ்சதசராத்ர யாகம் சொல்லப்படுகிறது. ஒரு சமயம் இந்திரன் வலிமை

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

யற்றவனாக ஆனான். அவன் ப்ரஹ்மாவிடம் சென்று அஸுரர்களிடமிருந்து பயப்படுவதாக கூறினான். ப்ரஹ்மா இந்திரனுக்கு வஜ்ராயுதம் போன்ற இந்த பஞ்சதசராத்ர யாகத்தை அளித்தார்.

இந்திரன் இந்த யாகத்தை அனுஷ்டித்து அதன் மூலம் அஸுரர்களை ஜயித்து ராஜ்ய லக்ஷ்மியை அடைந்தான். பாபத்தை அழித்து, ஓஜஸ், பலம், இந்திரிய சக்தி, வீர்யம் இவைகளைப் பெற்றான். இதையறிந்து இந்த பஞ்சதச ராத்ர ஸத்ரயாகத்தை செய்யும் யஜமானர்கள் சத்ருக்களை ஜயித்து, பாபத்தை அக்னிஷ்டுத் யாகத்தால் அழித்து ஓஜஸ், பலம், இந்திரிய சக்தி, வீர்யம் இவைகளை அடைவார்கள். 15 ராத்ரிகள் கொண்ட ½ மாதம், முறையே (24 ஆனவுடன்) வருடமாக ஆகிறது. பசுக்களும் 1 வருடம் கர்ப்பவாஸம் செய்து பிறக்கின்றன. ஆகையால் பசு ப்ராப்தி பலன். மேலும் வருடத்தில் வஸந்த ருது இருப்பதால் அப்பொழுது யாக காலமானதால் ஸ்வர்க ப்ராப்தி பலன். 1, 15வது ஸுத்யாதினத்தின் அதிராத்ர யாகங்கள். 2 வது நாள் அக்னிஷ்டுத் யாகம். 3, 4, 5 வது நாட்களில் ஜ்யோதிஷ்டோமம், கோஷ்டோமம், ஆயுஷ்டோமம் என மூன்று யாகங்கள். 6 முதல் 11 வரை, ப்ருஷ்ட்யஷடஹ யாகங்கள். 12, 13, 14 வது தினங்களின் முறையே

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஆயுஷ்டோமம், கோஷ்டோமம், ஜ்யோதி ஷ்டோமம் என மூன்று யாகங்கள். 6, 8, 10வது நாட்களில் रथंतर साम கானம். 7, 9, 11வது நாட் களில் बृहत्साम கானம். இந்த பஞ்சதச ராத்ர யாகானுஷ்டானத்தால், இந்திரிய் சக்தி, வீர்யம், பசுக்கள், ஸத்ப்ரஜைகள் கிடைக்கும்.

अनुवाकः ८—प्रजापतिरकामयत

இதில் सप्तदशरात्र யாகம் விதிக்கப்படுகிறது. ப்ரஹ்மா தான் அன்ன ஸம்ருத்தியுள்ளவனுக ஆகவேண்டும் என நினைத்தார். அப்பொழுது அவர் ஸப்ததசராத்ர யாகத்தை பார்த்தார். பிறகு அதற்குரிய ஸாமக்ரியைகளை சம்பாதித்து யாகத்தை செய்து அன்ன ஸம்ருத்தியுள்ளவராக ஆனார். இதையறிந்து இந்த யாகத்தை செய்யும் யஜமானர்கள் அன்ன ஸம்ருத்தியை அடைவார் கள். இதில் 17 ஸுத்யாஹஸ்ஸுகள் உள்ளன. 17வது நாள் அதிராத்ர யாகங்கள். 2 முதல் 6 வரை ஜ்யோதிஷ்டோமம், கோஷ்டோமம், ஆயுஷ் டோம யாகங்கள், 7 முதல் 12 வரை, ப்ருஷ்ட்ய ஷடஹ யாகங்கள், 13 முதல் 16 வரை நான்கு சந்தோம யாகங்கள் என 17 ஸுத்யா தினங்கள். இதன் பலன் அன்ன ஸம்ருத்தியாகும்.

अनुवाकः ९—सा विराट्

இதில் विरात्रिरात्रः என்ற யாகம் விதிக்கப்படு கிறது. தசராத்ராபிமானி தேவதை விராட்ரூபத்

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

துடன் அம்சத்தினால் தேவர்களிடத்தில் ப்ரஹ்ம வர்சஸ் ரூபமாகவும், அஸுரர்களிடத்தில் அன்ன ரூபமாகவும் இருந்தது. தேவர்கள் இரண்டையும் அடையவிரும்பி விம்சதிராத்ரம் என்ற யாகத்தை கண்டனர். இதை யனுஷ்டித்து ப்ரஹ்மவர்சஸ், அன்னம் இரண்டையும் அடைந்தனர். இந்த ஸத்ர யாகத்தை அனுஷ்டிப்பவர்களுக்கு ஷ இருவித பலன்களும் கிடைக்கும். புருஷனுடைய கை, கால் விரல்களுக்கு சமமான 20 யாகங்களால் எல்லா வித பலன்களையும் அடையலாம். இதில் 20 ஸுத்யா தினங்கள் உள்ளன. 1, 20வது நாள் அதிரத்ர யாகங்கள். 2 முதல் 10 வரை ஜ்யோதிஷ் டோமம், கோஷ்டோமம், ஆயுஷ்டோமம் மூன்றையும் மூன்று முறை செய்யவேண்டும். 11 முதல் 16 வரை ப்ருஷ்ட்யஷடஹ யாகங்கள். 17, 18, 19 தினங்களில், ஆயுஷ்டோமம், கோஷ்டோமம், ஜ்யோதிஷ்டோமம் என 3 யாகங்கள். மொத்தம் 20 ஸுத்யாதினங்கள். ஷடஹயாகத்தில் 1, 3, 5 தினங்களில் रथंतरसाम கானம். 2, 4, 6வது தினங்களில் बृहत्साम கானம்.

अनुवाकः १०—असावादित्योऽस्मिन्

இதில் एकविंशतिरात्रः என்ற யாகம் விதிக்கப் படுகிறது. இதில் 21 ஸுத்யாதினங்கள் உள்ளன. உபாக்யானம் மூலம் அது விளக்கப்படுகிறது. 1, 21 வது நாள் அதிராத்ர யாகங்கள். 2 முதல் 7 வரை पृष्ठ्यषडह् யாகங்கள். रथंतरसाम, बृहत्साम, वैरूपसाम,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

वैराजसाम, शाक्वरसाम, रैवतसाम என 6 ஸாமாக்கள் 6 நாள்களில் க்ரமமாக பாடப்படுகின்றன. 8, 9, 10 வது ஸுத்யா தினங்களில் 3 स्वरसामन: (स्वरसाम என்ற கானத்தை உடையது) என்ற யாகங்கள். 11வது நாள் "दिवाकीर्त्यं साम" என்ற ஸாமகானத்துடன் யாகம் செய்யவேண்டியது. 12, 13, 14வது தினங்களில் மறுபடியும் स्वरसामान: என்ற யாகங்கள். 15 to 20 வரை மறுபடியும் ப்ருஷ்ட்யஷடஹ யாகங்கள் அவரோஹண க்ரமமாக रैवत, शाक्वर, वैराज, वैरूप, बृहत्, रथंतरं என்ற முறையில் ஸாம கானத்தை செய்து யாகங்கள், ஆகமொத்தம் 21 ஸுத்யா தினங்கள் கொண்ட இந்த யாகத்திற்கு एकविंशतिरात्र सत्र யாகம் எனப்பெயர்.

ஷ உபாக்யானம் மூலம் விளக்கப்படுகிறது. இன்று மேலே காணப்படும் சூரியன் இப்பூமியில் இருந்தான். அவரை தேவர்கள் ப்ருஷ்ட்யஷடஹ யாகத்தின் மூலம் ஸ்வர்கத்தை அடையச் செய்தனர். அடுத்த स्वरसामान: (ஸ்வரஸாமாக்கள்) என்ற மூன்று யாகங்களால் தேவர்கள் ஆதித்யனை ஸ்வர்கத்திலிருந்து கீழே நழுவி வராமல் தடுத்தனர். அதன்பிறகு दिवाकीर्त्यं என்ற யாகத்தால் ஆதித்யனை ஸ்வர்கத்தில் ப்ரதிஷ்டை செய்தனர். அடுத்த மூன்று ஸ்வரஸாம யாகங்களால் ஆதித்யனை ஸ்வர்கத்திற்கும் மேலே செல்வதிலிருந்து தடுத்தனர், பிறகு पृष्ट्यषडह யாகங்களால் தேவர்கள் கீழே இறங்கினர். ஆகாயத்தில் காணப்படும்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஆதித்யன் மேற்சொன்னபடி இருபுறமும் ஸ்வர ஸாம யாகங்களால் ஸ்வர்கத்திலேயே, அதற்கு மேலும் கீழும் போகாமல் நிலையாக இருக்கச் செய்தனர். இந்த ஸத்ரயாகத்தை செய்யும் யஜமானர்களும் ஆதித்யனைப் போலவே மேலும் கீழும் போகாமல் ஸ்வர்கத்தில் ப்ரதிஷ்டையை அடைவார்கள்.

திவாகீர்த்ய யாகத்திற்கு முன்பு மூன்று ஸ்வரஸாம யாகங்கள், இல்லாவிடில் ப்ருஷ்ட்ய ஷடஹ யாகத்தால் ஸ்வர்கத்தையடைந்த யஜமானர்கள் அதற்குமேலே செல்வார்கள். அதே போல் திவாகீர்த்யத்திற்கு பிறகு மூன்று ஸ்வர ஸாமாக்கள் இல்லாதிருந்தால் ஸ்வர்க்கத்திலிருந்து கீழே நழுவுவார்கள். இருபுறத்திலும் ஸ்வர ஸாம யாகங்கள் இருப்பதால்தான் யஜமானர்கள் ஸ்வர்கத்திலேயே ஸ்திரமாக இருக்கிறார்கள். திவாகீர்த்ய யாகம் ப்ருஷ்ட (பின்புறம்) பாகமாகவும் இருபுறமுள்ள ஸ்வரஸாமாக்கள் இரு பக்கமாகவும் வர்ணிக்கப்படுகின்றன, திவாகீர்த்ய தினத்தில் 7 அதிக்ராஹ்ய க்ரஹங்கள் க்ரஹிக்கப்படுகின்றன. இதனால் யஜமானர்களிடத்தில் ப்ராணன்களை நிலைக்கச் செய்ததாக ஆகும். ப்ருஷ்ட்யஷடஹ யாகம் இரண்டாவது தடவை அவரோஹ க்ரமத்தில் செய்யவேண்டும். இல்லாவிடில் யஜமானர்கள் இவ்வுலக நடவடிக்கைகளை மறந்து பைத்தியமாகவோ, அல்லது

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இறந்தோ விடுவார்கள். மாற்றி அனுஷ்டித்தால் அவர்களுக்கு இவ்வுலக ஞாபகம் வரும்.

இவ்வுலகில் பைத்தியமில்லாமல் நல்ல ஸ்திரத் தன்மையுடன் இருப்பார்கள். இவ்வாறு ஸ்வர்கத்தையடைதல் இதற்கு பலன். ப்ரஹ்மாவின் உபதேசப்படி இந்திரன் இந்த ஸத்ரயாகத்தை செய்து ப்ரதிஷ்டையை அடைந்தான். 12 மாஸங்கள், 5 ருதுக்கள், மூவ்வுலகங்கள், சூரியன் எனப்படும் இந்த 21ன்றின் அபிமானி தேவதைகளின் ஸ்தானங்களில் இந்த யாகத்தை செய்யும் யஜமானர்கள் ப்ரதிஷ்டையை அடைவார்கள். அதாவது ஷே இடங்களிலுள்ளவர்கள் ஸ்திரமாக அங்கு இருப்பது போல் யஜமானர்களும் இங்கு ஸ்திரமாகவும், பிரஸித்தர்களாகவும் இருப்பார்கள். முன்பு ஒரு சமயம் ஆதித்யன் ஸ்வர்பானு என்ற அஸுரனால் அல்லது மேகாதிகளால் மறைக்கப்பட்டு ப்ரகாசமிழந்தான், அப்பொழுது ப்ரஹ்மாவின் உபதேசப்படி एकविंशतिरात्रं என்ற இந்த யாகத்தை செய்து ப்ரகாசத்தை அடைந்தான். அதுபோல் கல்வி, செல்வம் இவைகளின் குறைவால் பிரகாசிக்காத யஜமானர்கள் இந்த யாகத்தை செய்தால் ஜனங்களிடையே கல்வியிலும் செல்வத்திலும் மிகுந்து சிறந்து விளங்குவார்கள்,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

अनुवाकः ११—अर्वाङ्यज्ञः

இது முதல், ப்ரச்னம் முடிய 10 அனுவாகங்களில் அச்வமேத யாகத்திற்குரிய மந்திரங்கள் கூறப்படுகின்றன. இதில் ஆப்தி என்ற 8 ஆஹுதிகளுக்குரிய மந்திரங்கள் உள்ளன. இதன் பொருள். ரிஷிகள் முன்பு எல்லாவற்றிற்கும் ஸாதனமாக வைக்கப்பட்டுள்ள அச்வமேத மஹா யக்ஞம் யஜமானனுை என்முன் வரட்டும். என்னை த்வேஷிப்பவன் தேவதா விச்வாஸம் இல்லாதவனுகவும், வீரர்களான புத்ரர்கள் இல்லாதவனுகவும் ஆகட்டும். அவனிடம் யக்ஞத்தின் அழுக்கு போய் சேரட்டும், ஜீவனம் முழுவதும் வட்டியால் ஜீவிப்பவனுக ஆகட்டும், ஹே அச்வமேத யக்ஞமே, யாக (பயன்) பலத்துடன் என்னை (யஜமானன்) வந்தடைவாயாக. நன்கு அனுஷ்டிக்கப்பட்ட அச்வமேத யாகத்தின் அனுக்ரஹத்தால் நான், ப்ராஹ்மணர்களையும், ஸதஸ்யர்களையும் ருத்விக்குகளையும் இந்த யாகத்திற்கு அழைக்கிறேன்.

ஹே யக்ஞமே, உன்னை உபாஸித்ததின் மூலம் பக்வமான அன்னத்தை அழைக்கிறேன். உனது அனுக்ரஹத்தால் புண்ணியத்தை ஸம்பாதிக்கிறேன். யக்ஞத்தின் அங்கயாகங்களை அனுஷ்டித்து அதன் பலனையும் அடைவேன். அக்னி முதலிய தேவர்களுக்கு வஷட்கார மூலம் ஆஹுதிகளை அளிப்பேன். ஸ்தோத்ர சஸ்திராதி

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

களை செய்து அதன் பலனான ஸ்வர்கத்தை சம்பாதிப்பேன். இந்த யக்ஞம் பூர்த்தியடைய எல்லா தேவர்களையும் இந்திரனுடன் அழைக்கிறேன்.

अनुवाकः १२—भूतं भव्यं

पर्याप्ति என்ற ஹோம மந்திரங்கள் இதில் கூறப்பட்டுள்ளன. முக்காலம், மூன்று வேதங்கள்; காயத்ரீ முதலிய மூன்று சந்தஸ்ஸுகள், முவ்வுலகம், அக்னி, வாயு, ஸூர்யன் என மூன்று தேவதைகள், ப்ராண, அபான, வ்யான அபிமானி தேவதைகள், அன்னம், கிருஷி செய்தல், மழை, பிதா, புத்ரன், பௌத்ரன், மஹாவ்யாஹ்ருதிகள் இவைகளுக்கு நமஸ்காரம். இவர்களுக்கு ஹவிஸ் அளித்ததாக ஆகட்டும்.

अनुवाकः १३—आमे गृहाः

இதில் आभू என்ற ஹோமமந்திரங்கள் உள்ளன. நல்ல க்ருஹம் (வீடு), நல்லப்ரஜை பயனுள்ள யாகங்கள், யக்ஞஸாதனமான ஜல தேவதைகள் என்னை வந்தடையட்டும். ஸோம யாகத்திற்கு வேண்டிய க்ரஹபாத்திரங்கள் ஸ்தோத்ர சஸ்திரங்கள், ஆதித்யாதி தேவர்களும் என்னை வந்தடையட்டும். அக்னிஷ்டோமம், உக்த்யம், அதிராத்ரம் போன்ற ஸோம யாகங்கள் என்னை வந்தடையட்டும். பெருஞ்செல்வம் என்னிடம் (விட்டு அகலாமல்) நிலையாக இருக்கட்டும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

अनुवाक: १४—अग्निना तपोऽन्वभव

अनुभू என்ற ஹோம மந்திரங்கள் இதில் உள்ளன. 24 மந்திரங்கள். இந்த யஜமானன் அக்னிரூபமாக ஆகி எல்லா தபஸ்ஸையும் அடைகிறான். யஜமானன் வேதாத்மகமான வாக்கால் மந்திரங்களையும், ரத்னங்களால் ப்ரதிபிம்பங்களைம், இந்திரனால் தேவர்களையும், காற்றால் பஞ்ச ப்ராணன்களையும், சூரியனால் ஆகாயத்தையும், சந்திரனால் நக்ஷத்திரங்களையும், யமனால், பித்ருக்களையும், ராஜாவினால் மனிதர்களையும், பழத்தால் ரஸத்தையும், மலைப்பாம்பால் ஸர்பங்களையும், புலியால் காட்டுமிருகங்களையும், கழுகால் பக்ஷிகளையும், முதிர்ந்த குதிரையால் குதிரைகளையும், காளையால் பசு மாடுகளையும், ஆண் வெள்ளாட்டால் பெண் வெள்ளாடுகளையும், ஆண் செம்மாரியாட்டால் பெண் செம்மறியாடுகளையும், நெல் தான்யத்தால் அன்னங்களையும், யவைதான்யத்தால் ஒஷதிகளையும், ஆலமரத்தால் மரங்களையும் அத்தியால் பலத்தையும், காயத்ரியால் சந்தஸ்ஸுகளையும், த்ருவிருத் என்ற ஸ்தோமத்தால் மற்ற ஸ்தோமங்களையும், ப்ராஹ்மணனால் வேதத்தையும் அடைகிறான் யஜமானன்.

अनुवाक: १५—स्वाहाऽधि

இதில் वैश्वदेवाहुति மந்திரங்கள் உள்ளன. இதன் பொருள் புத்தியின் அபிமானி தேவதைக்கும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

மறக்காமல் நினைவில் வைத்துக்கொள்ளும் சக்தி யுள்ள மனதிற்கும், மனதை தூண்டுபவரான ப்ரஜாபதி தேவதைக்கும் ஹவிர்பாகம் அளிக்கப் பட்டதாக இருக்கட்டும். ப்ரஹ்மா சாஸ்திர நிர்தாரணமூர்த்தி இவர்களுக்கு ஹவிஸ் அளிக்கப் பட்டது. பூ ஸுகத்தையளிக்கும் பூமி தேவிக்கு ஹவிஸ் அளிக்கப்பட்டது, எல்லாவற்றையும் சுத்தமாக்குகின்ற ஸரஸ்வதி தேவிக்கு ஹவிஸ். பூஷா, த்வஷ்டா, விஷ்ணு முதலிய தேவர்களுக்கு ஹவிஸ் அளிக்கப்பட்டது. எல்லாவிதத்திலும் ரக்ஷகராக இருப்பவருக்கு ஹவிஸ் அளிக்கப் பட்டது.

अनुवाकः १६—दद्भ्यः स्वाहा

இதில் (குதிரை) பசுவினுடைய அங்க ஹோமங்கள் சொல்லப்படுகின்றன. அங்கங் களின் பெயர்கள் சொல்லப்பட்டுள்ளன. அந்த அங்காபிமானி தேவதைகளுக்கு ஹவிஸ் அளிக் க்ப்பட்டது. அங்கங்களின் பெயர்கள் கொடுக்கப் படுகின்றன, இதில் 50 அவயவங்கள் உள்ளன. பற்கள், கடைவாய் பற்கள், உதடுகள், முகம், மூக்கு, கண்கள், காதுகள், கண் இமையின் மயிர் கள், தலை, புருவங்கள். நெற்றி, முன்தலை, பின் தலை, கேசம், ரதத்தை சுமக்கும் பாகம், கழுத்து நரம்புகள், தோள்கள், பின்புற எலும்பின் முடிச்சு கள், முதுகு, ஹ்ருதயம், இருபக்கங்கள் தோள் பட்டைகள், தோளின் பக்கம் உள்ள கைகளின்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

சேருமிடங்கள் பாஹுக்கள், குதிகால்கள், சப்பைகள், தொடைகள், அபானவாயு வெளிவரும் இடம், பிடரிமயிர், வால், அண்டம், ஆண்குறி, ரேதஸ் குட்டிகள், ப்ரஜனன சக்தி, பாதங்கள், குளம்புகள், ரோமாக்கள், தோல், இரத்தம், மாம்ஸம், நரம்புகள், எலும்புகள், கொழுப்புகள், மீதி சொல்லப்படாத அவயவங்கள், ஜீவாத்மா எல்லா உறுப்புகளுக்கும் ஹவிஸ் அளித்ததாக இருக்கட்டும்.

अनुवाक: १७—अञ्ज्येताय स्वाहा

அச்வத்தின் ரூபங்களைச் சொல்லும் மந்திரங்கள். இவைகளால் ரூபாபிமானி தேவதைகளுக்கு ஹவிர்பாகம் அளித்ததாக ஆகட்டும். விசித்ர நிறம், வெளுப்புகலந்த சிவப்பு வெள்ளைக்கால், வெள்ளை திமில், வெள்ளை காது, மூக்குகள், வெள்ளை முதுகு, வெள்ளைத்தோள், புஷ்பம் போன்ற காதுகள், வெள்ளை உதடு, வெள்ளை புருவம், வெள்ளையான குதப்ரதேசம், வெள்ளை கண்கள் ப்ரதேசங்கள், சரீரம் முழுவதும் வெள்ளை, வெள்ளை நெற்றிச் சுழி முதலிய அவயவங்கள் கொண்ட அச்வாபிமானி தேவதைக்கு ஹவிஸ் அளித்ததாக ஆகட்டும்.

अनुवाक: १८—कृष्णाय स्वाहा

இதில் அச்வரூபங்கள் கூறப்பட்டுள்ளன. கருப்பு, வெள்ளை, கோரோசனைக்கலர், சாதகபக்ஷி

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

நிறம் இலேசான சிவப்பு, மிகவும் வெண்மை, கீரியின் நிறம், மஞ்சள் கலந்த சிவப்பு, மஞ்சள் கலந்த கறுப்பு, நீலநிறம், நல்ல கறுப்புபோன்ற பலவித நிறமுள்ள குதிரையின் அபிமானி தேவதைக்கு ஹவிஸ் அளிக்கப் பட்டது.

अनुवाकः १९—ओषधीभ्यः स्वाहा

செடி கொடிகளின் அபிமானி தேவதைகளுக்கு ஹோமம் செய்யும் மந்திரங்கள் இதில் உள்ளன. செடி கொடிகள், வேர்கள், மேல்தண்டு, அடித்தண்டு, கிளை பிரியும் இடம் புஷ்பங்கள், பழங்கள், பிராணிகளால் உபயோகப்படுத்தப்பட்டவை, உபயோகப்படுத்தப்படாதவை, கிளையிலுருந்து முறிந்து விழுந்தவை, கீழேவிழுந்த பெருங்கிளைகள், மற்றுமுள்ள எல்லா உறுப்புகளுமுடைய செடி கொடிகளின் அபிமானி தேவதைக்கு ஹவிர்பாகம் அளிக்கப்பட்டது.

अनुवाकः २०—वनस्पतिभ्यः स्वाहा

இதில் மரங்களின் உறுப்புகள் கூறப்பட்டுள்ளன. அதன் அபிமானி தேவதைகளுக்கு ஹவிஸ் அளித்ததாக இருக்கட்டும் என்பது கருத்து பெரிய மரங்கள்; வேர், நுனிமரம், கிளைகள் பிரியும் சந்திகள், கிளைகள், இலைகள், புஷ்பங்கள், பழங்கள், பிராணிகளால் உபயோகப்படுத்தப்பட்டது, உபயோகப்படுத்தப்படாதது, கீழே விழுந்த கிளைகள், கர்மாவில் உபயோகப்படாத மீதி பாகம், உலகில்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

உபயோகப்பட்டு மீதியுள்ளது, உபயோகப்படுத்திய மிச்சம் (उच्छिष्टः) பழங்களே இல்லாதவை, பழங்கள் உள்ளவை, இலைகளற்றவை, புஷ்பம், பழம், இலைகளுடன் எப்பொழுதும் இருப்பவை, என எல்லாவித மரங்களின் அபிமானி தேவதைகளுக்கு ஹவிஸ் அளிக்கப்பட்டது.

நான்காவது ப்ரச்னம்

இதில் ஸத்ரயாக விசேஷங்கள் கூறப்படுகின்றன.

अनुवाकः १—बृहस्पतिरकामयत

இதில் चतुर्विंशतिरात्रः என்ற ஸத்ரயாகம் விதிக்கப்படுகிறது. முன்பு, ப்ருஹஸ்பதி ஒரு சமயம் தேவர்களின் நம்பிக்கையை இழந்தார். ஆகையால் தேவர்களின் விச்வாஸத்தை பெற்று ஆசார்யராக விரும்பி चतुर्विंशतिरात्रः என்ற ஸத்ரயாகத்தைக் கண்டுபிடித்து அதற்குரிய ஸாமக்ரியைகளை ஸம்பாதித்து யாகத்தை முறைப்படி செய்தார். அதன் பயனாக ப்ருஹஸ்பதி தேவர்களின் விச்வாஸத்தை பெற்று, புரோஹிதஸ்தானத்தையும் அடைந்தார். இந்த யாகத்தை செய்பவன் மனிதர்களின் விச்வாஸத்திற்கு பாத்ரமாக புரோஹித ஸ்தானத்தை அடைவான். இதில் 24 ஸுத்யாதினங்கள் உள்ளன. 1, 24வது தினங்கள் அதிராத்ரயாகம். 2 முதல் 13வது நாள்வரை ஜ்யோதிஷ்டோமம், கோஷ்டோமம், ஆயுஷ்டோமம், இவை

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

களை இதே முறையில் நான்கு தடவை செய்ய வேண்டும். 14 முதல் 19 வரை ஷடஹ யாகங்கள், 14, 16, 18வது தினங்களில் रथंतरसाम கானம் 15, 17, 19வது தினங்களில் बृहत्साम கானம், 20 முதல் 23 வரை நான்கு ஸாத்யாதினங்களில் (छन्दोमाः) சந்தோம யாகங்கள், 24-பக்ஷங்கள் (15 நாட்கள்) கொண்டது 1 வருடம், ஸம்வத்ஸரம் ஸ்வர்கத்திற்கு சமம். ஆகையால் ஸ்வர்கலோகத்தில் ப்ரதிஷ்டையை அடைகிறுன். 24 என்பது காயத்ரியின் அக்ஷரத்திற்கு சமமாயிருப்பதால் "ப்ரஹ்ம வர்ச்சஸ்" என்ற பலனை அடைகிருன்.

अनुवाकः २—यथा वै मनुष्याः

இதில் வேறு விதமான चतुर्विंशतिरात्र யாகம் விதிக்கப்படுகிறது. முன்பு தேவர்கள் மனிதர்களைப் போலவே, பாபத்தின் பலனுன தாரித்ரியத்தை அடைந்தார். ஏழ்மையைப் போக்கி தேவஸம்பத்தான லக்ஷ்மியை அடைய விரும்பினர். அப்பொழுது தேவர்கள் இந்த சதுர்விம்சதிராத்ரம் என்ற யாகத்தை கண்டுபிடித்து அதை யனுஷ்டித்தனர். அதன் மூலம் ஏழ்மைக்கு காரணமான பாபம் நீங்கி தைவ ஸம்பந்தப்பட்ட ஸம்ஸதத்தை யடைந்தனர். லக்ஷ்மீகடாக்ஷத்தை பெற்றனர். அதற்குரிய புண்யத்தை சம்பாதித்தனர்.

இந்த யாகத்தைச் செய்யும் மனிதர்களும் ஏழ்மைக்கு காரணமான பாபம் நீங்கி புண்யத்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

தால் லக்ஷ்மீ கடாக்ஷத்தை அடைவார்கள். இதில் 24 ஸுத்யாதினங்கள் உள்ளன. 1வது நாள் அதிராத்ர ஸம்ஸ்தாக ஜ்யோதிஷ்டோம ஸோம யாகம். 2வது நாள் உக்த்ய ஸோம யாகம் 3 முதல் 8 வரை ஷடஹ யாகங்கள். 9, 15 17, 21, 27, 33 என்று கானங்களின் எண்ணிக்கையுள்ள ப்ருஷ்டஸ்தோத்ரம், முறையே செய்ய வேண்டும். 9வது நாள் அநிருக்தம் என்ற ஸாமகான முறைப் படி 33 கானங்கள் கொண்ட ப்ருஷ்டஸ்தோத்ரம். 10வது நாள் निरुक्तं என்ற முறைப்படி 33 ஸாம கானங்கள் கொண்ட ப்ருஷ்டஸ்தோத்ரம், 11,12, 13, 14வது தினங்களில் முறையே 27. 21, 21, 27 ஸாமகானமுள்ள ப்ருஷ்டஸ்தோத்ரம், 9 முதல் 14 முடிய ஆறு நாட்களை நடுவில் உள்ள ஷடஹ யாகங்கள் உள்ளதாக கருதப்படும், 15வது நாள் निरुक्त ஸாமகான முறையில் 33 ஸாமகானமுள்ள ப்ருஷ்டஸ்தோத்ரம், 16வது நாள் अनिरुक्तं முறைப் படி 33 ஸாமகானமுள்ள ப்ருஷ்டஸ்தோத்ரம், 17 முதல் 22வது நாள் முடிய முறையே 33 ஸாம கானம், 27, 21, 17, 15, 9 என்ற ஸாமகானம் கொண்ட ப்ருஷ்ட ஸ்தோத்ரமுள்ள ஷடஹயாகம், ஷடஹ யாகங்களில் रथंतरसाम, बृहत्साम இரண்டை யும் முறையே ஒரு நாள் விட்டு ஒரு நாள் கானம் செய்ய வேண்டும். 3 முதல் 8வது வரையிலுள்ள ஷடஹ யாகத்தில் ஆரம்பத்தில் रथंतरसाम बृहत्साम 17 முதல் 22ல் முடிய ஷடஹ யாகத்தில் बृहत्साम கானம், ஆரம்பம், முடிவில் रथंतरसाम கானம், 23வது

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அக்னிஷ்டோம ஸோம யாகம், त्रिवृत्स्तोमकமாக (9 கான முள்ளதாக) செய்யவும், 24வது நாள் अतिरात्र ஸோம யாகம். இம்முறைப்படி இந்த யாகத்தை செய்தால் தாரித்ரியம் நீங்கி மிருந்த தனிகனாக ஆவான். ப்ரஹ்மவர்சஸ் என்ற பலனையும் அடைவான்.

अनुवाकः ३—ऋक्षा वा इयं

இதில் त्रिंशद्रात्रसत्र யாகம் விதிக்கப்படுகிறது. இப்பூமி முன்பு பயிரில்லாமல் (செடி கொடிகள்) இருந்தது. அப்பொழுது மரம், செடி. கொடிகளை உண்டு பண்ண எண்ணி त्रिंशद्रात्रसत्र யாகத்தை செய்தது. அதன் பலனாக மரம், செடி, கொடிகள் பூமியில் முளைத்தன. இதே போல் எவன் ப்ரஜை களையும், பசுக்களையும் அடைய விரும்புகிறானோ அவன் ஷி யாகத்தை செய்யவும். ஒரு சமயம் பூமி அன்ன ஸம்ருத்தியின்றி பசியால் வாடியது. அதை போக்கவல்ல ஷி யாகத்தை செய்தது. இதன் பயனாக நிறைய ஜலம், புல் பூண்டுகள், தான்யங்கள் எல்லாம் நிறை விளைந்தன. தண்ணீர், புல் பூண்டுகள், தான்யங்கள் இவை களை ஆஹாரமாகக் கொண்ட எல்லோருடைய பசியும் தீர்ந்தது. மேலும் மேன்மை, சிறப்பு, மஹிமை முதலியவற்றையும் பூமி அடைந்தது. இந்த யாகத்தை அனுஷ்டிப்பவர்களுக்கு அதே

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

போல் அன்ன ஸம்ருத்தி, சமூஹத்தில் நல்ல கௌரவம் சிறப்பு முதலியவைகளை அடைவான்.

இது 30 ஸுத்யாதினங்கள் கொண்ட யாகம். 1, 30வது நாட்களில் अतिरात्र ஸோம யாகம் செய்ய வேண்டும். 2 முதல் 7 முடிய ப்ருஷ்ட்ய ஷடஹ யாகங்கள், 8வது நாள் 33 ஸாமகானம் கொண்ட யாகம், 9வது நாள் 27 ஸாமகானம் உள்ளது. 10 வது 21 கானமுள்ளது. 11வது நாள் त्रिवृत् अग्निष्टोम யாகம் 12வது நாள் 13, 14, 15வது நாட்களில் முறையே, 15, 17, 21, 24 ஸாமகான முள்ளது. 16 முதல் 21வது தினம் வரை ப்ருஷ்ட்யஷடஹ யாகம் 22வது நாள் 33 ஸாமகானமுள்ள யாகம். 23, 24வது நாட்களில் 27 ஸாமகான முள்ள யாகங்கள், 25 முதல் 29 வரை 5 षोडशि யாகங்கள். 30வது நாள் அதிராத்ரயாகம் என முன்பே கூறப் பட்டது. ஸாமகானங்களின் ஏற்றத் தாழ்வு கலந் திருப்பதால் செடி கொடிகளும் ஏற்றத்தாழ்வுள்ள தாக முளைக்கும். யஜமானனுக்கு இவ்வுலகிலும் விண்ணுலகிலும் போக்ய வஸ்துக்கள் நிறைய கிடைக்கும். அன்ன ஸம்ருத்தி ஏற்படும்.

अनुवाकः ४—प्रजापतिः सुवर्गं

ப்ரஹ்மா ஸ்வர்கத்திற்கு சென்றார். அப் பொழுது தேவர்கள் அவரைப்பின் பற்றி ஸ்வர் கத்தை அடைய பலவித छन्दस् கொண்ட யாகங் களைச் செய்தும், ஸ்வர்கத்தை அடைய முடிய

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வில்லை. கடைசியில் 32 ஸு‍த்யாதினமுள்ள द्वात्रिंशद्रात्रसत्रं என்ற யாகத்தை ஸ்வர்கத்தை அடைவதற்காக அனுஷ்டித்தார்.

32 அக்ஷரம் கொண்ட அனுஷ்டுப் சந்தஸ் ப்ரஜாபதிக்கு ப்ரியமானதால் 32 ஸு‍த்யாஹஸ் கொண்ட யாகத்தை அனுஷ்டித்ததால் ப்ரஜாபதியின் அனுக்ரஹத்தால் ஸ்வர்கத்தையடைந்து அங்குள்ள சுகபோகங்களை அடைந்தனர். அதே போல் ஷி யாகத்தை செய்யும் யஜமானர்கள் ப்ரஹ்மாவின் அனுக்ரஹத்தால் செல்வத்தை அடைந்தார்கள். மனிதர்களுக்கு ஸ்ரீ தேவதை தான் ஸ்வர்கம். 32 அக்ஷரங்கள் கொண்ட அனுஷ்டுப் சந்தஸ் வாக் விசேஷரூபம். 32 ஸு‍த்யாஹஸ் கொண்ட ஷி யாகத்தை செய்வதால் அந்த யஜமானர்கள் ஸபாரஞ்ஜகமாகப் பேசும் திறமை பெற்று எல்லோராலும் பூஜிக்கப்படும் தன்மையையும் அடைவார்கள்.

இதில் ஜ்யோதிஷ்டோமம், கோஷ்டோமம், ஆயுஷ்டோமம் என்ற மூன்று ஸோமயாகங்களை 9 தடவை செய்ய வேண்டும். 29, 30, 31வது தினங்களில் ஆயுஷ்டோமம், கோஷ்டோமம், ஜ்யோதிஷ்டோமம் என்ற முறையில் யாகங்கள் செய்யவேண்டும். ஒற்றப்படை நாட்களில் रथंतर-साम கானம் ப்ருஷ்ட ஸ்தோத்ரத்தில் செய்யவும். இரட்டைப்படை நாட்களில் ப்ருஷ்ட ஸ்தோத்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ரத்தில் बृहत्साम கானம் செய்யவும். 1, 32வது ஸுத்யாதினங்களில் அதிராத்ர யாகங்கள் செய்யவும்.

अनुवाकः ५—द्वाव देवसत्रे

இதில் त्रयस्त्रिंशदहस् என்ற யாகம் விதிக்கப்படு கிறது. தேவர்களுக்கு த்வாதசாஹ யாகமும், त्रयस्त्रिंशदहस् என்ற யாகமும் மிகவும் ப்ரியமானவை. இதை யறிந்து 33 ஸுத்யாதினம் கொண்ட யாகத்தை அனுஷ்டிக்கும் யஜமானர்கள் தேவதைகளை நேராக அடைகிறார்கள். ராஜாவானவன் ஸாம தான உபாயங்களால் பிற ராஜ்யங்களை அடைவான். அவன் ஸாமாதி உபாயங்களை கையாளும் பொழுது அஜாக்கிரதையாக இருந்தால் இருந்த ராஜ்யமும் போய்விடும். கவனமாக இருந்தால் இருக்கும் ராஜ்யமாவது போகாமல் இருக்கும். வித்யை, ஐச்வர்யம் இவைகளை அடைவார்.

இந்த யாகத்தின் மஹிமையை அறிந்த யஜமானர்கள் இந்த யாகத்தை செய்தால் தேவ பாவத்தை (भावः) யடைய ப்ரதிபந்தகமான பாபம் நீங்கி ஏற்கெனவே உள்ள மனிதத்தன்மையை விட மேலான தேவ தன்மையை அடைகிறார்கள். 33 தேவர்கள் ஒவ்வொருவரும் ஒரு ஸுத்யாதின யாகத்தை அனுஷ்டித்தனர். எல்லோரும் அதன் மூலம் ஸமமான ஸம்ருத்தியை அடைந்தனர்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அதுபோல் இந்த ஸத்ரயாகம் செய்யும் எல்லா யஜமானர்களும் ஸமமாக ஸம்ருத்தியை அடைவார்கள். எல்லோரும் கிராமத் தலைவன் பதவியை அடைவர்.

1 வது நாள் அதிராத்ர யாகம் இதில் ஜ்யோதிஷ்டோமம். 2. கோஷ்டோமம். 3. ஆயுஷ்டோமம். 4. கோஷ்டோமம். 5. ஆயுஷ்டோமம் என முறையே ஐந்து யாகங்களை நான்கு தடவை செய்யவேண்டும். முதல் நாள் அதிராத்ர யாகம், மூன்று ஷ 5 யாகங்கள் சேர்ந்து 16 யாகங்கள் ஒருபுற ஸேனை போலாகும். 17 வது நாள் விச்வஜித் யாகம் ஸர்வப்ருஷ்ட ஸ்தோத்திரத்துடன் செய்யவும் 18 முதல் 22 முடிய முன் சொன்ன ஐந்து யாகங்கள். 23 முதல் 32 வது தினம் முடிய த்வாதசாஹத்தின் நடுவிலுள்ள தசாஹ 10 யாகங்கள். 33 வது நாள் அதிராத்ர யாகம். 18 முதல் 33 முடிய 16 யாகங்கள் மற்றோர் ஸேனை போலாகும். நடுவிலுள்ள விச்வஜித் யாகம் ராஜாபோல் விளங்கும். மூன்று அதிராத்ர யாகங்களில் अग्निचयनानि அனுஷ்டிக்க வேண்டும். அன்ன ஸம்ருத்தியும் வாக்விலாஸமும் ஏற்படும். மேலும் தசாஹ யாகானுஷ்டமானதால் உதங்க முனிவர் அடைந்ததுபோல் அங்கங்களின் அனுஷ்டான லோபங்கள் சரி செய்யப்பட்டு யாகம் பூர்ணமாக செய்யப்பட்டதாக ஆகும். எல்லா ஸம்ருத்தியும் ஏற்படும். மேலும் இதை அனுஷ்டிக்கும் யஜமானர்களுக்கு

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஸத்துக்களான புத்ரர்களும், கன்யைகளும் பிறப் பார்கள்.

अनुवाक: ६—आदित्या अकामयन्त

இதில் षट्त्रिंशद्रात्र सत्र யாகம் விதிக்கப்படுகிறது. முன்பு ஒரு சமயம் ஆதித்யர்கள் ஸ்வர்கத்தை அடைய விரும்பி மார்க்கம் தெரியாததினுல் ஸ்வர் கத்தை அடைய முடியவில்லை. பிறகு ஷட்த்ரும் சத் யாகத்தை அனுஷ்டித்து அதன் பலனுக ஸ்வர் கத்தை அடைந்தனர். இதை யறிந்து இந்த யாகத்தை அனுஷ்டிக்கும் யஜமானர்கள் ஸ்வர் கத்தை அடைவார்கள். இதில் 36 ஸுத்யாதினங் கள் உள்ளன. முதல் நாள் அதிராத்ர யாகம், ஜ்யோதிஷ்டோமம், கோஷ்டோமம், ஆயுஷ்டோ மம்; ஆயுஷ்டோமம், கோஷ்டோமம், ஜ்யோதிஷ் டோமம் என 6 ஸுத்யா யாகங்கள் கொண்டது ஒரு अभिप्लवषडह யாகம் எனப்படும். இதை நான்கு தடவை செய்யவும். மொத்தம் 25 யாகங்கள் முடிந்தன. 26 முதல் 31 வரை ப்ருஷ்ட்யஷடஹ யாகம் 32 முதல் 35 வரை நான்கு சந்தோம யாகங் கள். 36 வது நாள் அதிராத்ர ஸோம யாகம். இவ்வாறு இந்த யாகத்தை செய்பவன் ஸ்வர் கத்தை அடைவான். ஸ்வராஜ்ய ப்ராப்தியும் உண்டு.

अनुवाक: ७—वसिष्ठो हतपुत्रः

இதில் एकोनपञ्चाशद्रात्र யாகம் விதிக்கப்படுகிறது. விச்வாமித்ரர் சாபத்தினுல் வஸிஷ்டருடைய புத்ரர்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கள் இறந்த பொழுது, ப்ரஜைகளை திரும்ப அடைய வேண்டும். மேலும் சத்ருக்களையும் ஜயிக்க வேண்டுமென எண்ணி வஸிஷ்டர் 49ஸுத்யா தினங்கள் கொண்ட ஸத்ரயாகத்தை கண்டு பிடித்து அதை அனுஷ்டித்தார். அதன் பலனாக ப்ரஜைகளை அடைந்தார். ஸௌதாஸர்கள் எனப் படும் அவருடைய சத்ருக்களையும் ஜயித்தார். இதேபோல் இந்த யாகத்தை அனுஷ்டிக்கும் யஜ மானர்களும் நல்ல புத்ரர்களை அடைந்து சத்ருக் களையும் ஜயிப்பார்கள்.

49 ஸுத்யாதின யாகங்களின் விவரம் கூறப் பட்டுள்ளது. 1வது. 49வது ஸுத்யாதினங் களில் அதிராத்ர ஸோம யாகங்கள். 2, 3, 4 வது தினங்களில் த்ருவ்ருத்ஸ்தோமக அக்னிஷ்டோம யாகங்கள் செய்யவும். சத்ருவை அழிக்கவல்ல வஜ்ராயுதத்தின் முனை கூர்மை யாக்கப்படுகிறது. 5 முதல் 14வது ஸுத்யாதினம் வரை 15 ஸ்தோ மங்கள் கொண்டதாக ஸோம யாகங்கள் செய்ய வும். 15 வது ஸுத்யாதினத்தன்று ஷோடசி ஸ்தோத்ரமுள்ளதாக செய்யவும். 16 முதல் 27 வரை 17 (ஸ்தோமம்) ஸாமகானமுள்ளதாக செய்ய வும். இதனால் அன்னப்ராப்தி ப்ரஜாலாபம் ஏற் படும். 28 முதல் 33 வரை ப்ருஷ்ட்யஷடஹயாகம் செய்யவும். பிறகு 34 முதல் 45 வரை 21 ஸாம கானமுள்ள ஸோமயாகங்கள் செய்யவும். 46 to 48 வரை ஷோடசஸ்தோத்ரமுள்ள யாகங்கள் செய்யவும். 49 வது நாள் முன் சொன்ன அதி

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ராத்ர ஸோமயாகம் செய்யவும். ஆறு ஸோம யாகங்களில் ஆச்வின சஸ்திரம் சொல்ல வேண்டும். 50க்கு குறைவாகவும் 48க்கு அதிகமாகவும் இருப்பதால் இது உயர்ந்த யாகமாகும். ப்ரஜை களையும், பசுக்களையும் விரும்பும் யஜமானர்கள் இந்த யாகத்தை செய்து விரும்பிய பலனை அடையலாம். 10 என்பது விராட்ஸ்வரூபம், ஏறக்குறைய 5 விராட் இதில் உள்ளது. ஆகையால் அன்ன ஸம்ருத்தி இதன் பலன். இவ்வாறு மூன்று லாபம் உண்டு.

अनुवाकः ८—संवत्सरायदीक्षिष्यमाणा:

இது முதல் நான்கு அனுவாகங்களில் ஸம்வத்ஸரஸத்ரம் யாகம் (ஒரு வருஷம் வரை செய்யக் கூடியது) விவரிக்கப்படுகிறது. இந்த அனுவாகத்தில் ஸம்வத்ஸர ஸத்ரத்திற்குரிய தீக்ஷாகாலம் சொல்லப்படுகிறது. ஸம்வத்ஸர ஸத்ரயாகத்திற்காக தீக்ஷை செய்து கொள்ளும் யஜமானர்கள் மாகமாஸம் க்ருஷ்ணபக்ஷ அஷ்டமியன்று தீக்ஷை செய்து கொள்ளவும். அந்த தினத்திற்கு 'ஏகாஷ்கா' எனப்பெயர். ஸம்வத்ஸர அபிமானி தேவதையின் பத்னி யாவாள் ஏகாஷ்காவின் அபிமானி தேவதை.

ஆகையால் அன்று தீக்ஷை செய்து கொள்வது வருஷாரம்பம் முதல் தீக்ஷை செய்து கொண்டவர்களாக ஆகிறார்கள். ஏகாஷ்கா தினத்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

தில் தீக்ஷை செய்து கொள்வது வருஷத்தின் கடைசியில் தீக்ஷை செய்ததாக ஆகும். ஏனெனில் மாகமாஸம் சிசிர ருதுவானதால் வருஷத்தின் கடைசி காலமாகும். ஆகையால் அன்று தீக்ஷை செய்துகொள்வது நாசத்திற்கு காரணமாகும். ஆகையால் பால்குன மாஸம் உத்திர நக்ஷத்ரம் கூடிய பௌர்ணமியன்று தீக்ஷை செய்து கொள்வது வருஷாரம்பத்தில் தீக்ஷை செய்ததாக ஆகும். அன்று முதல் வருஷம் ஆரம்பமாகிறது என வேதம் கூறு கிறது. இதிலும் ஒரு தோஷம் உள்ளது.

பால்குன பௌர்ணமியன்று ஆரம்பித்து 12 நாள், 12 நாள் உபஸத்யாகம் என அனுஷ் டானம் செய்தபிறகு ஸௌத்யாதின யாகம் சைத்ர சுக்லபக்ஷ நவமியன்று (ஸ்ரீராம நவமி) ஆரம்ப மாகும். அன்று முதல் 6 மாதம் ஸௌத்யாதின யாகங்கள் செய்தால் ஸத்ரத்தின் முன்பாதி முடியும். அதாவது ஆச்வயுஜ சுக்லபக்ஷ அஷ்டமி யன்று முடியும். அடுத்த நாள் ஆச்வயுஜ சுக்ல பக்ஷ நவமி (ஸரஸ்வதி பூஜை) யன்று विषुवान् என்ற தினம். அன்று செய்யும் யாகம் இரண்டு ஆறு மாதங்களுக்கும் நடுவானது. அது வர்ஷ ருது வின் (மழைகாலம்) சமீபமாக இருப்பதால் அப்படி செய்வது உசிதமல்ல. ஆகையால் சைத்ர பௌர்ணமியன்று தீக்ஷை ஆரம்பிக்கவும், அப் பொழுது வஸந்தகாலம். அது வருஷத்தின்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஆரம்ப ருதுவானதால் வருஷாரம்பத்தில் ஆரம்பித்ததாக ஆகும், மேலும் கார்த்திக சுக்லபக்ஷ நவமியன்று விஷுவத்தினம் வரும். அப்பொழுது மழை இருக்காது. இடையூறின்றி யாகம் செய்யலாம். ஆகையால் இதுதான் தோஷமற்ற காலம் என ஸித்தாந்தம்.

தீக்ஷா ஸம்பந்தமான குண விசேஷங்கள் சொல்லப்படுகின்றன. மாகமாஸ சுக்லபக்ஷ ஏகாதசியன்று தீக்ஷை செய்து கொள்ளவும். அப்பொழுது மாக க்ருஷ்ண ஸப்தமியன்று தீக்ஷையின் 12 நாள் முடிவடையும். மறுநாள் மாக க்ருஷ்ண அஷ்டமி ஏகாஷ்டகையாகும். அன்று ஸோமலதை வாங்கும் நாளாக அமையும். அவ்வாறு செய்வதால் ஸம்வத்ஸரத்தின் பத்னியான ஏகாஷ்டகாவும் உபயோகப்படுத்தப்பட்டு அதற்கும் கௌரவம் கொடுத்ததாக ஆகும். ஸோமலதை வாங்கின தினம் முதல் ஆரம்பித்து 12 உபஸத் யாகங்கள் அதற்கடுத்த சுக்லபக்ஷ சதுர்த்தியன்று முடியும். பிறகு சுக்ல பஞ்சமியில் ஸுத்யா யாகம் ஆரம்பித்து அடுத்த மாத சுக்ல பக்ஷத்தில் 1 மாத யாகம் முடியும். இவ்வாறு 12 மாத யாகங்களும் சுக்ல பக்ஷத்திலேயே முடியும். அதையனுசரித்து யஜமானர்கள் முன்னேற்றமடைகிறார்கள். அதன் பலனாக எங்கும் ஓஷதிகளும், மரம், செடிகளும் செழித்து வளரும். யஜமானர்களும் நன்கு அனுஷ்டானம் செய்து ஸம்ருத்தியை அடைந்தனர் என கீர்த்தி எங்கும் பரவும். அதையனு

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

சரித்து எல்லாவிதமான ஸம்ருத்தியும் உலகில் ஏற்படும். ஷ ஆரம்ப முறைதான் சிறந்ததாகும்.

अनुवाक: ९—सुवर्गंवा एते

தீக்ஷை, உபஸத் இவைகளின் பெருமை சொல்லப்படுகிறது. ஸத்ரானுஷ்டானம் செய்ப வர்கள் ஸ்வர்கலோகத்திற்கு செல்கிறார்கள். அங்கு செல்ல யோக்யதை அடைய தீக்ஷைகளால் தன்னையே உபவாஸாதி நியமங்கள் மூலம் நெருப்பில் வாட்டுவதுபோல் வாட்டுகிறார்கள். உபஸத்யாகங்களால் தன்னையே பக்குவப்படுத்து கிறார்கள். ஆகையால் 12 நாள் தீக்ஷையும். 12 நாள் உபஸத்தையும் அனுஷ்டிக்க வேண்டும். இதன் பெருமை பின்வருமாறு. இரண்டு நாள் தீக்ஷை. 2 நாள் உபஸத்துக்கள் இவைகளால் யஜமானன் தனது ரோமங்களை ஹவிஸ்ஸாக்காக எடுக்கிறான். இதேபோல் 2. தோல். 3. இரத்தம், 4. மாம்ஸம், 5. எலும்புகள் 6. கொழுப்பு என்ற அவயவங்களை பாக்கி 10 தீக்ஷை 10 உபஸத்துக் களால் ஹவிஸ்ஸாக எடுத்து வைக்கிறான். இந்த ஸத்ரத்திற்கு தனது சரீரமே தக்ஷிணை, வேறு பசு தக்ஷிணை கிடையாது. இவ்வாறு செய்து யஜ மானர்கள் ஸ்வர்கத்திற்கு செல்கிறார்கள். கேசத் தையும் வபனம் செய்து கொள்கிறார்கள். இதனால் ஸம்ருத்தி ஏற்படுகிறது. கேசபாரம் இல்லாத தால் லகுவாக ஆகி சுலபமாக ஸ்வர்கத்திற்கு செல்கிறார்கள். (இதன் அடிப்படையில்தான்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

திருப்பதி போன்ற இடங்களில் "सशिखवपनं" மொட்டை அடிப்பது ஏற்பட்டிருக்கலாம்)

अनुवाक: १०—ब्रह्मवादिनो वदन्ति

இதில் ஸம்வத்ஸர ஸத்ரத்தில் 360 ஸுத்யா தினங்கள் இருப்பதால் அவைகளுள் முதல் நாள் செய்ய வேண்டிய யாகம் விவரிக்கப்படுகிறது. ஸத்ரத்தில் முதல் யாகம் அதிராத்ரஸோம யாகம். நித்யமாக செய்ய வேண்டிய ஸோம யாகங்களின் வரிசைக்ரமம் வருமாறு 1. அக்னிஷ்டோமம், 2, உக்த்யம் 3. ஷோடசி 4. அதிராத்ரம். முந்தியுள்ள ஸோம யாகங்களை விட்டு முதலில் அதிராத்ர யாகம் ஏன் செய்யப்படுகிறது என ப்ரஹ்மவாதிகள் கேட்டனர்.

அதற்கு சான்றோர் பதில் கூறினர். முதல் 12 ஸ்தோத்ரம் அக்னிஷ்டோம யாகத்தைச் சேர்ந்தது. பிறகு மூன்று உக்த்ய ஸ்தோத்ரங்கள். பிறகு 16வது ஷோடசிஸ்தோத்ரம். அதற்கு பிறகு 13 ஸ்தோத்ரங்கள் அதிராத்ரத்திற்குரியது. இவையெல்லாம் அதிராத்ர யாகத்தில் சொல்லப்படுவதால் முறையே மேற்சொன்ன மூன்று யாகங்களும் செய்து கடைசியில் அதிராத்ரம் செய்தது போலாகும். கோஷ்டோமத்தில் 10க்குமேல் 1 ருக் உள்ளது. ஆயுஷ்டோமத்தில் 1 ருக் குறைவாக உள்ளது. ஸ்தோத்ர ருக்குகள் 10 என விராட் எனப்படும் ஜ்யோதிஷ்டோமம்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

நான் முதலில் செய்யப்பட வேண்டும். மேலும் ஜ்யோதிஸ் பிரகாசரூபமாகும். ஸ்வர்கத்தை பிரகாசப் படுத்திய யஜமானர்களை அழைத்து செல்ல உதவும். சோம்பலைத் தவிர்க்க இதில் பகலில் रथंतर ஸாமகானம், மாலை மூன்ருவது ஸவனத்தில் ப்ரஹ்ம ஸாமத்தின் பொழுது सौभर साम கானம் இரவில் रथंतरसाम கானம் என்று விதியுள்ளது.

अनुवाकः ११—ज्योतिष्टोमं

இதில் இரண்டாவது ஸுத்யா தினம் முதல் செய்ய வேண்டிய யாகங்கள் விதிக்கப் படுகின்றன. இரண்டாவது ஸுத்யா தினத்தில் உக்த்ய ஸோம யாகம் செய்ய வேண்டும். பிறகு நான்கு அபிப்லவஷடஹ யாகங்களும் 1 ப்ருஷ்ட்யஷடஹ யாகமும் செய்ய வேண்டும். மொத்தம் $5 \times 6 = 30$ ஸுத்யா தினங்கள். அபிப்லவஷடஹயாகத்தின் முறை 1 ஜ்யோஷ்டோம அக்னிஷ்டோம ஸோமயாகம். 2வது கோஷ்டோமஸோம யாகம். 3வது ஆயுஷ்டோம யாகம் 4வது ஆயுஷ்டோம ஸோம யாகம். 5வது கோஷ்டோம ஸோம யாகம். 6வது ஜ்யோதிஷ்டோம ஸோமயாகம். இந்த ஷடஹ யாகத்தில் முதலிலும் கடைசியிலும் ஜ்யோதிஷ்டோம யாகம் இருப்பதால், பிரகாசத்தின் மூலம் யஜமானர்கள் ஸ்வர்கலோகத்தில் ப்ரதிஷ்டையை அடைகிருர்கள். மேலும் இருபுறமுள்ள ஜ்யோதிஷ்டோம யாகம், நடுவில் உள்ள

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

நான்கு உக்த்ய யாகங்கள் ரதசக்ரத்தின் ஓரக் கட்டைகள் நடுவிலுள்ள நாபி போன்றவை. இந்த தேவ சக்ரவடிவில் ஷடஹத்தை அனுஷ்டிக்கும் யாஜமானர்கள் ஹிம்ஸையில்லாமல் க்ஷேமத்தை அடைவார்கள். இரண்டு ஷடஹ யாகங்களை புருஷசரீரத்திற்கு ஒப்பிட்டு கூறப்பட்டுள்ளது. இரண்டு பின்சப்பை (ப்ருஷ்டம்), பாகங்கள், இரண்டு தோள்கள், சிரஸ், சரீரம், கால்கள் இரண்டு, கைகள் இரண்டு, இரண்டு ஸ்தனங்கள், ஆகமொத்தம் 12 அவயவங்கள் கொண்டது மனித சரீரம், அதுபோலாகும் 12 யாகங்கள் சேர்ந்தது, ப்ருஷ்ட்ய ஷடஹத்தால், அது ஸம்வத்ஸர ரூபமானதால் யஜமானன் அந்த மாஸத்தில் ப்ரதிஷ்டயை அடைகிருன். இது ஒரு மாத யாகங்கள். சில மாற்றம் தவிர ஸம்வத்ஸர ஸத்ரத்தில் முன் சொன்னது போலவே 5 ஷடஹயாகங்கள் 1 மாதம் எனக் கணக்கில் 12 மாதம் செய்யவும். ஸம்வத்ஸர ஸ்த்ர யாகம் பூர்த்தியாய்விடும்.

अनुवाकः १२—येषस्त्वा

இது முதல், ப்ரச்னம் முடிய அச்வமேத யாக சம்பந்தமான மந்திரங்கள் சொல்லப்படுகின்றன. இந்த அனுவாகத்தில் அச்வத்தை யூபத்தில் கட்டி பர்யக்னிகரணம் செய்யும் பொழுது செய்ய வேண்டிய 'अपान्' என்ற ஹோமத்திற்குரிய மந்திரங்கள் உள்ளன. 9 ஹோமங்கள்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

செய்யவும். இதன் பொருள் ஹே அச்வமே, செம்மறியாடுகளுள் முக்கியமான ஆடு உன்னை ஹவிஸ்ஸாக சமைக்கப்படுகிற மற்ற செம்மறி ஆடுகளுடன் காப்பாற்றட்டும், சிவப்பு கழுத்துள்ள வெள்ளாடு மற்ற ஆடுகளுடன் உன்னைக் காப்பாற்றட்டும். சால்மலி மரம் தனது வளர்ச்சியாலும், புரசமரம் (ப்ரம்ஹத்தினாலும்) அல்லது மந்திரத்தினாலும், ப்லக்ஷமரம் யாகத்தினாலும், ஆலமரம் சமஸங்களாலும், அத்திமரம் பலத்தினாலும், காயத்ரீ சந்தஸ் மற்ற சந்தஸ்களோடும் त्रिवृत्स्तोमः என்ற ஸாமகானம் மற்ற 15 போன்ற ஸ்தோமங்களோடும் உன்னை காப்பாற்றட்டும். பிறகு இறந்த அச்வத்திற்கு ராஜபத்னிகள் अवन्ती: என்ற மந்திரத்தால் தங்கள் வலதுபுற கேசத்தை முடிந்து கொண்டு, இடதுபுற கேசத்தை அவிழ்த்து விட்டுக் கொண்டு வலது தொடையை தட்டிக் கொண்டு மூன்று தடவை இறந்த அச்வத்தை ப்ரதக்ஷிணமாக சுற்றி வரவேண்டும். பொருள்—ராஜபத்னிகள் குதிரையின் (ரக்ஷகர்) பாலகர்கள். மிகவும் ப்ரியமானதும், நிதிகளுள் நிதி போன்ற உன்னை ராஜபத்னிகளான நாங்கள் ஆஹ்வானம் செய்கிறோம்.

अनुवाकः १३—कूप्याभ्यः स्वाहा

இதில் ஜலதேவதைகளுக்கு செய்யும் ஹோம மந்திரங்கள் உள்ளன. கிணற்று நீர், நதிக்கரையிலுள்ள நீர், பூமியின் பொந்துகளில் உள்ள

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

நீர், குழியிலுள்ள நீர், பூமியை தோண்டியதால் வெளிவந்த நீர், மடுவிலுள்ள நீர், சேற்று நீர், குளத்து நீர், குட்டை நீர், மழை நீர், பூமியின் அடியிலுள்ள நீர், ப்ரவாஹ சப்தத்தோடு கூடிய நீர், ப்ரவாஹ ஜலம், நிலையாக இருக்கும் நீர், நதியின் நீர், நதத்தின் நீர், மேற்கு நோக்கி செல்லும் நதி) ஸமுத்ரஜலம், சொல்லப்படாத மற்ற நீர் இவைகளின் அபிமானி தேவதைளுக்கு ஹவிஸ் அளித்ததாக ஆகட்டும் என்பது பொருள்.

अनुवाक: १४—अद्भ्य: स्वाहा

இதிலும் ஜலதேவதைகளுக்குரிய ஹோம மந்திரங்கள் உள்ளன. சாதாரண ஜலம், ப்ரவாஹமாக ஓடும் ஜலம், சுழல் நீர், நான்கு புறமும் சுழமாகப் பாயும் ஜலம், பள்ளத்தை நோக்கி ஓடும் ஜலம், அழகாக ஓடும் ஜலம், மலையருவி, முதலை போன்ற பிராணிகளைக் கொண்ட பயங்கரமான ஜலம், பூமி, அந்தரிக்ஷம், மேல் உலகம் என்ற மூவ்வுலகத்திலுள்ள ஜலங்கள். மற்றும் இதில் சொல்லப்படாத ஜலங்கள் இவைகளின் அபிமானி தேவதைக்கு ஹவிஸ் அளிக்கப்பட்டதாக ஆகட்டும்.

अनुवाक: १५—यो अर्वन्तं

இதில் அச்வப்ரஹர மந்திரங்கள் உள்ளன. यो अर्वन्तमिति - இந்த மந்திரத்தால் குதிரையுடன் நாயை ஜலத்தில் இறக்கிவிட்டு ஜ்வரம் பாய்ந்த

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

மரக்கட்டையால் செய்த உலக்கையால் அத்வர்யு வின் உத்தரவின் பேரில் தாஸீபுத்ரன் நாயை அடிக்கவேண்டும். இதன் பொருள் குதிரையைக் கொல்ல விரும்பும் நாயை வருண ரோகமுள்ள தாக செய்யட்டும். அச்வத்தின் விரோதியான மனிதனும், நாயும் தூரச் செல்லட்டும் என்று சொல்லி அடிக்கவும். பாபம்தான் நாய்வடிவில் உள்ளது. ஆகையால் பாபத்தை அழித்ததாக ஆகும். அடுத்த மந்திரத்தால் ப்ரஹ்மா யஜமான னுடைய கையை பிடித்துக் கொள்ள வேண்டும். அடுத்த மந்திரத்தை அத்வர்யு யஜமானனுக்கு சொல்லிவைக்க வேண்டும். ப்ரம்மாவின் கூற்று ஹே இந்திரனுக்கு சமமான யஜமானனே, பல லாபங்களை அடைய நாம் இருவரும் ஒன்று சேர்ந் தோம். இந்திரனுடைய அனுக்ரஹத்தால் யாக பலன்கள் நம்மை வந்தடையட்டும். ஹே யஜ மானனே, இந்த யாகத்தால் சத்ருவை அழித்தாய், இதனால் இப்புவியில் ஏற்பட்ட உன் புகழுக்கு ஈடு எதுவும் இல்லை. உன் சத்ரு யுத்தத்தில் உன்னை ஜயிக்க முடியாது.

अनुवाकः १६—नमोराज्ञे

இதில் யவ்ய ஹோம மந்திரங்கள் உள்ளன. ஸோம ராஜா, வருணன், அச்வம் ப்ரஜாபதி, தர்ம தேவதை இவர்களுக்கு ஹவிஸ் அளிக்கப்பட்டது. ஹே தர்மதேவதையே, உனது அனுக்ரஹத்தால் நான் ப்ரஜைகளின் அதிபதியாக ஆகவேண்டும்...

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ப்ரஜைகளை என் அதீனமாக்குவாயாக. அடுத்த மூன்று மந்திரங்கள் அச்வத்தை உபாகரணம் முதலியன செய்யும் பொழுது ஹோமம் செய்வதற்குரியவை.

अनुवाकः १७—मयो भूः

கவ்ய(गव्य) ஹோம மந்திரங்கள் இதில் உள்ளன. இவைகள் அன்ன ஹோமங்கள், நான்கு ருக்குகள், நான்கு யஜுர்மந்திரங்கள், இரண்டு ருக்குகள் என 10 மந்திரங்கள் உள்ளன. பசு மாடுகளை நோக்கி இலேசான காற்று வீசட்டும், ப்ராணதாரமான ஜலத்தை பசுக்கள் குடிக்கட்டும். ஹே ருத்ர தேவனே, ரக்ஷிக்க வல்ல நீர் பசுக்களுக்கு ஸுகத்தை அளிப்பாயாக. ஹே பர்ஜன்ய தேவனே, பலவிதமான பசுக்களுக்கு ஸுகத்தை கொடு. தேவர்களின் ஹவிஸ்ஸுக்காக ஸ்ருஷ்டிக்கப்பட்டனவோ, அவைகளை ஹே இந்திரா, பால் கொடுப்பவைகளாகவும், கன்றுகளுடன் கூடியதாகவும் எனது கோசாலையை அடையச் செய்வாயாக. ப்ரஹ்மா பித்ருக்களுடன் சேர்ந்து ஷ பசுக்களை அளித்து எங்களை சுகமாக வைக்கட்டும் என மந்திரத்தின் பொருள்.

अनुवाकः १८—किँस्विदासीत्

இதில் ஹோதா, ப்ரஹ்மா இவர்களின் கேள்வி பதில் ரூபமான மந்திரங்கள் உள்ளன. 21 யூபங்களுக்குள் 'நடுவில் இருக்கும் யூபத்தின்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அருகில் உட்கார்ந்து கொண்டு ஹோதா கேள்வி கேட்கிறார். ப்ரஹ்மா பதில் சொல்கிறார். பொருள்-ஹே ப்ரஹ்மாவே, உற்பத்தியான ப்ராணிகளின் பிறந்தது முதல் ஏற்பட்ட அறிவு எங்கு உள்ளது. அதன் பெயரென்ன. 2) மிகவும் அழகியவஸ்து எது? இதற்கு பதில் ப்ரஹ்மா கூறுகிறார். த்யு லோகம் என்பது முதல் பதில். 2வது பதில் அச்வம். 3வது கேள்வி. மிச்ரவர்ணத்தின் பெயர் என்ன? 4வது கேள்வி. மிகவும் பிரகாசிக்கின்ற வெள்ளை வஸ்துவின் பெயரென்ன? 3வது பதில் ராத்ரி (இரவு) 4வது பதில் - லக்ஷ்மிதேவி. 5 to 8 வரை கேள்விகள் - உலகில் பிறர் ஸஹாயமில்லாலும், சோம்பல் இல்லாமலும் சஞ்சரிப்பவன் யார்? 6) சுக்லபக்ஷம் தோறும் வளர்பவன் யார்? 7) குளிருக்கு மருந்து எது? 8) நிறைய விதைகளை விதைக்கக் கூடிய இடம் எது? 5வது பதில் = சூரியன் 6வது பதில் = சந்திரன், 7வது பதில் = நெருப்பு 8வது பதில் = பூமி 9 முதல் 12 வரை கேள்விகள் முறையே பின் வருமாறு 9) பூமியின் உத்க்ருஷ்டமான இடம் எது? 10) உலகத்தின் நாபி போன்ற அச்சுபாகம் எது? 11) ஆண்மை மிகுந்த அச்வத்தின் ரேதஸ் எது? 12) எழுத்து வடிவிலுள்ள வாக்கின் விசேஷமாக ரக்ஷக ஸ்வரூபம் எது? 9வது பதில் - யாகத்தின் வேதி - 10வது பதில் யக்ஞம் உலகத்தின் நாபி போன்றது. 11 வது பதில் — அச்வத்தின் ஸாரபூதமான வஸ்து ஸோமலதை, இதனால் ப்ரஹ்மஹத்யாபாபம்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கூட விலகுகிறது. 12வது பதில்—பரப்ஹ்மமமே வாக்கின் கடைசி எல்லையாகும். இதனுல் ப்ராணிகள் விசேஷமாக ரக்ஷிக்கப்படுகிருர்கள். இது ச்ராத்தத்தில் உபயோகமாகிறது.

अनुवाकः १९—अम्बे

இதில் ராஜபத்னிகள் ம்ருதமான அச்வத்திற்கு உபசாரம் (அழுதல்) செய்யும் முறை விளக்கப்படுகிறது. ப்ரதிப்ரஸ்தாதா அம்பே, அம்பாலி, அம்பிகே என மூன்றுவித ராஜபத்னீக்களை அழைத்து வருகிருர். அவர்களுள் பட்டமஹிஷீ கூறுகிருார். இரவில் போகியானவர் ஒருவரும் வரவில்லை. இந்த குதிரையும் தூங்குகிறது. அடுத்த மந்திரத்தால் அத்வர்யு பட்டு வஸ்திரத்தால் குதிரையையும், பட்டமஹிஷியையும் போர்த்துகிருன். நீங்கள் இருவரும் பட்டு வஸ்திரத்தை தரித்துக் கொள்ளுங்கள். அடுத்த மந்திரத்தால் குதிரையின் பின்கால்களோடு மஹிஷியின் கால்களை சேர்க்கவும். அடுத்த மந்திரத்தால் ஜனனேந்திரியங்களை சேர்க்கவும். அடுத்த மந்திரத்தால் மஹிஷீ அச்வத்தை நிந்திக்கிருள். தன் தாயாரை கூப்பிட்டு தனது வருத்தத்தை தெரிவிக்கிருள். மஹிஷியை இதர ராஜபத்னிகள் தேற்றுகிருர்கள். அச்வத்துடன் உன்னை சேர்த்து பட்டுவஸ்திரத்தால் மூடியதாலேயே தேவதா ரூபமான அச்வத்தின் போகத்தை அனுபவித்ததாக ஆகிறது. ஆகையால் மனிதபோகத்திற்கு

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஆசைப்படாதே என்றார்கள். இது போல் மூன்று தடவை மஹிஷீ அச்வத்தை நிந்திக்கிறாள். இதரர்கள் இவளைத் தேற்றுகிறார்கள். எல்லா ராஜபத்னிகளும் दधिक्राव्णः - अनयपायावन: உள்ள மந்திரபாகத்தை ஜபிக்கவேண்டும். ப்ரோக்ஷணம் செய்து கொள்ள வேண்டும்.

अनुवाक: २०—भूर्भुवस्सुव:

இதில் அச்வத்தின் மரணத்திற்கு முன் அதற்கு செய்ய வேண்டிய உபசாரம் கூறப்படுகிறது. भूर्भुवस्सुव: என்ற மந்திரத்தால் ராஜபத்னிகள், (அமைச்சர்கள்) 1000 கணக்கான தங்க மணிகளையும், வெள்ளிமணிகளையும், சமுத்திரத்திலிருந்து கிடைத்த மணிகளையும், அச்வத்தின் கேசங்களில் கட்டவேண்டும். वसवस्त्वा என்ற மந்திரத்தால் குக்குலு தைலத்தால் அச்வத்தின் முகத்தையும், குஸும்ப தைலத்தால் உடலின் நடு பாகத்திலும் பின் புறத்திலும் தடவ வேண்டும். 8 வசுக்கள், 11 ருத்ரர்கள், 12 ஆதித்யர்களே தைலத்தை தடவுவதாக தாத்பர்யம். அடுத்த மந்திரத்தால் குதிரையை தேரில் பூட்டி ப்ரதக்ஷிணமாக வெளியே சென்று மறுப்படியும் அச்வ சாலைகளுக்கே வந்து சேரவேண்டும். लाजीन् என்ற மந்திரத்தால் ராஜபத்னிகள் குதிரைக்கு ராத்ரி ஹோமம் செய்த 10 வித அன்னத்தின் சேஷத்தை கொடுக்கவும். அடுத்த மந்திரத்தால் வலது நுகத்தடியில் அச்வத்தை கட்டவும். அடுத்த

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

மந்திரத்தால் ப்ரதான அச்வத்தின் இருபுறமும் ஸஹாயத்திற்காக இரு குதிரைகளைக் கட்டவும். அடுத்த மந்திரத்தால் தேரில் கொடியை கட்டவும். கேதும் க்ருண்வன்னிதி இது ஸ்மார்த்தத்திலும் உபயோகப்படுகிறது. இதன் பொருள்—மனிதர்கள், முன்பு கொடியில்லாத தேருக்கு கொடிகட்டட்டும். ஸுவர்ணாலங்காரம் இல்லாத தேருக்கு ஸ்வர்ணாலங்காரம் செய்யட்டும்.

अनुवाकः २१—प्राणाय स्वाहा

இதில் அன்ன ஹோம சேஷத்தைப் பற்றி கூறப்படுகிறது. 14 மந்திரங்களால் அன்ன சேஷங்களால் தொடர்ச்சிக்காக संतति என்ற ஹோமங்கள் செய்யவும். ப்ராணாபான வ்யானா வாயுக்கள் நாடி போன்ற உடலுறுப்புகள், இவைகளின் அபிமானி தேவதைக்கு இந்த ஹோமங்கள்.

अनुवाकः २२—सिताय स्वाहा

இதில் ப்ரமுக்தி என்ற ஹோமத்திற்குரிய மந்திரங்கள் உள்ளன. இதில் 19 மந்திரங்கள் உள்ளன, ரதத்தில் ஏறுவதற்காக கட்டுதல், அவிழ்த்தல், கடிவாளங்களை கட்டுதல் முதலியன. பிறகு குதிரையை ரதத்தில் கட்டுதல், அவிழ்த்து விடுதல், ஏவலால் கமன விசேஷங்கள், தன் இஷ்டம்போல் சஞ்சாரம் செய்தல் முதலியன இம்மந்திரங்களில் கூறப்பட்டுள்ளன. இவை

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

களின் அபிமானி தேவதைகளுக்கு ஹவிஸ் அளித்ததாக இருக்கட்டும்.

ஐந்தாவது ப்ரச்னம்

முன்பு ஸம்வத்ஸரஸத்ரம் வரை கூறப்பட்டது. இதில் ஸம்வரஸத்ரத்தின் விசேஷ ரூபங்கள் கூறப்படுகிறது.

अनुवाक: १—गावो वा एतत्

இதில் உபாக்யான மூலம் ஸம்வத்ஸர ஸத்ரம் விளக்கப்படுகிறது. ஸம்வத்ஸர ஸத்ரங்களுக்கு மூலமாக உள்ளது கவாமயனம் என்ற ஸம்வத்ஸர ஸத்ரம். இந்த அனுவாகத்தில் பசுக்கள் ஸத்ர யாகம் செய்ததாக கூறப்படுகிறது. பசுக்களுக்கு யாகத்தில் அதிகாரம் இல்லாததால் கோக்களின் அபிமான தேவர்கள் இந்த யாகத்தை செய்தார்கள் என்பது கருத்து. பசுமாடுகள் முன்பு கொம்பில்லாமல் இருந்தன. கொம்பை பெற்று ஸம்ருத்தமாக இருக்க வேண்டுமென நினைத்து பசுக்கள் ஸம்வத்ஸர ஸத்ரத்தை அனுஷ்டிக்கலாயின. 10 மாதம் அனுஷ்டானம் செய்தவுடன் பெரும்பான்மையான பசுக்களுக்கு கொம்புகள் முளைத்தன. அப்பொழுது அவைகள் நாங்கள் ஸம்ருத்தர்களாக ஆகிவிட்டோம் என நினைத்து ஸத்ரத்திலிருந்து எழுந்து சென்றன. சில மாடுகளுக்கு 10வது மாதத்தில் கொம்பு முளைக்கவில்லை.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அவை மேலும், 2 மாதங்கள் ஸத்ரயாகத்தை தொடர்ந்து செய்தன. அதன் பலனாக அவைகளும் கொம்புகளை பெற்றன. அவை 12வது மாதத்தில் ஸத்ரத்தை முடித்தன. இவ்வாறு இந்த ஸ்த்ர யாகத்தை பசுக்கள் செய்ததால் गवामयनं ஸம்வத்ஸரஸத்ரம் எனப்பெயர் ஏற்பட்டது. இதை யறிந்து யாகம் செய்யும் யஜமானர்கள் ஸம்ருத்தியை அடைவார்கள். மழைகாலத்தில் கொம்புள்ளமாடுகள் தீவிர காற்று மழையால் முகத்தை நன்கு மறைத்துக்கொள்ள முடியாமல் அவதியுறுகின்றன. கொம்பில்லாதவையோ வெனில் கொம்பு தடுக்காததால் முகத்தை கீழ் நோக்கி மறைத்துக்கொண்டு மழையிலிருந்து தன்னை காப்பாற்றிக்கொள்ள முடியும். இது 12 மாதம் ஸத்ரானுஷ்டான பலன்.

இது மிகவும் சிறந்த யாகம். ஸம்வத்ஸரஸத்ரத்தை அனுஷ்டித்த யஜமானனுடைய வீட்டில் அக்னிஹோத்ராதி அங்கஹீனமாக செய்தாலும் அது ஸம்பூர்ணமாக செய்ததாக ஆகும். இது போலவே அகாலத்தில் செய்த கர்மாவும் உரிய காலத்தில் செய்ததாக ஆகும். காமனை இல்லாமல் செய்தாலும் பலன் கிடைக்கும். யஜமானனின் தேஜஸ்ஸால் பாபம் ஏற்படுவதில்லை.

இந்த ஸம்வத்ஸரஸத்ரம் ஸமுத்ரம் போன்றது. அதை இந்த யஜமானர்கள் கைகளால் நீந்தி கரை கடக்க முயல்கிறார்கள். ஸமுத்ரத்தின் அக்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கரை தெரியாவிடில், நீந்தி கரைசேர உத்ஸாஹம் ஏற்படாது. ஆகையால் ஸமுத்ரம் போன்ற இந்த ஸம்வத்ஸரஸத்ர யாகத்தை செய்து கரைசேர அக்கரை போன்ற ஸத்ர யாகத்தின் கடைசி ஸுத்யாதினம் என்ன யாகம் என்று தெரிந்து கொள்ள வேண்டும். இதற்கு இரு கரைபோல் உள்ளது இரு அதிராத்ர யாகங்கள். முதல் நாள் ஒன்று, கடைசி நாள் ஒன்று. இதை அறிந்த யஜமானர் கள் மனவருத்தமில்லாமல் உற்சாகத்துடன் செய்து யாகத்தை முடிப்பார்கள், ஆகையால் முதலும் கடைசியும் அதிராத்ர யாகங்களை கொண்டது என்பது தெளிவு. இந்த இரண்டும் பூமியும் ஆகாசமும் போன்றது என புகழப்படு கிறது. இது வைச்வானர ஜ்யோதிஷ்டோமம் எனப்படும். 360 நாள் செய்யவேண்டிய இந்த யாகத்தில் இரண்டாவது நாள் உக்த்ய யாகம் 24 ருக்குகளில் கானமுள்ளதாக செய்ய வேண்டும்.

இந்த யாகத்தில் 15 ஸ்தோத்ரங்கள் உள்ளன. ஒவ்வொன்றிலும் 24 ருக்குகள் கானம் செய்தால் $15 \times 24 = 360$ ஆகும். ஸம்வத்ஸர நாட்களுக்கு ஸமமாகும். 3 முதல் ஆறு நாட்கள் अभिप्लवषडह யாகங்கள். இவைகள் உக்த்ய யாகங் கள் தான். ஸ்தோம விசேஷத்தால் இவை வேறு படுகின்றன. 1. ஜ்யோதிஷ்டோமம், 2. கோஷ் டோமம். 3. ஆயுஷ்டோமம். 4. ஆயுஷ்டோமம். 5. கோஷ்டோமம். 6. ஜ்யோதிஷ்டோமம். இந்த ஆறு யாகங்கள் अभिप्लवषडह யாகங்கள் எனப்படு

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கின்றன. இதை நான்கு தடவை செய்யவும். $4 \times 6 = 24$ யாகங்கள் ஆயின. பிறகு ப்ருஷ்ட்ய ஷடஹ யாகங்கள் 6. மொத்தம் 30 நாள் கொண்ட 1 மாதமாகும். இதேபோல் 5×6 ஷடஹ யாகங்கள் என 2வது, 3வது, 4வது, 5வது மாதங்களில் அனுஷ்டிக்கவும். 6வேது மாதத்தில் நான்கு அபிப் லவஷடஹ யாகங்கள் $4 \times 6 = 24$. அதன் பிறகு अभिजित् என்ற ஸோம யாகம். அதன் பிறகு மூன்று स्वरसामानः என்ற ஸோம யாகங்கள். $24 + 4 = 28$ நாட்களாயின. முதல் நாள் செய்த அதிராத்ர யாகம் இரண்டாவது நாள் செய்த உக்த்ய யாகம் (ஆரம்பணீயம்) இவைகளைச் சேர்த்து 30 நாட்கள் கொண்ட 6வேது மாதம் பூர்த்தியாகும்.

இதற்கு ஸம்வத்ஸரஸத்ரத்தின் பூர்வபக்ஷம் எனப்பெயர். பின் பகுதி 6 மாதத்திற்கு உத்தர பக்ஷம் எனப்பெயர். இரண்டிற்கு நடுவில் இருக் கும் நாள் विषुवान् எனப்படும் ஸோம யாகம் செய் யும் நாள். இது நடு நாயகமாக விளங்கும் நாள். இதை யனுசரித்துதான் ஸ்மார்த்தத்திலும் 6 மாதத்திற்கு ஒரு முறை சித்திரை மாதப் பிறப்பு, ஐப்பசி மாதப்பிறப்பு இரண்டிலும் விஷுவத் புண்ய காலம் கொண்டாடப் படுகிறது. இந்த யாகங்களில் रथंतरं साम அல்லது बृहत्साम என ஏதா வது ஒன்றைத்தான் உபயோகிக்கவேண்டும்.

ब्रह्मसाम கானத்தின் பொழுது अभीवर्तः என்ற साम கானம் செய்ய வேண்டும், முன் சொன்னது

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

போல் ஸாம ஒன்றுதான். ஆனால் அதற்கு ஆதார மான ருக்குகள் தினமும் வேறுபடும். அதன் மூலம் யாகங்களின் வேறுபாடு தெரியும். இந்த ஸத்ர யாகம் செய்பவர்கள் गायत्री போன்ற छन्दस् ஆகிற தேவ மார்கத்தால் ஸ்வர்கத்தை அடை கிறார்கள். ஸத்ரயாகத்தின் உத்தர பக்ஷத்தின் 6 மாஸத்தின் முதல் மாதம் विषुवद्दिन ஸோம யாகத் திற்கு மறுநாள் ஆரம்பமாகிறது. இதில் அவ ரோஹண முறையில் முன் செய்த யாகங்கள் செய்யப்படும். முதல் மூன்று நாள் स्वरसान: என்ற ஸோம யாகங்கள். நான்காவது நாள் विश्वजित् என்ற ஸோமயாகம். இதனால் உலக ஜயம் கிடைக்கும். பிறகு ப்ருஷ்ட்யஷடஹ யாகம் 6. மூன்று அபிப்லவஷடஹ யாகம் = $3 \times 6 = 18$ மொத்தம் 28 நாள்.

பிறகு இரண்டாவது ப்ருஷ்ட்யஷடஹ யாகங்கள் 6 நான்கு அபிப்லவஷடஹ யாகங்கள் $4 \times 6 = 24 =$ மொத்தம் 30 நாட்கள். மூன்றாவது நான்காவது, ஐந்தாவது மாதங்கள் முன் போலவே 5×6 ஷடஹ யாகங்கள் என செய்ய வும். 6வது மாதத்தில் மூன்று அபிப்லவ ஷடஹ யாகங்கள் $3 \times 6 = 18$ நாட்கள். பிறகு ஆயுஷ்டோமம், கோஷ்டோமம் என இரு ஸோம யாகங்கள். அதன் பிறகு द्वादशाह த்தின் பத்து நாள் யாகம் = ஆக 30 நாள்கள். கடைசியில் 1 நாள் महाव्रत யாகம். 1 நாள் அதிராத்ர யாகம்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

என இரண்டு, முதல் மாதத்தில் 28 நாட்களுடன் இந்த இரண்டையும் சேர்த்து 30 நாட்கள். மொத்தம் 6 மாதம் ஆகும். இதுதான் ஸம்வத் ஸரஸத்ர யாகம் செய்யும் முறை.

अनुवाकः २—गावोवाएतत्

இதில் 10 மாதத்தில் முடியும் ஸத்ரப்ரயோகம் சொல்லப்படுகிறது. ஸாயணபாஷ்யத்தில் ஸத்ரயாகத்தைப் பற்றிய சில பொது விவரங்கள் இங்கு கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஸோம யாகங்கள் இருவகைப்படும்,

ஒரு ஸுத்யாஹஸ் கொண்டது. இவைகளுக்கு एकाहः எனப்பெயர். ஒன்றுக்குமேல் 2 லிருந்து பல வருஷங்கள் வரை ஸுத்யாதினங்களை திரும்ப திரும்பச் செய்யும் ப்ரயோகம், மற்றொன்று அவைகளுக்கு கண யாகங்கள் எனப் பெயர். இவை இருவகைப்படும். 1. अहीनः. 2. सत्रयागः. இரண்டு ஸுத்யாதின முள்ள யாகம் முதல் 11 ஸுத்யாதினமுள்ள யாகம் வரை அஹீனம் என்ற பெயரால் அழைக்கப்படுகிறது. 11 ஸுத்யாதினமுள்ள யாகம் அஹீன மென்றும், ஸத்ர மென்றும் இருவகைப்படும், 12 ஸுத்யாதின முள்ள யாகமும் अहीनः सत्रयागः என இருவகைப் படும். 2 முதல் 11 ஸுத்யாதினமுள்ள யாகங்களுக்கு ப்ருகிருதி (மூலம்) 12 ஸுத்யாதினமுள்ள அஹீன யாகம். 13 ஸுத்யாதினம் முதல், வருஷக்

கி—7

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கணக்காக செய்யும் யாகங்களுக்கு ப்ரக்ருதி (மூலம்) 12 ஸூத்யாதினமுள்ள ஸத்ரயாகம். ஸத்ரயாகம் இருவகைப்படும்.

1. रात्रिसत्राणि. (2) अयनात्मकसत्राणि—என்று. 100 ஸூத்யாதினம் வரை செய்யக்கூடிய யாகங்களுக்கு रात्रिसत्र யாகங்கள் எனப்பெயர். संवत्सरसत्र முதல் வருஷக்கணக்காக செய்யும் யாகங்கள் अयन-सत्रங்கள். இந்த அனுவாகத்தில் சொல்லப்படும் ஸத்ரயாகம் முன்பு சொன்ன ஸம்வத்ஸரஸத்ரத்திற்கு (விகல்பமாக) மாற்றாக கூறப்படுகிறது. இது 10மாதத்தில் முடியக்கூடியது. சென்ற அனுவாகத்தில் சொன்னதுபோல் பசுமாடுகள் கொம்புகளை அடைவதற்காக இந்த ஸத்ரயாகத்தை செய்தன. 10 மாதம் செய்தவுடன் பல மாடுகளுக்கு கொம்பு முளைத்து விட்டது. பலன் கிடைத்து விட்டது என்று சொல்லி அவைகள் ஸத்ர யாகத்திலிருந்து விலகிவிட்டன. அப்பொழுதும் கொம்புகளைப்பெறாத சில மாடுகள் மேலும் இரண்டு மாதம் ஸத்ரயாகம் செய்தன. அவைகளுள் சில கொம்பை விரும்பின. மற்றும் சில பலத்தை விரும்பின. அதிக காலம் யாகம் செய்ததால் அழகிய கொம்புகள் உண்டாயின.

பலத்தை விரும்பியவைகளுக்கு கொம்பு முளைக்கவில்லை. ஆனால் நல்ல பலத்தையடைந்தன. இவ்விதம் இருவகையான யாகப்ரயோகங்களை யறிந்து அனுஷ்டானம் செய்பவன் ஸம்ருத்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

தியை அடைகிறான். இருவித யாகானுஷ்டானத்திற்கும் ஸம்ருத்திதான் பலன். பசுபோன்றவைகளுக்கே பலன் அளிப்பதால் மனிதர்களுக்கு நிச்சயம் பலன் அளிக்கும்.

अनुवाकः ३—प्रथमे मासि

இதில் ப்ருஷ்ட்யஷடஹ யாக விஷயம் சொல்லப்படுகிறது. முன்பு மாதந்தோறு ப்ருஷ்ட்யஷடாஹயாகம் செய்ய வேண்டு மென்று சொல்லப்பட்டது. அதற்கு விகல்பமாக முதல், நடுவு கடைசி மாதங்களில் மாத்திரம் ப்ருஷ்ட்யஷடஹம் செய்யவும் என கூறப்படுகிறது. ஒரு பசுவை ஒரே நாளில் மூன்று தடவை கறந்தால் முதல் தடவை நிறைய பால் கொடுக்கும். பிறகு குறைந்து விடும். இதற்கு மாறாக 12 தடவை கறந்தால் பால் கறப்பது அரிதாகிவிடும். அது போல் ப்ருஷ்ட்யஷடஹ யாகம் இந்த ஸத்ரத்தில் மூன்று தடவை செய்தால் பலன் குறையும். 12 தடவை செய்தால் பலனற்றதாக ஆகும்.

ஆகையால் வருடத்தின் கடைசியில் 1 தடவை தான் ப்ருஷ்ட்யஷடஹ யாகம் செய்யவேண்டும். யக்ஞம் பூர்ணமாக ஆகி நல்ல பலனை கொடுக்கும். ஸம்வத்ஸரஸத்ரம் செய்வது கரை தெரியாத ஸமுத்ரத்தை தாண்டுவது போலாகும். ஆகையால் बृहत्साम, रथंतरं साम இரு ஸாமாக்களின் மூலம் ப்ரயோகத்தை செய்யவும். இவை கடப்பதற்கு

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

சாதனமான படகு போன்றது. வேறு கன்றின் மூலம் பசுவைக் கறப்பது போல், வேறு ருக்கு களை ஆதாரமாகக்கொண்ட ஷி இரண்டு ஸாமங் களால் யாகம் பூர்த்தியடையும். யஜமானன் எல்லா இஷ்டங்களையும் அடைகிறான்,

अनुवाकः ४—समान्य ऋचः

முதல் அனுவாகத்தில் ஸம்வத்ஸர ஸத்ரத் தின் அனுஷ்டான முறை சொல்லப்பட்டுள்ளது. பின் ஆறு மாதத்தில் செய்ய வேண்டிய முறை சொல்லப்பட்டதன் விவரம் தான் இங்கு கூறப் படுகிறது.

பின் ஆறு மாதத்தில் கானத்திற்கு ஆதார மான ருக் ஒன்று தான், ஸாமாக்கள் பல. ருக்கு கள் மனித லோகம் போன்றது. ஸாம அதன் மீது பாடப்படுவதால் மேல் உலகம் போன்றது. தேவ லோகத்திலிருந்து புண்யம் தீர்ந்தவுடன் மனித உலகத்திற்கு இறங்கி வருகிறார்கள். பின் 6 மாதத்தில் அவரோஹண முறையில் அனுஷ்டா னம் செய்ய வேண்டும். முன்பு கடைசியிலிருந்த ப்ருஷ்ட்ய ஷடஹம் முதலில் வருகிறது. கடைசி யிலிருந்த ஜகதீசந்தஸ் த்ரயஸ்த்ரும்சத் ஸ்தோ மம் (33 ஸ்தோத்ரகானம்) बृहत्साम எல்லாம் முதலில் செய்ய வேண்டும். இவ்வாறு முன் 6 மாதத்தில் செய்ததை இறங்குவரிசையில் செய்ய வேண்டும். இதை யனுசரித்து தான் தந்தை பாட்டனார் முன்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

னிலையில் சிறியவனுன புத்ரன் பேரன்கள் குதிரை அல்லது வாஹனத்திலிருந்து இறங்குகிறுர்கள். வைச்வகர்ம அதிக்ராஹ்ய க்ரஹம் ஒரு நாள் ஆதித்ய அதிக்ராஹ்ய க்ரஹம் அடுத்த நாள் என்று முறையே எல்லா நாட்களிலும் ஷி க்ரஹத்தை க்ரஹிக்க வேண்டும். द्वादशाहத்தைச் சேர்ந்த தசராத்ர யாகம் கடைசி (வேது) மாதத்தில் செய்யவும். இதனுல் ஸத்ரயாகம் ஸம்ருத்தமாக ஆகும்.

अनुवाकः ५—यदि सोमौ

இதில் மாத்ஸர்யத்தில் (பொருமை) நடக்கும் இரண்டு गवामयन सत्र யாகங்களின் சில விசேஷங்கள் இங்கு கூறப்படுகின்றன. இரு யஜமான ஸமூஹம் பொருமையால் ஸத்ரத்தை செய்யும் பொழுது இருவருடைய ஸோமலதை சேர்ந்தாற்போல் பிழியப்பட்டால் அப்பொழுது மஹாராத்ரியில் (3 A. M.) எழுந்திருந்து ப்ராதரநுவாக சஸ்திரத்தை ஆரம்பிக்க வேண்டும். முதலில் இவ்வாறு செய்யும் யஜமான ஸமூஹம் மற்ற ஸமூஹத்தின் வாக் முதலியவைகளை எடுத்துக் கொள்கிறது. அவ்வாறு செய்யும் பொழுது 'वृषन्' என்ற சொல் உள்ள ருக்கை ப்ராதரனுவாக சஸ்திரத்தின் முதல் ருக்காக உபயோகிக்கவும். இதனுல் மற்ற யஜமானர்களுடனும் தேவதையான இந்திரனை அவர்களின் ப்ராதஃஸவனத்திலிருந்து பிரிக்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கிறான். சிலர் 3 ஸவனங்களிலுமே இதே ருக்கை சொல்ல வேண்டும் எனக் கூறுகிறார்கள்.

இதனால் மூன்று ஸவனங்களிலும் இந்திரனை மற்றவர்களுக்கு கிடைக்காமல் செய்கிறான். "संवेशाय" என்ற மந்திரத்தால் अभिभूति ஹோமம் செய்யவும். இதனால் மற்றவர்களின் சந்தஸ் ஸுகளை அழிக்கிறான். பிறகு संजनीयं என்ற सत्रं படிக்கவும். எதிரியின் ஸாரத்தை அழித்துவிடும். ப்ராத: ஸவனத்தில் த்ரோணகலசம் என்ற பாத்ரம் உடைந்தால் विपिविष्ट பதமுள்ள விஷ்ணுபரமான ருக்கை சொல்லவும். 2, 3வது ஸவனங்களில் த்ரோண கலசம் உடைந்தால் वषट्कार निधन மாக ஸாமகானம் செய்யவும்.

अनुवाक: ६—षडहैर्मासान्

கவாமயன ஸத்ரத்தின் உட்பிரிவாக விசேஷ முறை இதில் கூறப்படுகிறது. 5 ஷடஹயாகங்கள் செய்து 1 மாதம் முடிந்ததாக ஆவதால் 31வது நாள் யாகம் செய்யாமல் விட்டு விடலாம் அல்லது 15 நாள் 2 எனக் கணக்கிட்டு 31வது நாள் யாகத்தை விட்டு விடலாம். சுக்லப்ரதமை முதல் அமாவாஸ்யை வரை 1 மாதம் என ஒரு கல்பம். கிருஷ்ண பக்ஷ ப்ரதமை முதல் பௌர்ணமி வரை 1 மாதம் என ஒரு கல்பம், இரண்டாவது கல்பத்தின் பெருமை கூறப்பட்டுள்ளது. இவ்வாறு ஸம்வத்ஸர ஸத்ரத்தின் நடுவில் யாகம் ஒரு நாள் செய்யாமல் இருந்தால் யாகத்தின்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

தொடர்ச்சி அறுந்துவிடும். அதற்கு பரிஹாரமாக ப்ராஜாபத்ய பசு யாகம் செய்யவும். மூன்று ஸவனஸ்தானத்தில் सान्नाय्य யாகம் செய்யவும். எல்லோரும் உபாஹ்வானம் செய்து சேஷபக்ஷணம் செய்யவும். தேவதைகள் நிராசையாக திரும்பிச் செல்லாமல் இருக்க புரோடாச யாகங்கள் செய்யவும், 8, 11, 12 கபால ஸம்ஸ்கிருத புரோடச யாகங்கள், கடைசியில் வைச்வதேவ சரு யாகம் செய்யவும், இதனால் எல்லா ஸவன யாகங்கள் செய்த பலன் கிடைக்கும்.

अनुवाकः ७—उत्सृज्य।

இதிலும் முன் சொன்ன விசேஷ தர்ம விசாரங்கள் உள்ளன. ப்ரஹ்மவாதிகள் மேற் சொன்ன உத்ஸர்கபக்ஷம் வேண்டுமா வேண்டாமா என விசாரித்தனர். உத்ஸர்க பக்ஷத்தை ஆதரித்தால் யக்ஞவிச்சேதம் ஏற்படும். உத்ஸர்கம் இல்லாத பக்ஷத்தில் யஜமானன் ப்ராண நிரோதம் ஏற்படும் என விசாரித்து உத்ஸர்க பக்ஷமே சிறந்தது என தீர்மானித்தனர். பருவ காலத்தில் தான் உத்ஸர்கம் (யாகம் செய்யாமலிருத்தல்) உசிதம் என சிலர். மற்றும் சிலர் பௌர்ணமிக்கு மறுநாள் க்ருஷ்ண ப்ரதிபத்தில் உத்ஸர்கம் செய்ய வேண்டுமென்பர். மஹாவ்ரதம் விஷுவத் போன்ற காலங்களில் உத்ஸர்கம் செய்யக்கூடாது.

உத்ஸர்க பக்ஷத்தில் அன்றையதினம் अग्नयेव- सुमते 8 கபாலஸம்ஸ்கிருத புரோடாச யாகம்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இந்திரனுக்கு दधि யாகம், मरुत्वान् इन्द्रः தேவதை, 11 கபாலஸம்ஸ்கிருத புரோடாச யாகம், விச்வேதே வர்கள் தேவதை, 12 கபாலஸம்ஸ்கிருத புரோ டாச யாகம், என மூன்று புரோடாச யாகங்கள். 1 தயிர்யாகம். மேலும் முன்பு சொன்ன ப்ராஜா பத்ய பசு யாகம் செய்யவும். விடுவதாயிருந்தால் ப்ருஷ்ட்யஷ்டஹ யாகம் முடிந்தவுடன் மறுநாள் உத்ஸர்கம் செய்யவும். சிலர் யாகம் விச்சின்ன மாகாமல் இருக்க உத்ஸர்க பக்ஷத்தை ஆதரிக்க வில்லை. உத்தர பக்ஷத்தில் बृहत्सामகானத்திற்கு "इन्द्र क्रतुं न" என்ற ருக்கு ஆதாரம். யஜமானர் கள் இந்திரன் அனுக்ரஹத்தால் பூலோகத்தை யடைந்து ஸுகமாக இருப்பார்கள். தகப்பனுர் புத்ரர்களுக்கு சொத்தை பங்கிட்டு அளிப்பது போல் இந்திரன் யஜமானர்களுக்கு பங்கு அளிக் கிருன் என்பது கருத்து.

अनुवाकः ८—देवा वै या ऋतं

கவாமயனத்தில் महाव्रतं என்று ஒரு நாள் அ் நு ஷ் டா ன ம் விதிக்கப்பட்டுள்ளது. அதில் செய்யவேண்டிய சில விசேஷ தர்மங்கள் கூறப் படுகின்றன. முன்பு தேவர்கள் ஸத்ர ஸமாப்திக்கு பிறகு இந்திரிய ஸாமர்த்தியத்தை இழந்தனர். பிற்கு 'ऋत' என்னும் ஸாமகானம் செய்து சாமர்த் தியத்தை திரும்பப்பெற்றனர். ஆகையால் அந்த ஸாமகானத்தை சாத்வாலத்தின் அருகில் செய்ய வேண்டும். ஆஹவனீய ஸமீபத்தில் ऋद्धि ஸாம

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கானம் செய்யவும். ஹவிர்தான மண்டபத்தினுள் இருந்து கொண்டு 'ப்ஜாபதேர்ஹ்ருதயம் என்ற ஸாமகானம் செய்யவும்.

ஸதஸ்ஸின் இரு புறத்திலும் ஶ்லோக, அநுஶ்லோக ஸாமகானம். ஏகவிம்ஶ ஸ்தோமகம் ஸாமகானம். பிறகு பத்னிகள் உபகானம் செய்யவும். ராஜநஸாம கானம் 5 இடங்களில் உத்காதா உட்கார்ந்து கானம் செய்ய வேண்டும். இதன் பலனாக எல்லா திசைகளிலிருந்தும் அன்னம் வந்துசேரும். யஜமானன் ப்ரஜைகளிடையே சிறந்தவனாக இருப்பான். உத்காதா நாற்காலியில் ஏறவேண்டும். ஹோதா ஊஞ்சலில் ஏறவேண்டும். அத்வர்யு கூர்ச்சத்தின் மேல் நிற்க வேண்டும். இவைகளால் யஜமானன் ஸ்வர்க ஸமுத்ரத்திற்கு பாலம் கட்டியவனாக ஆவான். சுலபமாக ஸ்வர்கத்தை அடைவான் என்பது கருத்து.

அநுவாக: ९—அர்கர்யேணவை

வீணைவாத்யம் முதலியன இதில் கூறப்பட்டுள்ளது. அர்க்யஸாம கானத்தால் முன்பு ப்ரஹ்மா ப்ரஜைகளை ஸ்ருஷ்டித்தார். இவ்வாறு ஸாமகானத்தால் அன்ன ஸம்ருத்தியை அடைந்தார். அதுபோல் யஜமானனும் ப்ரஜைகளைப் பெற்று அன்னத்தையும் அடைவான். ஸம்வத்ஸர ஸத்ர யாகத்தின் பொழுது எல்லா திசைகளிலிருந்தும் ப்ரஜைகள் வந்து, வேண்டிய அன்னத்தை பெற்று பசிதீர்த்துக் கொள்ளுகிறார்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கள். ஸத்ரம் முடிந்தவுடன் ஸத்ர நியமங்களி லிருந்து விடுபட்டதால் விலங்குகளிலிருந்து விடு பட்டவன் சந்தோஷப்படுவது போல் சந்தோஷத் தோடு உரக்க சப்தம் போடுகிருர்கள். அன்ன ஸம்ருத்தியையும் அடைகிருர்கள். நூறு கம்பி இழைகொண்ட வீணை வாத்யம் இருக்கவேண்டும். மனிதன் 100 வயதுள்ளவஞக இருப்பான். குறிப் பிட்ட எல்லேவரை யஜமானர்கள் ஓடவேண்டும்.

ஏற்கனவே கிடைக்காத பலன்களே அடைவார் கள். பிறகு துந்துபிவாத்யம் முழங்க வேண்டும். இதஞல் ஸபாரஞ்ஜகமாகப் பேசும் திறன் கிடைக் கிறது. பூமியில் குழியில் வைக்கப்பட்ட துந்து பியை அடிக்க வேண்டும். பிறகு எல்லாவிதமான சங்கு முதலிய வாத்யங்கள் வாசிக்கப்பட வேண் டும். எல்லாவிதமான வாக்குகளும் கிடைக்கும். சூத்ரனும், ப்ராஹ்மணனும் வேதியின் வெளியே யும், உள்ளேயும் முறையே தோலே விரிப்பார்கள். அதை ப்ராஹ்மணன் எடுத்து ஆக்னித்ரன் என்ற ருத்விக்கிடம் கொடுப்பான். சூத்ரன் கத்துகிருன். ப்ராம்மணன் புகழ்கிருன். ஆக்ரோசத்தால் யஜமா னர்களே சுத்தப்படுத்துகிருன். புகழ்ச்சியால் அன்னப்ராப்தி ஏற்படும். महाव्रत त்தால் ரிஷிகள் செய்த உபகாரம் தேவர்கள் செய்த உபாகாரம் இரண்டையும் யஜமானன் அடைகிருன். भूतेच्छद् सामानि என்ற ஸாமகானம் செய்ய வேண்டும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

अनुवाकः १०—चर्मविभिन्दन्तिः

இதில் தாஸிகளின் நாட்டியம் சொல்லப் படுகிறது. ஆக்னீத்ர சாலேக்கு வடக்கே தோலேக் கட்டி கவசம் அணிந்தவர்கள் அடிக்கவேண்டும். இதனுல் யஜமானர்களுடைய பாபத்தையே அழிக்கிருர்கள், பிறகு 8 தாஸிகள் தலேயில் தண்ணீர் குடத்தை வைத்துக் கொண்டு மார்ஜாலீயம் என்ற நீர் பாத்திரத்தைச் சுற்றி நின்றுகொண்டு வலது காலால் பூமியை உதைத்துக் கொண்டு इदं मधु मधु என பாடிக்கொண்டு நாட்டியமாடுகிருர்கள். மது தேவதைகளுக்கு ப்ரியமான அன்னம், ஆகையால் பரமான்னத்தை அடைகிருர்கள். பூமியை உதைப்பதால் யஜமானர்கள் சிறந்த மதிப்பை பெறுகிருர்கள். இத்துடன் மஹாவ்ரதம் என்ற கர்ம முடிந்தது.

अनुवाकः ११—पृथिव्यै स्वाहा

இது முதல் அச்வமேத மந்திரங்கள் கூறப் படுகின்றன, இதில் 50 அன்ன ஹோம மந்திரங் கள் உள்ளன, இவை இரவில் செய்ய வேண்டி யவை. பூமி முதலிய தன் அபிமானி தேவதைக்கு ஹவிர்பாகம் கொடுக்கப்படுகிறது. இதில் கூறப் படுபவை பூமி முதலிய முவ்வுலகம் (புகை, ஜ்யோ திஸ், நீர் காற்று இவைகளின் சேர்க்கை) संलयः எனப்படும் இதனுடைய முக்காலம். இங்குப்ரஜா பதி ரூபமாக அச்வமே சொல்லப்படுகிறது இங்குள்ள மந்த்ராபிமானி தேவதை ப்ரஜாபதியே.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

மந்திரங்களின் பொருள் புகை உண்டாகப் போவது, உண்டாகின்ற புகை, உண்டான புகை என முக்காலத்தையும் குறிக்கிறது. பனி விழுதல் அதனால் இருட்டுதல், பனிக்குளிரால் சரீரத்தின் கை கால்களை மடக்கிக் கொள்ளுதல் (சுருக்குதல்) பிறகு ஓடுதல், முக்காலத்தில் மின்னல், முக்காலத்து இடி, முக்கால மழை, பலவிதமாக மழை பெய்தல், மழையில் நனைந்த புருஷனுடைய குளிர் நடுக்கம், பூமியிலிருந்து கிளம்பிய வெப்பம், அதனுடைய முக்காலம், அதாவது உண்டாகப் போகிற, உண்டாகிக் கொண்டிருக்கின்ற, உண்டான வெப்பம் என்றவாறு, மூன்றுவித மேகம் நீங்குதல் மூன்று விதம், வெய்யில் வரப் போகிறது, வருகிறது, வந்தது என மூன்று விதம்: நான்கு வேத மந்திரங்கள், காதைகள் (गाथाः) மனிதர் சம்பந்தப்பட்ட கதை சொல்லுதல் (நாராசம்ஸம்) முதலியன மந்திரத்தின் பொருள்.

अनुवाकः १२—दद्वते स्वाहा

இதில் சரீரத்தின் அவயவங்களின் அபிமானி தேவதைகளுக்கு அன்ன ஹோம மந்திரங்கள் உள்ளன. அச்வத்தை ப்ரஜாபதி ஸ்வரூபமாகப் பார்த்து அதனுடைய அங்கங்கள் விவரிக்கப்படுகின்றன. அச்வத்தை ஸர்வாத்மகமாகப் பார்த்து அதற்குரிய சப்தங்கள் அச்வத்தையே குறிப்பிடுகின்றன. மந்திரத்தின் பொருள். பல் உள்ளவன்; பல் இல்லாதவன் (கிழவர், பாலன்), தாவர, ஜங்கமங்கள், முகமுள்ளவன், முகமில்லாதவன்,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

மூக்குள்ளவன், மூக்கில்லாதவன், கண்ணுள்ளவன், கண் இல்லாதவன், காதுள்ளவன், காதில்லாதவன், தலையுள்ளவன், தலையில்லாதவன் (புத்திசக்தியில்லாதவன்) காலுள்ளவன், காலில்லாதவன், சுவாசிப்பவன், சுவாசிக்காதவன், பேசுபவன், பேசாதவன், பார்ப்பவன், பார்க்காதவன், கேட்பவன், கேட்காதவன், மனதுள்ளவன், மனது இல்லாதவன், ரேதஸ் உள்ளவன், ரேதஸ் இல்லாதவன், ப்ரஜைகள், பிறப்பு, உரோமங்கள் உள்ளவன், உரோமம் இல்லாதவன், த்வகிந்திரியம் (தோல்) அது இல்லாதவன், சருமம் உள்ளவன், சருமம் இல்லாதவன், இரத்தமுள்ளவன், இரத்தமில்லாதவன், ஊந்தன் உள்ளவன், அது இல்லாதவன், அங்முள்ளவன், அஙங்கன், ஆத்மா (சரீரம்) அநாத்மா, எல்லாம் இவைகளின் அபிமானி தேவதைகளுக்கு ஹவிர்பாகம்.

अनुवाकः १३—ऋद्धस्वायुरस्ति

இதில் பரிதி வைக்கும் மந்திரங்கள் உள்ளன. இந்த மந்திரத்தைச் சொல்லி அக்னிக்கு (கிழக்கு தவர) மூன்று புறத்திலும் பரிதி ஸமித்துகளை வைக்க வேண்டும் யக்ஞ ஸம்ருத்தியின் பொருட்டு ப்ரஜாபதி மேல்புறமும், தென்புறமும், விஷ்ணு வடபுறமும் ஸமித்தை சேர்த்து வைக்கட்டும். மேலும் எனக்கு ப்ராணிகள் வசமாவதற்காகவும், ப்ரஜையின் பொருட்டும். தீர்க்காயுஸ் ஸுக்காகவும், ப்ராணாபானுதிகளுக்காகவும்,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

விடியற்காலம், செல்வத்துக்காகவும் கீர்த்தியின் பொருட்டும், பசு ஸம்ருத்திக்கும், ஸர்வதுக்க நிவ்ருத்திக்காகவும் ஸமித்துகளை சேர்த்து வைக்கிறேன்.

अनुवाक: १४—अग्नये गायत्राय

இதில் ஸர்வப்ருஷ்டம் எனப்படும் 10 ஹவிர் யாகங்கள் சொல்லப்படுகின்றன. ஒவ்வொரு தேவதைக்கும் சந்தஸ், ஸ்தோமம், (கானத்தின் கணக்கு) साम, ருது இவைகள் விசேஷணமாக சொல்லப்பட்டுள்ளது.

1. அக்னி தேவதை—அதற்கு. விசேஷனம். गायत्री छन्दस् त्रिवृत्स्तोम:, रथंतर साम, वसन्तर्तु:, 8 கபால ஸம்ஸ்கிருத புரோடாசம் ஹவிஸ் என்ற யாகம்.

2. இந்திரன் த்ருஷ்டுப்சந்தஸ் 15 ஸ்தோமம், बृहत्साम, க்ரீஷ்மருது, 11 கபால ஸம்ஸ்கிருத புரோடாசம் ஹவிஸ் என்ற யாகம்.

3. விச்வேதேவர்கள் தேவதை—जगती சந்தஸ் 17 ஸ்தோமம், वैरूप साम, வர்ஷருது, 12 கபால ஸம்ஸ்கிருத புரோடாசம் ஹவிஸ் என்ற யாகம்.

4. மித்ராவருணர்கள் தேவதைகள் அனுஷ்டுப்சந்தஸ், 21 ஸ்தோமம், வைராஜஸம், சரத்ருது, ஆமிக்ஷா ஹவிஸ் என்ற யாகம்.

5. ப்ருஹஸ்பதி தேவதை—பங்க்தி சந்தஸ், 27 ஸ்தோமம், சாக்வரஸாம, ஹேமந்தருது, சரு ஹவிஸ் என்ற யாகம்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

6. ஸவிதா தேவதை அதிச்சந்தஸ் என்ற சந்தஸ், 33 ஸ்தோமம், ரைவதஸாம, சிசிர ருது, 12 கபால ஸம்ஸ்கிருத புரோடசம் ஹவிஸ் என்ற யாகம்.

7. விஷ்ணு பத்னீ அதிதி தேவதை—சரு ஹவிஸ் என்ற யாகம்.

8. வைச்வாநராக்னி தேவதை—12 கபால ஸம்ஸ்கிருத புரோடாசம் ஹவிஸ் என்ற யாகம்.

9. அனுமதி தேவதை—சரு ஹவிஸ் என்ற யாகம்.

10. ப்ரஹ்மா தேவதை—ஒரு கபாலத்தில் ஸம்ஸ்கிருத புரோடாசம் ஹவிஸ் என்ற யாகம்.

अनुवाकः १५—यो वा अग्नौ

மேற்சொன்ன 10 ஹவிர் யாகங்களின் ப்ரயோகம் உள்ளது. பசு யாகத்தில் ஏற்கெனவே ஸித்தமான ஆஹவனீயாக்னியில் அரணியை கடைந்து எடுத்த அக்னியைப் போடுவார்கள். அங்கு ஸோமலதை வைக்கப்பட்டுள்ளது. இந்த இரண்டுக்கும் அக்னீஷோமிய பசு யாகம் ஆதித்ய மாகும் (आतिथ्यं).

சயனம் செய்து தயாரான அக்னிக்கு ஸஞ்சி தாக்னி எனப்பெயர். அது ஸாக்ஷாத் ருத்ரனுக க்ரூரமான ரூபத்துடன் இருக்கும். மேற்சொன்ன 10 ஹவிர்யாகங்களை செய்யாவிடில் ஸிஞ்சி

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

தாக்னி உக்ர ரூபத்துடன் யஜமானனின் ப்ரஜை களையும், பசுக்களையும் ஹிம்ஸிப்பான். 10 ஹவிர் யாகம் செய்தால் தனது ஹவிர்பாகம் கிடைத்த சந்தோஷத்தில் யஜமானனை ஹிம்ஸிக்க மாட் டான். நவத்வாரங்கள் ப்ராணன் போன்றது. நாபி 10வது, 10 எழுத்துக்கள் என்பது விராட்ஸ்வரூபமாகும். இதனால் அன்னப்ராப்தி பலன். 10 ஹவிர் யாகத்தால் 10 திக்குகளையும் ஜயித்தவனாக ஆகிறான். இந்திரஸவயாகம், மனுஸவயாகம் இரண்டாலும் இந்திரன், மனு இவர்வகளின் ஐச்வர்யத்தை அடைகிறான். எல்லா திசைகளையும் ஜயிப்பதற்காக திக் சப்தமுள்ள மந்திரங்களை யாஜ்யையாக சொல்லவும்.

अनुवाक: १६—य: प्राणत:

இதில் ரஜதபாத்திரத்தால் महिम ஹோமம் செய்யும் மந்திரம் கூறப்பட்டுள்ளது, இதன் பொருள்—ப்ரஜாபதி ஒருவராகவே இவ்வுலகிற்கு ஸ்வமஹிமையால் ராஜாவாக ஆனார். இந்த ப்ரஜாபதிதான் மனிதர்களுக்கும், மிருகங்களுக் கும் யஜமானன். அப்படிப்பட்ட ப்ரஜாபதி தேவருக்கு ஹவிஸ்ஸால் பணிவிடை செய்வோம். ஹே ப்ரஜாபதியே, உம்முடைய த்யுலோகம்தான் மஹிமா என்கிற க்ரஹமாகும். நக்ஷத்ரங்கள் உனது உருவம். சூரியன் உனது தேஜஸ், ஹே க்ரஹமே, அப்படிப்பட்ட மஹிமையுடைய ப்ரஜா பதி தேவனுக்கு உன்னை ஹோமம் செய்கிறேன்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

अनुवाकः १७—य आत्मदाः

இதுவும் மஹிம க்ரஹ ஹோம மந்திரம். எந்த ப்ரஜாபதி எல்லோருக்கும் சரீரத்தையும் பலத்தையும் கொடுத்தாரோ, மேலும் எல்லோரும் (தேவர்களும்) எவருடைய உத்திரவை ஸேவிக்கிறார்களோ, எவருக்கு அம்ருதம் நிழல்போல் ஸ்வாதீனமோ, மேலும் எவருக்கு மரணமும் ஸ்வாதீனமோ, அப்படிப்பட்ட அவருடைய ஸ்வரூபத்தை அறிந்து கொள்ள முடியாமல் வைத்திருக்கும் ப்ரஜாபதி தேவனுக்கு ஹவிஸ்ஸால் உபசாரம். ஹே மஹிமக்ரஹமே, அவருக்காக ஸோம ரஸத்தை க்ரஹித்து வைக்கிறோம். அப்படிப்பட்ட ப்ரஹ்மாவே உனது ப்ருத்விதான் மஹிமை என்ற க்ரஹம். செடி கொடிகளும் மரங்களும் உனது உருவம். அக்னி உனது தேஜஸ். ஹே க்ரஹமே, அந்த ப்ரஜாபதி தேவனுக்கு உன்னை ஹோமம் செய்கிறேன்.

अनुवाकः १८—आब्रह्मन्

இதில் ब्रह्मवर्चस् எனப்படும் அன்னஹோம மந்திரங்கள் உள்ளன. (இது ஸ்மார்த்த ப்ரயோகத்தில் ச்ராத்தத்தில் உபயோகப்படுகிறது. இதில் 10 மந்திரங்கள் உள்ளன.)

ப்ராஹ்மண ஜாதியில் பிறந்த புருஷனிடத்தில் வேதசாஸ்திரங்களை கரைகண்ட புத்ரன் பிறக்கட்டும். இந்த மந்திரத்தை சொல்லி உபஸ்தானம் செய்வதால் எல்லாம் ப்ராஹ்மணனிடத்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

திலும் வேத சாஸ்திர அறிவை சம்பாதித்ததாக ஆகிறது. அந்த மந்திர ஸாமர்த்தியத்தினால் ஸ்ருஷ்டியின் ஆரம்பத்தில் ப்ராஹ்மணன் வேத சாஸ்திர ஞானமுள்ளவனுகவும் நல்ல அனுஷ்டானம் செய்பவனுகவும் உண்டானுன்.

இந்த தேசத்தில் க்ஷத்ரியன் வில்லாளியாகவும், சூரனுவும், மஹாரதனுகவும் பிறக்கட்டும் என்று உபஸ்தானம் செய்வதால் க்ஷத்ரியனிடத்தில் சூரத்தனமும், மஹிமையும் வைக்கப்படுகிறது. அந்த மந்திர ப்ரபாவத்தால் சிருஷ்டி காலத்தில் க்ஷத்ரியன் வில்லாளியாகவும், சூரனுகவும், மஹாரதனுவும் பிறந்தான்.

கறவையுள்ள பசு என்று உபஸ்தானம் செய்யவும். பசுவினிடத்திலேயே பால் பெருக்கை வைக்கிருன். ஆகையினுல்தான் முன்பு பசு நல்ல பால் கொடுக்கக் கூடியதாக பிறந்தது.

காளை சுமை தூக்குவதாக இருக்கட்டும் என்று சொல்லுவதால் காளையினிடத்தில் வீரியம் வைக்கப்படுகிறது. ஆகையால்தான் முன்பு காளை சுமை தூக்குவதாக பிறந்தது.

வேகமாகச் செல்லும் குதிரைகள் பிறக்கட்டும் என்று சொல்வதால் குதிரையினிடத்தில் வேகத்தை வைத்தனர். ஆகையால் முன்பு குதிரை வேகமாகச் செல்லக் கூடியதாக பிறந்தது.

ஸர்வாங்க ஸௌந்தர்யமுள்ள ஸ்திரீ உண்டாகட்டும் என்று சொல்வதால் பெண்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

களிடத்தில் அழகை உண்டாக்குகிறது. ஆகை யால் பெண்மணி அழகாகவும், பிரியமுள்ளவளா கவும், யுவதியாகவும் முன்பு உண்டானாள்.

ரதத்தில் ஏறிக் கொண்டு யுத்தத்திற்கு செல் பவன் ஜயசீலனாக இருக்கட்டும் என்று சொல்வ தால் இந்த தேசத்தில் ரதத்தில் செல்லும் யுத்த வீரன் ஜயசீலனாகப் பிறக்கிறான். எங்கு இந்த யக்ஞம் நடக்கிறதோ அங்கு இவ்வாறு நடக்கு கிறது.

வாலிபன் சபையில் இருக்கத்தகுந்தவனாக உண்டாகட்டும் என்று சொல்வதால் எவன் வாலி பனாக இருக்கிறானோ அவன் சபைக்குத் தகுந்த வாலிபனாக இருப்பான். ஆகையால் யுவதிபோல் யுவாவும், எல்லோருக்கும் ப்ரிய பாத்ரமாகவும் அழகாகவும் இருப்பான்.

இந்த யஜமானனுக்கு வீரனான புத்ரன் பிறக் கட்டும் என்று சொல்வதால் இந்த யக்ஞம் செய்யு மிடத்தில் வீரனான புத்ரன் பிறக்கிறான்.

நாங்கள் விரும்பும் இடத்தில் விரும்பும் பொழுதெல்லாம் மழை பெய்யட்டும் என்று சொல்லுவதால் இந்த யக்ஞம் நடக்கும் இடத்தில் விரும்பும் போதெல்லாம் மழை பெய்கிறது.

மிகுந்த விளைச்சலையுடைய நெல் போன்ற ஓஷதிகள் நன்கு பலனைக் கொடுக்கட்டும் என்று உபஸ்தானம் செய்வதால், எங்கு இந்த யக்ஞம்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

நடக்கிறதோ அங்கு செடி கொடிகள் நன்கு பலனைத் தரும்.

இல்லாத பொருளை அடைவது யோகம் என்பதாகும். கிடைத்ததை வீணாக்காமல் நன்கு பாதுகாத்து அனுபவிப்பதுதான் க்ஷேமம் எனப்படுகிறது. யோக க்ஷேமம் எங்களுக்கு ஏற்படட்டும் என்று உபஸ்தானம் செய்வதால், எங்கு இந்த யக்ஞம் நடைபெறுகிறதோ அங்கு மக்களின் யோக க்ஷேமம் நல்ல முறையில் ஏற்படுகிறது.

अनुवाकः १९—आक्रान वाजी

இதில் அச்வத்தின் அனுமந்த்ரண மந்திரம் கூறப்படுகிறது. இந்த குதிரை ப்ருத்வியை சுற்றிவந்து பூமிக்கு அக்னியை நிர்வாஹகனாக ஆக்கியது. இது போல் அந்தரிக்ஷத்தை சுற்றி வந்து வாயுவை அதற்கு நிர்வாஹகனாக ஆக்கியது. மேல் உலகைச் சுற்றிவந்து சூரியனை அதற்கு நிர்வாகியாக ஆக்கியது. ஹே குதிரையே, அக்னி, வாயு, சூரியன் இவர்கள் உனக்கு ஸஹாயம் செய்பவர்கள். ஆகையால் நான் உன்னை தொடுகிறேன். நீ எனது யக்ஞத்தை நன்கு முடித்துக் கொடு. ஹே அச்வமே, நீ ப்ராணன், அபானன், வ்யானன், இவைகளை திடப்படுத்துகிறாய். ஆகையால் எனது ப்ராணாபான வ்யானன்களை திடப்படுத்துவாயாக. ஹே அச்வமே, நீ கண், காது, ஆயுஸ்ஸாக இருக்கிறாய். ஆகையால் எனது கண், காது, ஆயுஸ்ஸை நிலைக்கச் செய்,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

अनुवाक: २०—जज्ञिबीजं

இதில் அன்ன ஹோம மந்திரங்கள் உள்ளன. இதன் பொருள்—நெல் முதலிய தான்யங்கள் முளைக்கக்கூடியதாக இருக்கட்டும். பர்ஜன்ய தேவன் மழை பொழிபவனாக இருக்கட்டும். பயிர் விளைந்து முதிர்ச்சி அடையட்டும். செடிகள் நல்ல பலனை அளிக்கட்டும். இப்பூமி ஸுகமாக சஞ்சரிக்கக் கூடியதாக இருக்கட்டும். அக்னி பகவான் சுகமாக உபசரிக்கக் கூடியவராக இருக்கட்டும். அந்தரிக்ஷலோகம் வால்நக்ஷத்ரம் போன்ற உத்பாதம் இல்லாமல் இருக்கட்டும். த்யுலோகம் தைவிகமான உபத்ரவ மில்லாமல் இருக்கட்டும். சூரியன் சுகமாக ஸேவிக்கக் கூடியவராக இருக்கட்டும். அஹோராத்ரங்களும் எப்பொழுதும் போல் இருக்கட்டும். அர்த்தமாஸங்கள் (½) 15 நாட்கள் உள்ளதாகவும், மாஸங்கள் 30 நாட்கள் கொண்டதாகவும் இருக்கட்டும். ருதுக்கள் அந்தந்த காலத்தின் லக்ஷண முள்ளதாக இருக்கட்டும். வருடம் சாந்தமாக ப்ரஜைகளுக்கு உபத்ரவமில்லாமல் இருக்கட்டும். 15 மந்த்ரங்கள் அன்ன ஹோமத்திற்கு உறியவை.

अनुवाक: २१—आग्ने योऽष्टाकपालः

இதில் யாகத்திற்குரிய அச்வத்திற்கு ரோகாதிகள் ஏற்பட்டால் அதற்கு ப்ராயிச்சித்தமாக செய்ய வேண்டிய இஷ்டிகள் கூறப்பட்டுள்ளது. அச்வத்திற்கு ஸந்தாபகரமான (உஷ்ணஸம்பந்த

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

மான) ரோகம் ஏற்பட்டால் ஆக்னேய புரோடாச யாகம். ஸோம தேவதாக சரு யாகம், ஸவித்ரு தேவதாக புரோடாச யாகம் செய்யவும். ரோகம் நீங்கும். அச்வத்திற்கு தோல் வியாதி ஏற்பட்டால் பூஷ தேவதாக சரு யாகம் செய்தால் ரோகம நீங்கிவிடும். உபத்ரவம் செய்யும் தேவதைகளின் பிடிப்புக்குள்ளானல் ருத்ர தேவதாக சருயாகம் செய்தால் அந்த உபத்ரவம் நீங்கும். அச்வம் தான் இருக்க வேண்டிய இடத்திற்கு வரவில்லையானல் வைச்வாநர புரோடாச யாகம் செய்யவும். அச்வம் ஸூத்யா தினத்தன்று வந்து சேரும். அச்வமேதக் குதிரை பெண் குதிரையை நினைத்தால். அது பாபமாகும். அதற்கு ப்ராயச்சித்தமாக அம்ஹோமுக் அக்னி: தேவதை புரோடசம் ஹவிஸ் என்ற யாகம், ஸூர்யன் தேவதை, பால் ஹவிஸ் என்ற யாகம், வாயுதேவதை ஆஜ்யம் ஹவிஸ் என்ற யாகம் என் மூன்று யாகங்களால் பாபம் நீங்கும்.

अनुवाकः २२—अग्नयेऽंहोमुचे

இதில் 10 ஹவிர்யாகங்கள் சொல்லப்படுகின்றன. பாபத்தை போக்குவதற்காக ம்ருகாரேஷ்டி: என ஓர் இஷ்டி விதிக்கப்பட்டுள்ளது. அதைப் பின்பற்றி தொடர்ந்தாற்போல் இந்த யாகங்களை செய்ய வேண்டும். இவைகளிலும் பாபத்தை போக்கவல்லவர்கள் தேவதைகள். ஆகையால் பாபம் நீங்கி யஜமானன் சுத்தனுவான். 10 யாகங்கள் பின்வருமாறு;

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

1) अंहोमुक् பாபத்தை போக்கவல்ல அக்னி தேவதை 8 கபால புரோடசம் ஹவிஸ்.

2) பாபத்தை போக்கவல்ல இந்திரன் தேவதை 11 கபால புரோடாசம் ஹவிஸ்.

3) பாபத்தை போக்கவல்ல மித்ராவருணர் தேவதை ஹவிஸ் आमिक्षा.

4) பாபத்தை போக்கவல்ல வாயு, ஸவிதா தேவதைகள் சருஹவிஸ்.

5) பாபத்தை போக்கவல்ல அச்வினி தேவர்கள் தேவதை வறுத்தயவை ஹவிஸ்.

6) பாபத்தை போக்கவல்ல மருத்துக்கள் தேவதை 7 கபால புரோடாசம் ஹவிஸ்.

7) பாபத்தை போக்கவல்ல விச்வேதேவர்கள் தேவதை 12 கபால புரோடாசம் ஹவிஸ்.

8) அனுமதி தேவதை சரு ஹவிஸ்.

9) வைச்வாநராக்னி தேவதை 12 கபால புரோடாசம் ஹவிஸ்.

10) பாபத்தை நீக்கும் த்யாவாப்ருத்வீ தேவதை 2 கபால புரோடாசம் ஹவிஸ். இ பத்து யாகங்கள் ம்ருகாரேஷ்டியுடன் சேர்த்து செய்ய வேண்டும்.

अनुवाकः २३—अग्नये समनमत्

இதில் ஸந்நதி ஹோமம் எனப்படும் அன்ன ஹோம மந்திரங்கள் உள்ளன. 10 மந்திரங்கள் உள்ளன. மந்திரத்தின் பொருள்— எல்லா யஜ

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

மானர்களும் அக்னிக்கு சுச்ரூஷை செய்தனர். ப்ருதிவிக்கும் சுச்ரூஷை செய்தனர். அந்த அக்னி ப்ருத்வியோடுகூட எந்த முறையில் அந்த யஜமானனுக்கு உபகாரம் செய்தாரோ, அதேபோல் எனக்கு தேவர்கள் செய்த நல்ல சுப மான உபகாரங்கள் கிடைக்கட்டும், யஜமானன் வாயு பகவானுக்கும் அந்தரிக்ஷத்திற்கும் சுச்ரூஷை செய்தார். வாயு அந்தரிக்ஷத்துடன் சேர்ந்து யஜமானனுக்கு உபகாரம் செய்தாரோ, அதேபோல் தேவர்கள் செய்த உபகாரம் எனக்கு கிடைக்கட்டும். ஸூரியனுக்கும் த்யுலோகத்திற் கும் சுச்ரூஷை செய்து யஜமானன் த்யுலோகத் தோடு ஸூரியன் உபகாரம் செய்தான். அப்படிப் பட்ட உபகாரம் எனக்கு கிடைக்கட்டும். யஜமா னன் சந்திரன், நக்ஷத்ரங்கள், வருணன், ஜலம், ருக்குகள். ஸாம கானம், யஜுர் மந்திரங்கள் ப்ராஹ்மண, க்ஷத்ரியன், ராஜா, ப்ரஜை, ரதம், குதிரைகள், ப்ரஜாபதி, பஞ்ச பூதங்கள் இவர் களுக்கு சுச்ரூஷை செய்த யஜமானனுக்கு ஸூரியன் த்யுலோகத்தோடும், சந்திரன் நக்ஷத் ரங்களோடும், வருணன் ஜலங்களோடும், ஸாம கானம் ருக்குகளுடனும், ப்ராஹ்மணன் க்ஷத்ரிய னோடும், ராஜா ப்ரஜைகளோடும், தேர் குதிரைக ளுடனும், ப்ரஜாபதி ் பூதங்களுடன் எப்படிப் பட்ட உபகாரம் செய்தனரோ, அவையெல்லாம் எனக்கு மங்களகரமான உபகாரங்களாக வந்து சேரட்டும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

अनुवाकः २४—ये ते पन्थानः

அத்வர்யு இந்த மந்திரங்களை யஜமானனுக்கு சொல்லி வைக்கவும். இதன் பொருள் ஹே ஸவித்ரு தேவனே, உனது எந்த மார்கங்கள் அந்தரிக்ஷத்தில் புழுதியில்லாமல் இருக்கின்றனவோ, சுலபமாகச் செல்லக்கூடிய அந்த மார்க்கத்தின் வழியாக ;வந்து இந்த கர்மாவில் எங்களை ரக்ஷிப்பாயாக. மேலும் எங்களை இவன் சிறந்த யஜமானன் என்று தேவர்களிடம் சொல்வாயாக. नमोऽग्नये —என்ற மந்திரத்தால் உபஸ்தானம் செய்யவும். பூமியில் வஸித்துக் கொண்டு ஜனங்களுக்கு ப்ரீதியை அளிக்கும் அக்னி பகவானுக்கு நமஸ்காரம். அந்த அக்னி இந்த ய்ஜமானனுக்கு உத்தம லோகத்தை கொடுக்கட்டும். அந்தரிக்ஷத்தில் வஸித்து லோகத்தை த்ருப்திபடுத்தும் வாயு பகவானுக்கு நமஸ்காரம், அப்படிப்பட்ட வாயு பகவான் இந்த யஜமானனுக்கு உத்தம லோகத்தை கொடுக்கட்டும், த்யுலோகவாஸியான லோகத்தை த்ருப்தி படுத்தும் சூரியனுக்கு நமஸ்காரம். அந்த சூரிய பகவான் இந்த யஜமானனுக்கு உத்தம லோகத்தை கொடுக்கட்டும்.]

अनुवाकः २५—यो वा अश्वस्य

இதில் அச்வம் ஸர்வஜகத்ரூபமாக துதிக்கப்படுகிறது. விராட்ரூபத்தில் அச்வோபாஸனம் கூறப்பட்டுள்ளது. எந்த மனிதன் யாகயோக்யமான அச்வத்தின் சிரஸ் முதல் எல்லா அவயவங்களையும் விராட்ஸ்வருபத்தின் அவயவமான உஷ:

கி—8 A

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

காலம் முதலிய வடிவில் உபாஸனம் செய்கிருனே அவன் உஷ: காலம் என்ற விராட்ஸ்ரூபத்தின் ஸிரஸ் முதலிய அவயவங்களோடு கூடியவனுக யாக பலனை அடைய தகுதியுள்ளவனுக ஆகிருன். உபாஸனத்திற்கும் யக்ஞானுஷ்டானத்திற்கும் சமபலன் என்று அச்வமேதத்தை புகழ்வதற்காக 5ம் காண்டத்தில் கூறப்பட்டுள்ளது. அச்வமேத யாகம் செய்தவனும் அறிந்தவனும் ப்ரஹ்மஹ த்யா பாபத்திலிருந்து விடுபடுகிருன் என்றவாறு. அச்வத்தின் எந்த அவயவத்தை விராட் ஸ்வரூபத் தின் எந்த அவயவமாக தியானிக்கவேண்டும் என்பதை விளக்குகிறது இந்த அனுவாகம். யாக யோக்யமான அச்வத்தின் சிரஸ் உஷ: காலமாகும்.

அச்வத்தின் கண் — சூரியனுகும். அச்வத்தின் ப்ராணன் வெளியில் சஞ்சரிக்கும் வாயுவாகும். அச்வத்தின் காதுகள் சந்திரனுகும். அதனு டைய கால்கள் நான்கு திசைகளாகும். அதனு டைய விலா எலும்புகள் தென் கிழக்கு முதலிய அவாந்தர திசைகள். அதனுடைய கண் மூடுதல்; திறந்தல் இரண்டும் அஹோராத்ரங்கள் ஆகும். அதனுடைய கை கால் சுக்லபக்ஷ, க்ருஷ்ண பக்ஷங்களாகும். அதனுடைய பர்வ ஸந்திகள் கணுக்கள் (மூட்டுகள்) சித்திரை முதலிய மாதங் களாகும். குளம்பு முதலியன வஸந்தாதி ருதுக் களாகும்.

அதனுடைய நடு உடல்பாகம் ஸம்வத் ஸரகால ரூபமாகும். அதனுடைய கேசங்கள் சூரிய கிரணங்களாகும், அச்வத்தின் பளபளப்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

யான ரூபம் கிருத்திகாதி நக்ஷத்ரங்கள்; சொல்லப் படாத அவயவங்கள் ப்ருஹஸ்பதி, சுக்ரன், த்ருவம் போன்ற க்ரஹ நஷத்ரங்கள் அதனுடைய மாம்ஸ பாகம் ஆகாயமாகும். அதனுடைய சிறு ரோமங்கள் ஒஷதிகளாகும். அதனுடைய நீண்ட வால் மயிர்கள் மரங்களாகும். அதனுடைய முகம் உலகப்பிரஸித்தமான அக்னியாகும். வாயைத் திறத்தல் வைச்வானரன் என்ற தேவதை யாகும். அதனுடைய வயிறு ஸமுத்ரமாகும். அதனுடைய மலங்கழிக்கும் பாகம் அந்தரிக்ஷ லோகமாகும். அதனுடைய இரு அண்டங்களும் த்யாவா பிருத்வி என்ற லோகத்வயமாகும். அதனுடைய ஆண் குறி ஸோமரஸத்தை பிழியும் கல்லாகும்.

அதனுடைய ரேதஸ் ஸோமரஸமாகும். அது கோட்டுவா விடுதல் மின்னலாகும். அதனுடைய சத்தத்துடன் உடலசைத்தல் இடி யாகும். அதன் மேஹனம் செய்தல் மழையாகும். அதனுடைய கனைப்பு - வேதமந்திரமாகும். அச்வத்தை ஸம்ஞபனம் (மரிக்கச் செய்தல்) செய்ததற்கு பிறகு महिमा என்ற ஸுவர்ண க்ரஹம் உபயோகப் பட்டதோ அது இரவு. அதேபோல ஸம்ஞபனத்திற்கு முன்பு ரஜதக்ரஹம் பகலாகும். இவை இரண்டு க்ரஹ்ங்கள் (ஹோம பாத்ரங்கள்) முன்பு சொன்னதுபோல் ஸம்ஞபனத்திற்கும் முன்னும் பின்னும் வ்யவஸ்தை செய்யப்பட்டுள்ளது. हयः, अर्वा, वाजी, अश्वः என்ற நான்கு சொல்லும் அச்வத்தின் அவாந்தர ஜாதியைக் குறிக்கின்றன்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அந்தந்த ரூபத்தில் தேவர் முதலியவர்களை சுமக்கின்றன.

இப்படிப்பட்ட விராட் ஸ்வரூபமான அச்வத்தின் பிறப்பிடம் ஸமுத்ரம்தான். அதிலிருந்து ஜகத்தன்கு உண்டாகிறது என்ற பெயரால் ஸமுத்ரம் என்பதற்கு பரமாத்மா எனப் பொருள். ஸமுத்ரம்தான் இதற்கு தூண்போல் நிலைத்து நிற்பதற்கு காரணமாகும். இவ்வாறு உபாஸிப்பவன் பாபம் நீங்கி விராட்ஸ்வரூபத்தை அடைகிறான். இது க்ரமமுக்திக்கு காரணமாகும். ஞானம் ஏற்பட்டவுடன் விராட்ஸ்வரூபத்தையும் விட்டுவிட்டு பரமாத்மாவோடு ஒன்றாகக் கலக்கிறான். இதுதான் ஜீவப்ரஹ்மைக்யம் என்ற மோக்ஷமாகும்.

संहिताभाग: समाप्त:—शुभमस्तु

ओं शान्ति: शान्ति: शान्ति:

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

1. ஸ்துதிகுஸுமாஞ்ஜலி:
2. க்ஷேத்திராடனம் பாரதம்
3. லீலாவிபூதிகள் மூன்று பாகங்கள்
4. விவாஹம் 3 பாகங்கள்
5. கிருஷ்ண யஜுர்வேத ஸாரம் 16 பாகங்கள்
6. கபர்திகாரிகை
7. ஸ்ரீ மஹாகணபதி ஹோமம்
8. மஹாம்ருத்யுஞ்ஜய ஹோமம்
9. புருஷ ஸூக்த ஹோமம்
10. ஸ்ரீ மஹாஸுதர்சன ஹோமம்
11. ஸ்ரீ ஸூக்த ஹோமம்
12. ஸ்ரீ சண்டி ஹோமம்
13. ச்ரௌத ஸ்மார்த்த கர்மாக்கள் சுருக்கம்
14. ஸ்ரீருத்திரம் ஜடை
15. மந்த்ரப்ரச்னம்
16. ஸ்ரீருத்திரம் சமகம் கனம்
17. க்ருஷ்ண யஜுர்வேத ஆபஸ்தம்ப ஸூத்ர ஸம்ஸ்கார 47 புத்தகங்கள்

மேற்கண்ட புத்தகங்கள் கிடைக்கும் இடம் :

ஸ்ரீ அ. சுப்பராமன்,
'மஹரிஷி கார்டன்',
18A/9, 5வது கிராஸ் தெரு, சி.ஐ.டி. காலனி,
மயிலாப்பூர், சென்னை - 600 004.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi